www.tamilarangam.net

# ஈழம்



சிறப்பு மலர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நவம்பர் 15

## நினைவாக...

கி. பி. அரவிந்தன்



சற்றே .....
என்னைக் கவனியுங்கள்.
மலைகளில் உரமாய்,
தேநீரில் இரத்தமாய்,
1 ''லயன்''களின் சுவர்தோறும்,
புகைபடிந்த கருமைகள்.
மங்கிய ஒளியின்,
சிம்னி விளக்குகள்.
பனிப்படலங்களை.
ஊடுருவி... ...,
எக்காள ஒலிகள்.

வயல்வெளிகள் எங்கும்
தலைநிமிரும் நெற்பயிர்கள்,
2 ''வசந்தன் கூத்தின்''
நாயகர்கள் ஆட்டம்,

என்னை துன்பம்......

இயற்கையின் சீற்றம்,
இராணுவத்தான் முற்றுகை,
உணவுக்காய் ஏக்கம், ...
இருந்தும்......
வசந்தக் கூத்துகள்
இவனே நண்பன்:

அதோ......
பனை உச்சிகள்.
பனங்காட்டு சலசலப்பு.
ஓலைகள் உராய்விலும்,
''அக்கினி குஞ்சுகள்.''
இவனும் நண்பனே

அவற்றுக்கும் அப்பால்.......,
அலைகளின் சீற்றம்.
3 ''முரல்'' களின் துள்ளல்.
4 ''அம்பா'' பாடல்களில்,
சோகம் தொலைத்து,
''பரணி'' பாடும்
ஏலேலோ பாடகர்கள்.

''ஆறுகள்
முன்னோக்கி பாய்கின்றன''...
நண்பர்கள் தோழர்கள்....
அனைவரும் ஒன்றாய்.
அடர்ந்த மலைகளின்
இருட்டில் இருந்து,
தே நீர் கரங்களில்
விலங்குகள் கழற்று.

பனி மலைகளில்
உச்சிகள் பிளந்து,
கலவியை தொடங்கு
சக்தியை உமிழ்.
உளுத்த மாளிகையின்
இடுக்குகள் எங்கணும்,
ஆல
விழுதுகள்.......
நம்பிக்கையுடன்
எழு........

1. தோட்டத் தொழிலாளருக்கு அமைக்கப்பட்டிருக்கும் வீடுகள்
2. கிழக்கு மாகாணமான மட்டக்களப்பின் பாரம்பரிய கூத்துவகை
3. மீன்வகைகளில் ஒன்று, கூரான மூக்கை உடையது, தண்ணீரின் மேல் பாய்ந்து செல்லும்.
4. மீனவர் தொழிற் பாடல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழம்

# எதிரொலி

ஈழப்புரட்சி அமைப்பின் வெளியீடு

மலர் : 1 இதழ் : 12

15...04...1986

சிறப்பு மலர்

அன்பளிப்பு : 5/- ரூபாய்

ஓராண்டு இடை வெளியின்பின் ஈழம் இதழ் வெளிவருகின்றது நண்பர்கள் தோழர்களிடம் மன்னிப்பைகோருகின்றோம். இதழ் வெளி வராமைக்கு அக புறநிலை காரணங்கள், உண்டு. திம்பு பேச்சு வார்த்தை தொடர்ந்தபோது இதழை தாமதப் படுத்த வேண்டியிருந்தது! அரசியல் போக்கின் தெளிவிற்காய் காத்திருக்க வேண்டியிருந்தது! பின்னைல் பொருளாதார பற்றுக்குறை **ஆக்கங்களில் சுணக்கம்** இடைவெளிக்கு காரணமாயின. இந்த இடைவெளியில் நிகழ்வுகள், திருப்பங்கள், சிக்கல்கள் இவ்விதழ் முடிந்தவரை இவைகளை பதிவு செய்துள்ளது. இது 12வது இதழ் எனும் காரணத்தால் சிறப்பு இதழ் எனும் முத்திரையையும் பெறுகின்றது.

1986 ஜனவரி 3 நமது இயக்கமான ஈழப்புரட்சி அமைப்பிற்கு 10 ஆண்டுகள், 1975 ஜனவரி 3 இல் கருவெடுத்த நமது இயக்கம் இன்று 10ம் ஆண்டு வளர்ச்சியை உட்கொண்டு உருவெடுத்து தன் பயணத்தை தொடர்ந்து கொண்டு இருக்கிறது. ஈரோஸ் தோழர்கள் தங்கள் பத்தாண்டு செயற்பாடுகளை மதிப்பீடு செய்தனர். சிந்தனைகளை பகிர்ந்து கொண்டனர். நமது சாதனைகளை புரிய முடிகிறது. பெருமிதமாகவும் இருக்கின்றது.

நிராகரிக்கப்பட்ட அந்த மலையகமக்களை உலக அரங்கு அறியும் மக்களாய், எழுச்சி கொண்ட மக்களாய் மாற்றிய எமது அரசியல் நோக்கு, செயற்பாடு.

குடா நாட்டிற்குள் முடங்கிப்போய்க் கிடந்த போராட்டமையத்தை தென் ஈழம் நோக்கி நகர்த்திய பாங்கு.

அரசு இயந்திரங்களை முடங்கச் செய்யும் பொருளாதார இலக்குகளை நோக்கிய, இராணுவ தந்திரோபாயத்தை ஏற்படுத்தி வெற்றிகரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் விதம்.

மார்க்ஸியத்தை ஈழப் போராட்டத்துடன் இணைத்ததிலும், தேசியவாதிகளை மார்க்ஸியத்தில் 'மனம் தோய்ந்தவன் நான்' என வாக்குமூலம் கொடுக்க வேண்டிய சூழலை உருவாக்கியதிலும் நாம் கடைப்பிடித்த தத்துவார்த்த உறுதிப்பாடு.

உலக அரங்கில் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களான முற்போற்கு சக்திகளுடன் ஈழப் போராட்டத்தை அடையாளப்படுத்தியதிலும் நாம் கொண்டிருந்த அக்கறை.

நம் மரபு சார்ந்த மூலப் பொருட்களைக்கொண்டு உற்பத்தியை ஊக்கப்படுத்துவதிலும், உற்பத்தி செய்வதிலும் எமது தொழில் நுட்பத்தை வளர்த்தெடுப்பதிலும் ஆர்வம் கொண்ட செயற்பாடுகள்.

மக்களே வரலாற்றை படைக்கின்றார்கள். என்பதை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்கள். அணிதிரட்டல்கள்.

எமது பாரம்பரிய கலை வடிவங்களை நவீன உத்திமுறைகளுடன் புரட்சிகரமாக்கிய எமது கலை இலக்கிய வெளிப்பாடுகள்.

இவைகளும் இன்ன பிறவுமான பல செயற்பாடுகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டன. எமது இந்தச் செயற்பாடுகளுக்கும், முன்னெடுப்புகளுக்கும் அயராது உழைத்ததில் அர்ப்பணித்ததில் இன்னல் பலகோடி எதிர்த்தே வந்த போதும் அவற்றை எதிர்கொண்டதில் வீரம் செறிந்த ஈழப் போராட்டத்தை வடிவமைத்ததில் மறைந்த எம் தோழர்களை நாம் இவ்வேளையில் நினைவு கொள்கிறோம், ஊக்கம் கொள்கின்றோம். இத்தோழர்களின் விபரங்கள் உள்ளே இடம் பெறுகின்றன. இவ்விதழை அர்த்தப் படுத்துகின்றன.

தொடர்பு : ஈழம்
த. பெ. எண் 2356
சென்னை - 600 024.

வடிவமைப்பு : மாரீஸ்

அச்சகம் : பிளேஸ் பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 020.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாபெரும் சுமையைத் தோளில் தாங்கி இழப்புக்களுடனும், துயரத்துடனும் அதே வேளையில் உறுதியுடன் ஆழப்பதிவுகளை ஏற்படுத்திக் கொண்டு வெற்றியை நோக்கிய பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. போராட்டம் எங்கே செல்கிறது என்பதை தெளிவு படுத்த வேண்டியிருக்கின்றது.

சிறிலங்கா அரசானது தனது எஜமானர்கள் யார் என்பதனை திட்டவட்டமாய் வெளிப்படுத்தியுள்ளது சர்வதேச ஏகாதிபத்திய எண்ணம் கொண்டோரின் இராணுவ ஆலோசகர்களும், கூலிப் பட்டாளங்களும் சிறிலங்காவில் முகாமிட்டுள்ளனர் இராணுவத் தளபாடங்கள் குவிக்கப்பட்டு தமிழ்பேசும் மக்களை இராணுவ அடிமைப் படுத்தலுக்கு உள்ளாக்குவதற்கு, தம் முயற்சிகள் அனைத்தையும் முனைப்படுத்தியுள்ளனர். விமானக் குண்டுவீச்சின் மூலம் ஈழவர்களை அச்சத்துக்குள்ளாக்கி தம் இராணுவ வலிமையை நிரூபிப்பதில் இறங்கியுள்ளனர். கடந்த காலத்தை விடவும் தற்பொழுது எதிரியின் வலிமையானது பெருப்பிக்கப்பட்டுள்ளது.

வரலாற்று தழும்புகளை மீறி, தமிழ்பேசும் மக்களுடைய ஒற்றுமையின் பால் வெளிக் கொணரப்பட்ட ஈழத் தேசிய விடுதலை முன்னணியானது கடந்த காலத்தில் ஈழப் போராட்டத்தினது தீர்மனகரமான பாதையை நிர்ணயிப்பதில் கணிசமான பங்கினை ஆற்றியுள்ளது. ஈழப் போராட்டத்தினது போராடும் சக்திகளுக்கு அரசியல் அந்தஸ்தை ஈட்டிக் கொடுத்ததில், ஈழவர்களின் போராட்டத்தை திசை திருப்ப முனைந்த பிற்போக்கு தடைகளை முறியடித்ததில் வரலாற்றுச் சான்றுகளை ஈட்டித் தந்துள்ளது. ஆயினும் போராடும் அமைப்புகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள், மோதல்கள் ஈழத் தேசிய விடுதலை முன்னணியை பலவீனப் படுத்தியுள்ளது என்பதனை நாம் சுட்டிக் காட்ட வேண்டியவர்களாயுள்ளோம்.

ஈழப் போரராட்டத்தினது தற்போதையநிகழ்வுகளை பரிசீலிப்பின், இனப்படுகொலையைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற சடங்கு முறை திம்புவுடன் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது; ஸ்ரீலங்கா சோவனிச அரசினது ஏமாற்றுத் தந்திரோபாயங்களுக்கு வழுக்கி விழாது ஈழவரை இன்று பிரதிநிதித்துவப் படுத்துகின்ற போராடும் இயக்கங்கள் தம்மைக் காத்துக் கொண்டன. இவை தமிழ் பேசும் மக்கள் ஏமாறத் தயாரில்லை, போராடிக் கொண்டிருக்கின்றனர்-- என்பதனையே காட்டி நிற்கிறது.

**ஆயினும் மையப்படுத்தப் பட்ட போராட்ட அம்சங்கள், எதிரியை முற்றாக நிலைகுலைக்கவல்ல அரசியல் நடவடிக்கைகள் ஆகியன குறையோடு காணப்படும் எமது போராட்டத்தை மழுங்கடிக்க, திசை திருப்ப அக, புற சக்திகள் முனையுமா கொழும்பில் ஆரம்பித்து பஹாமாசில் முனைப்பெற்று திம்புவில் நிறுத்தப்பட்ட பேச்சு வார்த்தை நாடகம் தொடரப்படுமா ? - இதனை எதிர் நோக்கி நாம் என்ன செய்ய வேண்டும் ஸ்ரீலங்கா அரசிற்கு தேவைப்படுகிற குறுகிய கால ஓய்வினை மீண்டும் அளிக்கலாமா ? இவை என்ன விளைவுகளைக் கொண்டிருக்கும் ? என்பன பற்றி நாம் அனைவரும் ஆழ்ந்து சிந்திப்போமாக !**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கணிப்பு

# 1983-85

**''முதலில் பேச்சு வார்த்தை !**
**அடுத்து அமெரிக்காவுடன் ஒப்பந்தம் !**
**இடையில் இந்தியா மீது குற்றச்சாட்டு !**
**பின் பேச்சுவார்த்தை முறியும் !!**
**இறுதியில், படுகொலைகள் தாண்டவ மாடும் !!''**

## இவைதான் ஜெயவர்தனவின் சாகசங்கள்

டிசம்பர் மாத 'இந்தியா டுடே' (India Today) சஞ்சிகைக்கு, இராணுவத் தீர்வுக்கு தயாராகி வருகிறோம் என ஜயவர்தன பேட்டியளித்து, மீண்டும் ஒரு இரத்தக்களரிக்கு அணிவகுத்திருப்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஈழக் கோரிக்கையானது, திம்புவாயிலாகவும், டெல்லி ஊடாகவும் சர்வதேசமெங்கும் பரப்பப்பட்டு ஒரு பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இவ்வேளையில், ஜயவர்தனவின் 'போர்க்குரல்' மீண்டும் ஒலித்திருக்கிறது. களம் நின்று போராடும் போராளிகளுக்கு பழகிப்போன இந்தக் குரல் அதிர்ச்சியைக் கொடுப்பதாயில்லை. இங்கு தரப்போகும் கணிப்பீடானது இந்த நேரத்தில் குறிப்பாக 84இலும் 85இலும் ஜயவர்தன இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் எந்தத் துறையில் ஆர்வம் காட்டி வந்துள்ளார் என்பதை தோலுரித்துக் காட்டுவதாயிருக்கும். ஜயவர்தனவின் அரசியல், இராணுவ நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களை மட்டுமல்லாமல் இந்து சமுத்திரத்தையே அச்சுறுத்து மளவுக்கு எந்தஅளவுக்குவியூகம் கொண்டிருக்கிறதென்பதை இங்கு காணலாம். அதே வேளை இவரது தந்திரோபாயங்களுக்கு ஆட்படாது ஈரோஸானது எவ்வாறு போராட்டத்தை முன்னெடுத்துள்ளதென்பதையும் இங்கு நாம் சுட்டிக் காட்டவுள்ளோம்.



நன்றி: ஆனந்தவிகடன்

### *84 - இல் பேச்சுவார்த்தை ஆரம்பம்*

83 கலவரத்தை அடுத்து, இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் பங்கு தவிர்க்க முடியாததாக தோற்றம் பெற்றிருந்தது. இந்தப் பின்னனியில் சர்வகட்சி மாநாடு 83இல் கூடி, வழமை போலவே தீர்வெதையும் கொடுக்காது முறிந்து போனபின் 84இல் மீண்டும் உயிர்த்தெழுந்திருந்தது.

ஜனவரி 10ம் திகதி ஜப்பானிய பௌத்த பிக்குகளின் பிரார்த்தனையுடன் ஆரம்பித்து இருநாட்கள் நடந்த மாநாட்டில், ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி, மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழரசுக்கட்சி, தமிழ்காங்கிரஸ். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், ஆகிய அரசியல் அமைப்புகளும், பௌத்த மகா சங்கம், சிங்களச் சங்கங்கள் இஸ்லாமியச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இந்த மாநாடு, அறிக்கை வெளியிடும் குழு ஒன்றை அமைத்து விட்டு ஒத்திவைக்கப் பட்டது.

ஜனவரி 25இல் மீண்டும் ஆரம்பித்த மாநாடு 'பயங்கரவாத' நடவடிக்கைகளையும் கலவரங்களையும் ஆராயவும், இனப்பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்ப்பதற்கு அமைப்பு வடிவம் ஒன்றை ஆராயவும் இரு தனித்தனிக் குழுக்களை அமைத்தது. இந்தக்குழுக்களுக்கு கட்சிகளினதும், அமைப்புகளினதும் பிரதிநிதிகள் அறிக்கை வடிவில் ஆலோசனைகள் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

இரண்டாவது மாநாட்டின் முடிவுகளுக்கிணங்க தமிழ் பேசும் மக்களின் கோரிக்கையான ஈழக் கோரிக்கையை ஆலோசனை வடிவில் வெளிப்படுத்துவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு முடியாது போயிற்று. இதனால் அவர்கள், தமிழ்க் காங்கிரசுடனும், இலங்கை தொழிலாளர் காங்கிரசுடனும், தமிழரசுக் கட்சியுடனும் இணைந்து கூட்டமைப்பொன்றை ஆக்கிக் கொண்டனர். இந்தக் கூட்டமைப்பின் சார்பாக, மாநாட்டில் ஆலோசனைகள் வழங்குவதற்கு தொண்டமான் பணிக்கப்பட்டார்.

பெப்ரவரி மாதம் 21இல் மீண்டும் மாநாடு ஜயவர்தன தலைமையில் ஆரம்பமானபோது ஒவ்வொரு கட்சிகளும், மத பீடங்களும் தமது அடிப்படைக் கருத்துகளை முன்வைத்தன. ஐக்கிய தேசியக் கட்சி, பன்முகப் படுத்தப்பட்ட நிர்வாக முறையை தான் தகுந்ததெனக் கூறியது. பௌத்த சங்கங்கள் தற்போதுள்ள ''மாவட்ட சபையே'' போது மென்றன. முஸ்லிம் சங்கங்கள் ''மாகாண சுயாட்சியே'' பாதுகாப்பானதென்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதேச சுயாட்சியே'' சிறந்ததெனக்கூறி வடக்கும் கிழக்கும் இணைந்த பகுதி ஒரே பிரதேசமாக கணிக்கப்பட வேண்டுமென முன்வைத்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எதுவித ஆலோசனையையும் கூறமறுத்ததைக் கண்ட ஜயவர்தன ''தீவிரவாத இயக்கத்தினர் தீர்வை விரும்புகிறார்களா? தமிழ் பிரதிநிதிகள் இவர்களுக்குப்பயந்தே ஐக்கிய இலங்கைக்குட்பட்ட தீர்வை தரமுடியாமலுள்ளனர்'' என பாராளுமன்ற விசேட கூட்டத்தில் பேசியிருந்தார். இந்தமாநாட்டுடன் முரண்பட்ட கருத்துகள் வெளிவரத் தொடங்கிய சூழ்நிலையில் மார்ச் 2-இல் மீண்டும் ஆரம்பித்த மாநாட்டில் தமிழர் பிரதிநிதிகளின் கூட்டமைப்பு சிலமுன் நிபந்தனைகளை முன்மொழிந்திருந்தது. மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டு மெனவும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டுமெனவும் இராணுவ வன்முறைகள் நிறுத்தப் பட வேண்டுமெனவும் நிபந்தனைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றை நிறைவேற்றினாலேயே, இனப்பிரச்சனைக்கு தீர்வு சாத்தியமென தமிழர் கூட்டமைப்பு வலியுறுத்தியது. ஆயினும் மாநாட்டு முடிவில், குடியுரிமை பிரச்சினை தீர்க்கப்படுமென்று மட்டுமே உறுதி அளிக்கப்பட்டது. அத்துடன் மாவட்ட சபைகளை அடிப்படையாகக் கொண்ட நகல் திட்டம் ஒன்றை தயாரிப்பதெனவும், பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தும் வகையில் செயற்படுவதெனவும் மாநாடு தீர்மானம் நிறைவேற்றியது. இத்தீர்மானங்களுடன் மே மாதம் வரை மாநாடு ஒத்திப் போடப்பட்டது நீண்டகால இடைவெளியை ஆட்சேபித்த தமிழ்ப் பிரதிநிதிகளை கணக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

லெடுக்காமல் மே ஒன்பதாம் திகதிக்கு மாநாடு தள்ளிவைக்கப்பட்டது.

## 84இல் அமெரிக்க ஒப்பந்தம்

பேச்சு வார்த்தையானது ஒரு புறம் நடந்து வருகையில் திரை மறைவில் அமெரிக்காவுடனுன உறவுகள் படிப்படியாக வளர்க்கப்பட்டு வந்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பார்வை திருகோண மலேயிலுள்ள எண்ணேக் குதம் மீது பாய்ந்தது.

திருகோணமலே மாவட்டத்தில் அமைந்துள்ள சீனன் குடாவிலேயே இந்தக் குதம் அமைந்திருக்கிறது. பிரித்தானியரால் 1972–1982 கால கட்டங்களில் நிர்மாணிக்கப்பட்ட இந்நிலேயம் ஒவ்வொன்றும் பத்து இலட்சம் லீற்றர். கொள்ளளவு கொண்ட 101 குதங்களே கொண்டுள்ளன. உலகில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்ருக விளங்கும் திருகோண மலே துறைமுகத்துக்கு மிக அண்மையிலேயே இக்குதம் அமைந்துள்ளது. இந்து சமுத்திரத்தின் ஆதிக்கத்துக்கு கேந்திரமுக்கியத்துவம் கொடுக்கும் இத்துறைமுகத்தை கைப்பற்றும் நோக்கிலேயே எண்ணேக் குதம் மீது கண் வைத்தது அமெரிக்கா.

82இல் கட்டிமுடிக்கப்பட்ட இந்த எண்ணேக் குதத்தை இலங்கை பெற்ரேலியக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்று குத்தகைக்குகொடுப்பதற்காக கேள்வி விட்டிருந்தது. அப்போது குத்தகைக்கெடுக்க விரும்பிய நாடுகளுள் ஆகக் கூடுதலான முதலீடு செய்ய தயாராயிருந்த நாடு இந்தியாவாகும். ஆயினும், இதைப் பொருட்படுத்தாது, சிங்கப்பூர், மேற்குஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய மூன்று நாடுகளின் தயவில் உருவாக்கப்பட்ட 'ஒயிலியம்' என்ற கூட்டுத்தாபனத்திடமே ஜயவர்தன இக்குதங்களே ஒப்படைத்தார். இக் கூட்டுத்தாபனத்தின் தாயகம் அமெரிக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

'இந்தியாவிற்கு எண்ணேக்குதங்கள் ஏன் கொடுக்கவில்லே' என பாராளுமன்றத்தில் சரத் கேள்வி தொடுத்த போது 'பாதுகாப்புக் காரணங்களுக்காகவே கொடுக்கவில்லே' என்ருர் சிறில் மத்தியூ.

ஜயவர்தனவின் அமெரிக்கச் சாயல் போக்கை 'இந்தியாவுக்கான அச்சுறுத்தல்' என அன்றைய பாரதப்பிரதமர் இந்திரா காந்தி கண்டித்த சில நாட்களில் சுன்னுகத்துப் படுகொலேகள் தமிழ் நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தத் தொடங்கின.

## 84இல் இலங்கை - இந்திய எதிர்ப்பிரச்சாரங்கள்

28-03-84 அன்று காலே சுன்னுகம் சந்தைக்கருகில் வாகனத்தில் வந்த சிங்கள இராணுவம் திடீரெனச் சுட்டதில் குழுமியிருந்த மக்கள் அல்லோல கல்லோலப்பட்டனர். இந்த வெறிச் செயலுக்கு ஒரு பெண் உட்பட எட்டுப்பேர் ஸ்தலத்திலேயே பலியாஞர்கள். 50 பேருக்கு மேல் காயமடைந்தனர். இந்தச் செயல் முதலில் தமிழகம் எங்கணும் பரவி ஆர்ப்பாட்டம், கண்டனம், தீக்குளிப்பாக எதிர்ப்பு வடிவம் தாங்கியது. தமிழக முதலமைச்சரும் இப்படு கொலேகளேக் கண்டித்துப் பேசி கடையடைப்பு, ஹர்த்தாலிலும் தமிழகத்தை இறங்கச் செய்தார்.

தமிழகத்தில் ஏற்பட்ட இக்கொந்தளிப்பு, விரைவாக இந்தியப் பாராளுமன்றத்துக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. ''இலங்கையில் அப்பாவிகள் கொல்லப்படுவது இலங்கையின் உள்விவகாரமாக இருந்தாலும், இது தமிழகத்தின் அமைதியைக் குழப்புவதால் நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது'' என பாராளுமன்றத்தில் இந்திரா காந்தி பேசியிருப்பது கவனத்துக்குரியது.

இதே மாதத்தில், இந்தியாவின் இரண்டாவது பெரிய கடற்படை தளமாக விளங்கும் கொச்சின் தளத்துடன் இணேந்து செயற்படக் கூடியதாக திருவனந்த புரத்தில் புதிய விமானத்தளம் ஒன்றை இந்திய அரசு திறந்து வைத்த போது இலங்கை விமானப்படை முன்ஞள் தளபதி ஒருவர், 'திருகோணமலே எண்ணேக் குதம் சம்பந்தமாக எடுக்கப்பட்ட முன் எச்சரிக்கை' என அபிப்பிராயம் தெரிவித்திருந்தார். (30-4-84. ஈழநாடு)

இந்தியாவில் குறிப்பாக தமிழகத் தில் இலங்கை அரசுக்கெதிரான கோஷங்கள் முளேவிடத் தொடங்கிய போது அதற்குச் சோடை—போகவிடாது இலங்கையும் பதிலுக்கு இந்தியாவுக்கெதிரான வார்த்தைகளே அள்ளிவீசத் தொடங்கியது. இதற்கு முன்னின்றுழைத்தவர் இலங்கைப் பிரதமர் பிரேமதாசா என்ருல் அது மிகையாகா. இவரின் உழைப்புக்கு 30-03-84 திகதியிட்டு வெளிவந்த 'இந்தியாடுடே' சஞ்சிகையில் விடுதலே இயக்கங்கள் சில தமிழகத்தில் முகாம் அமைத்து பயிற்சியளித்து வருதாயும், இந்தியக்கரைகளிலிருந்து இலங்கைக் கரைக்கு வேகப்படகுகளில் சென்று தாக்குதல் தொடுப்பதாயும் எழுதப்பட்டிருந்தது. இக்கட்டுரையை ஆதாரமாகக் கொண்ட பிரேமதாசா இந்தச் சஞ்சிகையை கைநூலாகக் கொண்டு பிரச்சாரக்களத்தில் குறித்தார். இந்தியாவே தீவிரவாதிகளே வளர்த்துவிடுகிறது, இந்தியா இலங்கை மீது படையெடுக்கத் தயாராகிறது, என குற்றம் சுமத்தியபடி, பிரச்சாரத்தை முடுக்கிவிட்டார்.

இவ்வாறு பிரேமதாசா இந்தியாவுக்கெதிராக துடிப்போடு பிரச்சாரம் செய்த வேளே இந்திய அரசாங்கம் தெரிவித்த கண்டனத்துக்கு, 03-06-84 அன்று அவர் விட்ட பதில் அறிக்கை இந்த வரிகளே தாங்கி வந்திருந்தது. ''திருகோணமலே துறைமுகம் உட்பட எமது வளங்கள் மீது வெளிச்சக்திகள் அதிக கவனம் கொண்டுள்ளதை எம்மால் உணர முடியும். ஒரு நாட்டை நேரடித் தலேயீடின்றி மறைமுகமாக பலவீனப் படுத்த முடியும் என்பது எமக்குத் தெரியும். பிரிவினே சக்திகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் ஒரு நாட்டை பலவீனப்படுத்த முடியுமென்பதையும் நாம் அறிவோம்!''

இவ்விதம் இலங்கைக்கும்-இந்தியாவிற்குமிடையிலான விரிசல் அதிகரித்து வந்த அடுத்த சில மாதங்களில், இனப்பிரச்சினேயைத் தீர்ப்பதற்காக கூட்டிய சர்வகட்சி மாநாட்டை ஜயவர்த்தன குழப்புவதற்கான ஆயத்த வேலேகளில் ஈடுபடலாஞர்.

## 84இல் பேச்சுவார்த்தை முறிவு

பங்குனி மாதம் நடாத்தப்பட்ட மாநாடு மே ஒன்பதாம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்ட சுமார் ஒன்றரை மாதகாலம், மேலே எடுத்துக் காட்டியது போல் அமெரிக்க ஒப்பந்தங்களும், இலங்கை-இந்திய எதிர்ப் பிரச்சார நடவடிக்கைகளும் நடந்தேறிய பின்னர் இடைநிறுத்தப்பட்ட பேச்சு வார்த்தையை தொடரத் தொடங்கிஞர் ஜயவர்தன.



30—4—84 ஈழநாடு

**திருகோணமலே துறைமுகம் உட்பட எமது வளங்கள் மீது வெளிச்சக்திகள் அதிக கவனம் கொண்டுள்ளதை எம்மால் உணரமுடியும்- ஒரு நாட்டை நேரடி தலேயீட்டின்றி மறைமுகமாகப் பலவீனப் படுத்தமுடியுமென்பது எமக்குத்தெரியும்.**

**— பிரேமதாசா.**

இந்தப் பேச்சுவார்த்தைகளில் **தமிழர் விடுதலேக் கூட்டணியானது தனது அடிப்படைக் கோரிக்கையையே விட்டுக் கொடுக்கத் தீர்மானித்தது.** பேச்சுவார்த்தைகளின்போது 'ஈழம்' தவிர்ந்த கோரிக்கை எதையும் முன் வைக்கமாட்டோமென பிடிவாதம் கொண்டிருந்த அமிர்தலிங்கம், ஜி. பார்த்தசாரதி இந்தியாவிலுள்ளது போன்ற மாநில சுயாட்சி அமைப்பைப் பற்றி பேசும்படி ஆலோசனே கூறியதும் அடுத்த கணமே, **ஈழக் கோரிக்கையை ஒத்திவைத்து விட்டு சுயாட்சிக் கோரிக்கையை தூக்கிப் பிடித்தார்.**

கூட்டணியினரின் போக்கில் மாற்றம் வந்தபோதும் அதைப் பொருட்படுத்தாத ஜயவர்தன, 21-09-84இல் நடாத்திய சர்வகட்சி மாநாட்டுத் தொடரில் ஐக்கிய இலங்கைக்குட்பட்ட நீர்வுக்கு,

*1. இரண்டாவது சபை*

*2. பிரதேச சபை*

*3. மாவட்ட சபை*

*4. மாநகர, நகர சபைகள் கொண்ட அடிப்படைப் பரவலாக்கமே தீர்வாக முடியுமென அழுத்தமாகக் குறிப்பிட்டார்.*

அதிகாரமெதுவுமில்லாத இரண்டாவது சபையின் கட்டுப்பாட்டிலேயே ஏனேய சபைகள் அமையப்பெறுமென ஜயவர்தன இக்கூட்டத்தில் வியாக்கியானம் செய்திருந்தார்.

நீண்ட மாதங்களாக இழுபறியில் நடந்த பேச்சு வார்த்தைகள், இறுதியில், அதிகாரமெதுவுமில்லாத 'அதிகார சபைகளேயே' தீர்வாகத் திணிக்க முற்பட்ட போது, வடக்கையும், கிழக்கையும் ஒரே பிரதேசமாகக் கொண்டு மாநில சுயாட்சி கோரிய தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு முகத்திலறைந்தது போலிருந்தது.

இந்தச் சபைத் தீர்மானங்களே முற்ருக நிராகரித்து அமிர்தலிங்கம் அறிக்கை விட்டதும், கூட்டணி குறுக்கே நிற்பதால் இனப்பிரச்சினேயை தீர்க்க முடியாதுள்ளதென ஜயவர்தன அறிவித்துவிட்டு பேச்சுவார்த்தையை 26-12-84இல் வைபவரீதியாக முறித்து வைத்தார்.

ஜயவர்தன மாநாட்டை அவசர அவசரமாக முன்னின்று குழப்பிய போது, அவர் இனச்சங்காரத்துக்கு தயாராகிவிட்டார் என்பதை, வெளிப்படையாகவே காணமுடிந்தது.

## 84ல் அரசபயங்கரவாதம் ஆரம்பமானது.

மாநாடுகள் மெல்ல மெல்ல நகர்ந்து சென்ற காலங்களில் படிப்படியாக செய்யப்பட்டு வந்த இராணுவ தயாரிப்புகளே இங்கு சுட்டிக் காட்டிவிட்டு இராணுவம் மேற்கொண்ட அட்டூழியங்களுக்கு வருவோம்.

சர்வகட்சி மாநாடு ஆரம்பித்த அடுத்த மாதத்தில், பொலநறுவையிலுள்ள இளேஞர் பயிற்சி முகாமொன்றில் ஜயவர்தன சிறப்புரை ஆற்றும் போது, ''பயங்கரவாதத்துக்கு விரைவில் 'முற்றுப்புள்ளி''— அமெரிக்க பாணியில் 'தொண்டர் படை' யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படும்'' எனக் குறிப்பிட்டு இராணுவத் தயாரிப்பை குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதையடுத்து வடக்கு, கிழக்கில் எட்டுமாவட்டங்களில் இராணுவ இணேப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இவர்களிடம் இப்பகுதியிலிருந்த அரசாங்க அதிகாரிகளினதும், உதவி அரசாங்க அதிகாரிகளினதும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டன. யாழ்ப்பாணமும், மன்ஞரும், திருகோணமலேயும், மூதூரும் விசேட கவனத்துக்குரியதாக விளங்கின.

இதே மாதம் 'தேசியபந்தோபஸ்து அமைச்சு' என விசேட அமைச்சொன்று உருவாக்கப்பட்டு, லலித் அத்துலத் முதலி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவரே பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகவும் பிரமாணம் செய்யப்பட்டார். இந்த அமைச்சின் ஆளுகைக்குட்பட்ட 'தேசிய சுதந்திர பாதுகாப்பு நிதிப்பிரிவு' திறந்து வைக்கப்பட்டு அரச ஊழியரிடமிருந்தும், பெரும் முதலாளிகளிடமிருந்தும் பணவசூல்கள் இடம்பெற்றன.

இந்த நேரத்தில் தனது **'இராணுவத்திட்டம்'** எது என்பதைப் பற்றி லலித் பிரஸ்தாபித்திருந்தார். 'தீவிரவாதிகள் தமிழகத்தில் முகாம் அமைத்துப் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் பாக்கு நீரிணேயை பயன்படுத்தியே நாட்டுக்குள் வருகிருர்கள். இவர்களுக்குரிய ஆயுதங்களும், வெடிமருந்துகளும்

www.tamilarangam.net




THE EELANADU
NATIONAL TAMIL DAILY
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-12-84

சர்வகட்சிமாநாடு ஆலோசனை

கைவிடப்பட்டது!

(கொழும்பு)
சர்வகட்சி மாநாட்டுப் பிரேரணைகளை முற்றும் முழுதாகக் கைவிடுவதென்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

**தமிழர் விடுதலைக் கூட்டணியானது தனது அடிப்படைக் கோரிக்கையையே விட்டுக் கொடுக்கத் தீர்மானித்தது.**

அங்கிருந்துதான் வருகின்றன. இவர்களது விநியோக பாதையை துண்டிப்பதன் மூலமே தீவிரவாதிகளை வெற்றி கொள்ள முடியும்'.

இந்த இராணுவ திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அவர் முதலில் இந்திராகாந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்த 14-04-84இல் இந்தியா சென்றார். இந்திராவைச் சந்தித்த லலித் இலங்கை இந்திய கடற்படையினர் கூட்டாக பாக்கு நீரிணையில் கடல் கண்காணிப்புச் செய்ய வேண்டுமென கோரிக்கை விட்டார். ஆனால் இந்திரா இந்த வேண்டுகோளை அடியோடு மறுக்கவே மாற்று நடவடிக்கைக்கு தயாரானார் அத்துலத் முதலி.

**இந்தியாவிலிருந்து லலித் திரும்பியதும் 'கடல் கண்காணிப்பு வலயச்' சட்டம் நிறைவேற்றப்பட்டது.** இச்சட்டம் மன்னார் முதல், முல்லைத் தீவு வரையான கரையோர மீனவர்கள் கரையிலிருந்து 100 மீட்டர் தூரத்துக்கப்பால் மீன் பிடிக்கச் செல்லக் கூடாதென உத்தரவிட்டது.

இந்த உத்தரவை அடுத்து 19-04-84 அன்று வடபகுதி கடல் பரப்பை கண்காணிப்பதற்காக மூன்று விசேட ராடர் பொருந்திய பீரங்கிப் படகுகள் நவீன ஆயுதங்களுடன் ரோந்து நடவடிக்கையிலீடுபடுத்தப்பட்டன.

இவர்கள் கண்காணிப்புக்காக வந்ததும் முதலில் செய்த வேலை இராமேஸ்வர மீனவர் மீது தாக்குதல் தொடுத்ததுதான். தலை மன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடைப்பட்ட கடலில் மீன்பிடித்து வந்த இராமேஸ்வரம் மீனவர் மீது ஆரம்பத்தில் தாக்கியும், பின்னர் ஒன்பது பேருக்கு மேல் சுட்டுக்கொன்றும், 17 பேரைக் கைது செய்தும் இந்தக் கடற்படைப்பிரிவு கடற்போர் புரிந்தது.

கடல் கண்காணிப்பு இவ்விதமிருக்க பருத்தித் துறையில் வல்வெட்டித் துறையை மையமிட்டும் சுமார் 500 இளைஞர்கள் ஆண்களும் பெண்களுமாக குறுகிய நாட்களுக்குள் திட்டமிட்டு கைது செய்யப்பட்டனர். இவர்களை காங்கேசன் துறையில் வைத்து சரக்கு கப்பலில் ஏற்றி காலிப்பகுதியிலுள்ள பூசாமுகாமுக்கு கடத்திச் சென்றனர். 'பயங்கரவாதிகளைக் கொல்லக்கூடாது. அவர்களை பிடித்து தகவல்களையும் திட்டங்களையும் அறிய வேண்டும், அதுவே எமக்கு பயனுடையதாயிருக்குமென' அத்துலத் முதலி கூறிய வார்த்தைகளை இங்கு நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த வகைக் கைதுகள் மாதகல் கடற்கரையை அண்டியும் திட்டமிட்டு நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இளைஞர்களின் கைதுகள் நடந்து சுமார் ஒரு மாதத்தின் பின் வடபகுதிக் கடலில் ஊரடங்குச் சட்டம் (கடலடங்குச் சட்டம்) பிறப்பிக்கப்பட்டது. மாலை 4 மணி முதல் அதிகாலை 6 மணி வரை எவரும் கடலுக்குச் செல்லக் கூடாதென உத்தரவிடப்பட்டது. ஜூலை மாதத்தில் பாராளுமன்ற மூடாக ஒழுங்கு செய்யப்பட்ட 16 கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்ட மூன்று நவீன பீரங்கிப் படகுகளும் இந்தச் சட்டம் அமுலான போது வடகடலுக்கு அனுப்பி வைகைகப்பட்டன.

கடல்வலயம் அடுத்த கட்டத்துக்கு பலப்படுத்தப்பட்ட சூழ்நிலையில்தான் சாவகச் சேரிப் பொலிஸ் நிலையம் மீது பலத்த தாக்குதல் தொடுக்கப்பட்டு தரைமட்டமாக்கப் பட்டிருந்தது. இந்த தாக்குதலை தனது திட்டத்துக்கு சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டார் அத்துலத் முதலி. அவர் இத்தாக்குதல் பற்றி விடுத்த அவசர அறிவிப்பு மூன்று ஊகங்களை உள்ளடக்கியிருந்தது.

1. இத்தாக்குதல் 83 நிலையைப்போல் நாடுமுழுவதும் ஒரு கலவரத்தை உருவாக்கவே செய்யப் பட்டது.

2. இந்தக் கலவரச் சூழலைப் பயன்படுத்தி அயல்நாடொன்று படையெடுக்கும் நோக்கம் கொண்டுள்ளது.

3. தமிழ்நாட்டில் நடக்கவிருக்கும் தேர்தலில் இந்தக் கலவரத்தை பயன்படுத்தி அரசியல் இலாபம் பெற முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இந்த மூன்று கட்டுக்கதைகளுடன் கூடவே, வடபகுதியிலிருந்து டிசம்பர் 31இற்கு முன் இராணுவத்தை விரட்டி அடிக்க இயக்கமொன்று திட்டமிட்டுள்ளதாயும் புரளியொன்றைக் கிளப்பி விட்டார் அத்துலத் முதலி.

இந்தக் கறுப்புப் பிரச்சார மூடாக, கண்காணிப்பு வலயத்தை மேலும் இறுக்கத்துக்கு கொண்டுவரத் தயாரானார். இந்தக்கட்டத்தில் அதி உச்ச ஒடுக்கு முறை உத்தரவுகள் (1-12-84இல்) பிறப்பிக்கப்பட்டன. யாழ். மாவட்டம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. பாதுகாப்பு வலயத்தினுள் நிரந்தரமாக வசிக்காதவர்கள் இடம் பெயர்ந்துவிட நிர்ப்பந்திக்கப்பட்டனர். வாகனங்கள், சைக்கிள்கள் வைத்திருக்கும் எவரும் அனுமதிச் சீட்டு பெறவேண்டுமென கட்டாயப் படுத்தப்பட்டனர். காலை 6—8.30 மணிக்கும் பிற்பகல் 2-4 மணிக்கும் மட்டுமே வாகனங்கள் ஓடமுடியுமெனவும் அதுவும் குறிப்பிட்ட பாதை வழியாகவே செல்லவேண்டுமென வும் அறிவிக்கப்பட்டது.

கண்காணிப்பு வலயம் தொடர்பான இறுதிக்கட்ட ஒடுக்குமுறைச் சட்டங்களும், உத்தரவுகளும் அமுலுக்கு வந்ததும் ஜயவர்த்தன சர்வகட்சி மாநாட்டை செயலிழக்கச் செய்வதற்கு உறுதி பூண்டார். 01-12-84இல் பாதுகாப்பு வலயம் தொடர்பான உச்ச உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில், இராணுவப் பயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்த ஏதுவாக 26-12-84 இல் கூட்டணி குறுக்கே நிற்கிறதென்ற குற்றச்சாட்டுடன் மாநாட்டைச் செயலிழக்கச் செய்தார் ஜயவர்தன.

சர்வகட்சி மாநாடு குழப்பப் பட்டபின், பத்திரிகை தணிக்கை அமுலாக்கப்பட்டதும், இனவெறி இராணுவம் வெறியாடத் தொடங்கியது.

பருத்தித்துறையை சாவகச்சேரியுடனும், கொடிகாமத்துடனும், நெல்லியடியுடனும், யாழ்ப்பாணத்துடனும் இணைக்கும் பிரதான வீதிகளில் முக்கிய பாலங்களை வெடிவைத்து தகர்த்தனர். தொண்டமனாறு-பருத்தித்துறைப் பாதையை மட்டும் தகர்க்காது, அவ்விடத்தில் தற்காலிக இராணுவ முகாம் அமைத்து சோதனை நடாத்தத் தொடங்கினர்.

வல்வெட்டித்துறையை அண்டிய பகுதிகளில், பீரங்கித்தாக்குதலையும், எழுந்தமானமான துப்பாக்கிச் சூட்டையும் ஆரம்பித்தனர். இந்த வெறியாட்டத்தில், சுமார் 80 பேருக்குமேல் படுகொலை செய்யப்பட்டதாகவும் 120 பேருக்குமேல் காயமடைந்ததாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்த அட்டூழியங்கள் ஆரம்பமாவதற்கு முன்பே பருத்தித்துறைப் பகுதியில், அமைந்திருந்த பிரபல்யம் வாய்ந்த 'ஹாட்லிக்' கல்லூரியின் நூல்நிலையம் முற்றாக எரிக்கப் பட்டிருந்தது.

இந்தப் படுகொலைகளைக் கண்டு பீதியுற்ற மக்கள் சுமார் 10,000 பேருக்குமேல் பருத்தித்துறையை விட்டு அகதிகளாக வெளியேறினர். இவர்களில் கணிசமானவர்கள் இந்தியக் கரைகளுக்கு அடைக்கலம் தேடி ஓடலாயினர். அகதிகளாக தமது படகுகளில் தப்பிச் செல்ல எத்தனித்தவர்களையும், இராணுவம் விட்டு வைக்கவில்லை. ஒருமுறை 26 பேர் குடும்பங்களாக படகுகளில் தப்பிச் செல்ல எத்தனிக்கும்போது ஒரு பெண் உட்பட நால்வர் நடுக் கடலிலேயே படுகொலையுண்டனர். ஏனையோர் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை மட்டுமன்றி மாதகல், மன்னார் கரை ஓரங்களும் இனவெறிக்குப் பலியாயின. மாதகல் கடற்கரையில் மேற்கொள்ளப் பட்ட தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்களினால் வீடுகளையும் இருப்பிடங்களையும் இழந்த மக்கள் கரை ஓரங்களை விட்டு ஓடத் தொடங்கினர். தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர்.

மன்னார் பகுதியிலும் காட்டுமிராண்டித்தனத்தை கட்டவிழ்த்து விட்டது இராணுவக்கூட்டம். வங்காலை, அரிப்புததுறைப் பகுதியிலும், மன்னாரிலும் கூடுதலான கவனஞ் செலுத்திய இவர்கள் சுமார் 300 அப்பாவிகளை கொன்று குவித்தனர். மதகுருமாரையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை. வங்காலை வண'பிதா பஸ்தியான் தேவாலயத்துக்குள் வைத்தே சுட்டுக் கொல்லப் பட்டார்.

**தமிழகக் கரைகளில் 4700, போராளிகள் உள்ளே நுழைவதற்கு தயாராகி இருப்பதாக கனவுகண்டு அதைத் தடுப்பதற்காக தீட்டிய இராணுவத் திட்டத்துக்கும், அதன் விளைபொருளான படுகொலைகளுக்கும் மூலகர்த்தாக்களாக விளங்கியவர்கள் இஸ்ரேலிய மொசாட்டின் உறுப்பினர்களென்பது அப்பட்டமான தொன்றாகும்.**

ஆகஸ்ட் மாத 'ஐலண்ட்' பத்திரிகையில் அதன் நிருபருக்கு இஸ்ரேலிய பிரதிநிதி மட்ஹை பேட்டியளித்த போது '83 யூன் முதல் இலங்கை அரசுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டதாயும்; தாங்கள் வந்திருப்பது, இராணுவ பயிற்சியையும், ஆலோசனைகளையும், திட்டங்களையும் வகுத்துக் கொடுப்பதற்கே எனவும்' வெளிப்படையாகவே கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

83 யூன் முதல் இவர்கள் நாட்டுக்குள் நுழைந்திருந்தாலும் இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு ஒன்றை அமைத்து இஸ்ரேலிய தொடர்பை ஆட்சியாளர்கள் பகிரங்கப்படுத்தியது மே 84 இலேயாகும்.

இஸ்ரேலிய பயங்கரவாதிகளின் பின்னணியில் இத்தனை அநர்த்தங்களையும் புரிந்துவிட்டு, வெற்றிக் களிப்பில், பாராளுமன்றம் வந்த அத்துலத்முதலி **இந்தியாவில் முகாமிட்டுள்ள பயங்கரவாதிகள் இனிமேல் இலங்கைக்குள் நுழைய முடியாது.''** என வீறுப்புப்பேசியபோது அவரைப் பார்த்து அநுரா 'வெளியே போனவர்கள் எப்போதோ உள்ளே வந்து விட்டார்கள். இது உங்களின் காலங் கடந்த வேலைப்பாடு' எனக்கூறி பதிலடி கொடுத்திருந்தார்.

மன்னாரில் பதற்றம் நிலவிய இந்த நாட்களில் மன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்கும் இடைப்பட்ட கடலில் உலாவி வந்த இலங்கை கடற்படை பீரங்கிப்படகுகள் இரண்டை இந்திய கடற்படை கைப்பற்றி மண்டபம் கரைக்கு இழுத்து வந்திருந்தமை மிகுந்த அவதானத்துக்குரிய விடயம். இராமேஸ்வரம் மீனவர் தாக்க வந்ததாகவும், இந்தியகடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாகவும் இந்திய தரப்பிலிருந்து காரணம் காட்டப் பட்டிருந்தது.

இந்திய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை, அத்துலத்முதலி வட்டாரங்களுக்கு திடீர் அதிர்ச்சியையும், எச்சரிக்கையையும் கொடுத்திருந்தமை கவனிக்கப்பட வேண்டிய தொன்று.

இச்சம்பவம் நடந்து சில நாட்களில் இலங்கை கடற்படை இப்பகுதிகளில் மேற்கொண்டு வந்த கடல் ரோந்தை கணிசமான அளவு குறைத்துக் கொண்டது. இந்த நேரத்திலேயே இனவெறி இராணுவக் கொடுமைகளுக்கு ஆளாகி அகதிகளான பெரும்பாலானவர்கள் மன்னார்க் கரைகளிலிருந்து இராமேஸ்வரம் நோக்கி சாரி சாரியாக வந்து குவிந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தமூடு நாடுகடத்தப்பட்ட மக்களைப் போலல்லாது, இவர்களுக்கு மண்டபம் முகாமில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்திய அரசாங்கம் இவர்கள் நலனைக் கவனிப்பதற்காக ஆறு கோடி ரூபாவை உடனடியாக ஒதுக்கீடு செய்திருந்தது.

இக்காலங்களில் மன்னார், பருத்தித்துறை, மாதகல் கரைகளினூடாக தமிழகத்துக்கு அகதிகளாக வந்தவர் தொகை ஒரு இலட்சமென இந்திய அறிக்கைகள் கணக்குக் காட்டின :

அகதிகளின் வருகையால் தமிழ் நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்ட நிலையில் இந்திய பாராளுமன்றத்தில் இலங்கை பிரச்சனை விசேட கவனத்துக்குரியதாய் வந்திருந்தது. பாராளுமன்றத்தில் இலங்கை பிரச்சனை பற்றி உரையாற்றிய உள்விவகார அமைச்சர் குர்ஷித்ஆலம்கான் 'இலங்கையில் இப்போது நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. இதனால் நாளுக்கு நாள் அகதிகள் தமிழ் நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு இதனால் கொதிப்படைந்துள்ளது. இப்போது இலங்கைப் பிரச்சனையானது அதன் உள்நாட்டுப் பிரச்சனையல்ல. அது இந்தியாவின் தேசியப் பிரச்சனை,' என குறிப்பிட்டிருந்தார். இந்த உரை, தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தை இனிமேல் இலங்கையிலிருந்து பேசமுடியாது, பதிலாக இந்தியாவிலிருந்தே பேச வேண்டியிருக்கு மென்பதை முன்னறிவிப்புச் செய்வதாய் அமைந்திருந்தது'

இதையடுத்து, இந்தியாவானது, அகதிகள் பிரச்சனையையும், அதனால் இந்தியா எதிர்நோக்கும் சூழ்நிலைகளையும் ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்கும், நட்பு நாடுகளின் கவனத்துக்கும் கொண்டு வந்து பிரச்சாரம் செய்திருந்தது.

இக்காலங்களில் ஜயவர்தன ஆட்சி எதிர்நோக்கிய புதிய நெருக்கடிகளினால் பேச்சுவார்த்தை விடயத்தில் ஒரு திருப்பு முனையை கொண்டு வரவேண்டியதாயிற்று. கடந்த ஆண்டுகளில் அமிர்தலிங்கத்தையும், தொண்டமானையும், இஸ்லாமிய பிரமுகர்களையும் மையமிட்டு தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளை பேசிவந்த வழமையை முற்றாகமாற்றி இனிமேல் தமிழ் மக்களின் பிரச்சனையை பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச வேண்டிய கட்டாயம் ஏற்படலாயிற்று.

இம் மாதங்களில் தமிழ்பேசும் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்தியானது நாளுக்குநாள் வடகடலைத்தாண்டி இந்தியக் கரைகளுக்கு வந்து கொண்டிருந்தது. இவ்வேளையிலேயே, ஜயவர்தனவின் அரசவட்டாரங்கள் விடுதலை இயக்கப்பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்த வேண்டிய அவசியம் பற்றி தீவிரமாக ஆராய்ந்து வந்தன.

இந்த நிகழ்வுகள் அத்துலத்முதலியையும், அவரது இஸ்ரேலிய 'நிபுணர்களையும்' குழப்பத்தில் ஆழ்த்தி இருந்தது. இக் குழப்பத்தை சீராக்குவதற்காக ஜயவர்த்தனவின் ஆசிர்வாதம் பெற்று இவர் அமெரிக்கா பயணமானர்.

## 85இல் பேச்சு வார்த்தை ஆரம்பம்

அமெரிக்காவுடன் அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு டெல்லி வந்து சேர்ந்த அத்துலத்முதலி 9.2.85இல் பிரதமர் ராஜீவுடனும், ஜி. பார்த்தசாரதியுடனும் இரகசியப் பேச்சுக்களில் இறங்கியிருந்தார். இப்பேச்சுவார்த்தையே 85 முழுவதிலும் நடந்த பேச்சுக்களுக்கு வித்தாக அமைந்திருந்தது. இங்கு இரண்டு விவகாரங்கள் பற்றி இரகசியமாகப் பேசப்பட்டிருந்தன.

1. இந்தியா சார்பில் — விடுதலை இயக்கங்களுடனும், தமிழர் விடுதலைக் கூட்டணியிருடனுன் இணைந்த பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. இலங்கை சார்பில் — இவர்களுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பிப் பதானல் இரண்டு விடயங்களில் இணக்கம் காணப் பட வேண்டுமென முன் நிபந்தனையிடப்பட்டது. அதில் ஒன்று, இலங்கை— இந்திய கூட்டு கண்காணிப்பை கடற்பகுதியில் மேற்கொள்ள இணங்குதல் அல்லது இலங்கைக்கு சட்டவிரோதமாக நடைபெறும் கடல்போக்குவரத்துக்கு இந்தியக் கரைகள் பயன்படுத்தப்பட மாட்டாதென்ற உத்தரவாதம் அளித்தல்.

மற்றையது - பேச்சுவார்த்தைக்குவரும் விடுதலை இயக்கங்கள் மூன்று மாதகால போர் நிறுத்தத்துக்கு இணங்குதல்.

இலங்கை முன்வைத்த நிபந்தனைகளில், கூட்டுரோந்து தவிர்ந்த மற்றைய இரண்டிற்கும் இந்தியா இணக்கம் தெரிவித்திருந்தது.

இந்தப் பேச்சு வார்த்தையானது, ஓரிருநாட்களில் சுமுகமாக முடிவுற்றது. ஆயினும், கூட்டு ரோந்துக்கு இந்தியா சம்மதிக்காதது அத்துலத்முதலிக்கு, மனச் சஞ்சலத்தைக் கொடுத்திருந்தது. இப்பேச்சுவார்த்தையானது முற்றுப் பெற்றதும், பத்திரிக்கை நிருபர்கள் கேட்டதற்கு பிரதமர் ராஜீவ்காந்தி வெற்றியளித்துள்ளது எனக்கூற, அத்துலத்முதலி திருப்திதருவதாயில்லை எனக் கூறியிருப்பது அத்துலத்முதலியின் ஏமாற்றத்தைக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

ஆயினும், தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக பாரதப்பிரதமர் ராஜீவும், இலங்கை அதிபர் ஜயவர்தனவும் உச்சி மாநாடு நடாத்த தீர்மானமாயிற்று.

நாடு திரும்பிய அத்துலத்முதலி அமெரிக்கச் செய்தியை ஜயவர்தனவிடம் எடுத்துக் கூறியதும் ஜயவர்தனவுக்கு புதுத்தெம்பு பிறந்திருந்தது. 20-2-85 இல் நடந்த பாராளுமன்றக் கூட்டத்தில் பேசிய ஜயவர்தன தனது தெம்பை வெளிக்கொணர்ந்திருந்தார். 'பயங்கரவாதிகளை முறியடிக்க சகலவளங்களையும் பயன்படுத்தும் காலம் வந்துவிட்டது. முதலில் பயங்கரவாதத்துக்குத்தீர்வு. அதன் பின்பு தான் அரசியல் தீர்வு. இந்தியாவிலுள்ள மூன்று இயக்கங்கள் ஒன்றிணைந்து பொதுவான இராணுவத்திட்டமொன்றைவகுத்து வருகின்றன. இவர்களிடம் போதிய அளவு ஆயுதங்கள் இருக்கின்றன. இந்தப் பயங்கரவாதிகள் நேரடியான தாக்குதலுக்கு தயாராகி வருகின்றனர். இவர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் சட்டவிரோதமாக நுழைவதைத் தடுக்க நாங்கள் கூட்டுரோந்துக்காக இந்தியாவிடம் கேட்டோம். இந்த ரோந்தினால், இந்தியாவுக்குச் செல்லும் அகதிகளையும் கட்டுப்படுத்த முடியும். ஆனால், அவர்கள் எமது யோசனையை ஏற்க மறுத்துவிட்டார்கள். இவ்வாறு ஜயவர்தன பாராளுமன்றத்தில் கர்ச்சித்திருந்தது ராஜீவ்-ஜயவர்தன உச்சி மாநாட்டின் சாத்தியத்தில் தேக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.




## 85 இல் அமெரிக்க ஒப்பந்தம்

'பயங்கரவாதிகளை முறியடிக்க சகல வளங்களையும் பயன்படுத்தும் காலம்வந்துவிட்டதென' சூளுரைத்த ஜயவர்தன 84 இல் திருகோணமலை எண்ணைக் குதங்களை அமெரிக்காவுக்கு வழங்கியது போல் 85 இல் திருகோணமலை விமானத்தளத்தை அமெரிக்கா வசம் ஒப்படைக்கத் தயாரானர். 2 இலட்சத்து 92,000 அமெரிக்க டொலர் செலவில் அமைக்கப்படவுள்ள விமானத்தளத்தைப் பற்றிய பூரண அறிக்கை ஒன்றை தயாரிக்க 'போயிங்' விமான நிறுவனத்திற்கு அனுமதியளிக்கப்பட்டது. அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட போயிங் நிறுவனத்திற்கு இந்த அனுமதி அளிப்பது பற்றி 13-3-85 ல் நடந்த பாராளுமன்றக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதுமட்டுமில்லாமல், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சக்திவாய்ந்த ஒலிபரப்பு நிலையத்தை (VOA) புத்தளத்தில் நிர்மாணிப்பதற்கு இதே மாதத்தில் அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

## 85 - இல் இலங்கை - இந்திய எதிர்ப்பிரச்சாரம்

இலங்கைக்குள் அமெரிக்க ஏகாதிபத்தியம் காலூன்றியிருப்பதை இந்தியாவின் ஆபத்தாகக் கொண்டு, பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி உலகத்தலைவர்களிடம் பிரச்சாரத்தை ஆரம்பித்திருந்தார். சோவியத் அதிபர் ஷெர்னன்கோவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக சோவியத் சென்ற பிரதமர் ராஜீவ் அங்கு வந்திருந்த தலைவர்களைச் சந்தித்து இலங்கை இனப்படுகொலைபற்றியும், அமெரிக்காவின் காலூன்றல் பற்றியும் நீண்டநேரம் விளக்கியிருந்தார். சோவியத்தின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்ட கோர்பசோவையும், அமெரிக்கா உபஜனதிபதி ஜோர்ஜ் புஷ்ஷையும், பிரித்தானிய பிரதமர் தாட்சரையும் சந்தித்து இது பற்றி விவாதித்திருந்தார்.

இலங்கை-இந்திய உறவுகள் இவ்விதம் விரிவடையத் தொடங்கிய நிலையில், பேச்சு வார்த்தையை தேக்க நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்காக எந்தவித காத்திரமான சூழலும் கருக் கொண்டிருக்கவில்லை.

## 85 இல் பேச்சுவார்த்தை திம்பு-டெல்லி

இவ்வேளையில்தான் அனுராதபுரச் சம்பவங்கள் நடந்தேறியிருந்தன. இது நடந்ததும் சிங்கள மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் அலைமோதத் தொடங்கியதும் பௌத்த சங்கங்கள் ஜயவர்த்தனவை இந்தியா சென்று ராஜீவுடன் பேச்சு வார்த்தையை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தன இந்த நேரத்தில் இலங்கையில் ஏற்பட்ட பரபரப்பும், பய உணர்வும் தாண்டவமாட,- உருவாகிய நெருக்கடியின் மத்தியில், ஜயவர்தன டெல்லிக்கு அவசர விஜயம் செய்து பேச்சு வார்த்தையில் ஈடுபடலானர். இந்த சந்திப்பில், பெப்பிரவரி மாதத்தில் நடந்த 'ராஜீவ்-அத்துலத் முதலி இணக்கத்தை' உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வர உறுதி பூணப்பட்டது.

மேற்படி இணக்கமானது போர் நிறுத்தம் பேச்சு வார்த்தை என்ற இரண்டு அடிப்படைகளில் ஏற்பட்டிருந்த போது இலங்கை, இந்திய, போராளிகள் தரப்பில், ஒவ்வொரு சாராரும் இதை எவ்வாறு பயன்படுத்த எத்தனித்திருந்தார்களென்பதை இங்கு இனங்காண வேண்டியது அவசியம். இந்தியா பேச்சு வார்த்தையையே தனது தேவையாகக் கொண்டிருந்தது. 'இந்தியாவிலுள்ளது போன்ற மாநில சுயாட்சி அமைப்பே இனப்பிரச்சனையின் ஒரே தீர்வாக இருக்க முடியும்' என ராஜீவ் காந்தி அழுத்தம் திருத்தமாக இந்திய தரப்பு அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

மாநில சுயாட்சியின் அதிகாரங்கள் விடயத்தில் இந்தியா மிகுந்த கவனம் செலுத்தியுள்ளது. இங்கு கொடுக்கப்படும் அதிகாரங்கள், இலங்கையில் அமெரிக்கா ஏற்படுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தியுள்ள தளங்களை கட்டுப்படுத்தும் அல்லது செயலிழக்கச் செய்யும் வல்லமை கொண்டிராவிட்டால் அது இந்தியாவிற்கு ஏற்புடையதாய் இருக்க மாட்டாதென்பது திண்ணம்.

## 85 இல் - சிறிலங்காவின் இராணுவத் திட்டமும் வன்முறைகளும்

போர் நிறுத்தம் பேச்சுவார்த்தை விடயங்களில் இலங்கை அரசானது பேச்சுவார்த்தையை விட போர் நிறுத்தத்தையே அதி முக்கிய விடயமாக கருதிச் செயற்படலானது. ராஜீவ்—அத்துலத்முதலி சந்திப்பின் போது இலங்கை அரசு இலங்கை-இந்திய கூட்டு ரோந்திலேயே அதிக கவனம் செலுத்தியிருந்தமையை முன்னர் குறிப்பிட்டிருந்தோம். ஆனல் அநுராதபுரத் தாக்குதலை அடுத்து கூட்டு ரோந்திலிருந்து இலங்கை தரப்புக்கவனம் போர் நிறுத்தத்தின் அவசியம் மீது திரும்பியிருந்தது.

இவ்விரு சாராருக்கும் இடையில் நின்ற போராளிகள், இந்தியா விரும்பும் பேச்சுவார்த்தைச் சந்தர்ப்பத்தை ஜயவர்த்தனவின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தும் பிரச்சார மேடையாக பயன்படுத்தவும், போர் நிறுத்தத்தை ஜயவர்த்தன மீறினல் தற்காப்புத் தாக்குதல்களை மேற்கொள்ளவும் தீர்மானித்திருந்தனர்.

மூன்று சாராரும் மூன்று கோணங்களில் பயன்படுத்த முனைந்த சூழ்நிலையிலேயே பேச்சுவார்த்தை இணக்கமும் போர்நிறுத்த ஒப்பந்தமும் கையொப்பமில்லாத சம்மதத்துக்கு வந்திருந்தன.

இதன்படி யூலை 8 ந் திகதி பூட்டான் தலைநகரான திம்புவில் பேச்சுவார்த்தை ஆரம்பமானது. ¶. 2. 85 இல் பிரதமர் ராஜீவும் அத்துலத்முதலியும் மேற்கொண்ட முதலாவது பேச்சுவார்த்தையில் தேக்கமடைந்ததற்குப் பின் மீண்டும் 'சரிசெய்து' தொடரப்பட்ட விடயமாகவே திம்பு பேச்சு வார்த்தையைக் கணிப்பிட வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகளை உள்ளடக்கிய ஈழத்தேசிய விடுதலை முன்னணியுடன் தமிழீழ மக்கள் விடுதலை கழகமும், தமிழர் விடுதலைக்கூட்டணியும் சேர்ந்து ஒருமனதான முறையில் திம்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதென முடிவாயிற்று. இவர்களிடையில் ஏற்பட்ட இந்த ஒற்றுமை ஜயவர்தனவின் முகத்திரையைக் கிழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நான்கு அம்சங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

1. தமிழ் பேசும் மக்கள் ஒரு தனியான தேசிய இனம்
2. இம்மக்களுக்கென்று ஒன்றிணைந்த மொழிவாரிப்பிரதேசம் ஒன்று இலங்கையில் உண்டு.
3. இம் மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள்,
4. ஸ்ரீலங்காவிலுள்ள (தமிழ்பிரதேசங்களுக்கு அப்பாலுள்ள) அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கும் குடியுரிமை வழங்கப்பட வேண்டும்.

இந்த நான்கு அம்சங்களையும் விரிவுபடுத்தி முதற்கட்டத் திம்புப் பேச்சில் தமிழர் பிரதிநிதிகள் உரையாற்றியிருந்தனர்.

இந்த அம்சங்களை முற்ருக நிராகரித்திருந்த சிறிலங்காவின் பிரதிநிதி எச். டபிள்யூ. ஜயவர்தன அரச சார்பு நகல் திட்டம் பற்றி 'விரிவுரையாற்ற' முற்பட்ட போது இத்திட்டம் பற்றி எதுவித அபிப்பிராயமும் தெரிவிக்காமல் அவர் உரையை அவதானிக்க வேண்டுமென்பதையே தீர்மானமாகக் கொண்டு செயற்பட்டனர்.

இனப்பிரச்சனைக்கு ஒற்றையாட்சிக்குட்பட்ட நகல் திட்டம் பற்றி பிரஸ்தாபித்த எச். டபிள்யூ. ஜயவர்தன 84இல் நடைபெற்ற சர்வகட்சி மாநாடுகளில் தமிழ்ப்பிரதிநிதிகளால் நிராகரிக்கப்பட்ட மாகாண சபைத் தீர்மானத்தையே மீண்டும் திம்புவுக்கு காவி வந்தார்.

இருதரப்பினரும் தத்தமது பின்னணிகளை எடுத்துரைத்த பின், இயக்கப்பிரதிநிதிகள், —

"போர்நிறுத்த காலங்களில் இராணுவம் செய்த அட்டூழியங்களையும், அரசு செய்து வந்த இராவத் தயாரிப்புகளையும் வெளிப்படுத்தி இருந்தனர். அத்துடன் சிறிலங்கா அரசு கொண்டு வந்துள்ள நகல்திட்டமானது தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு வேட்டு வைப்பதாயிருப்பதாகவே" விடுதலை இயக்கங்கள் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டன.

இந்த அறிக்கை வெளியான போதே, கொழும்பு நகரில் 120 கிலோ வெடி மருந்துடன், ஜயவர்தனவை கொல்ல சதி என்ற செய்தி பரவியிருந்தது. இந்த முயற்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஜயவர்தனவின் தம்பி எச். டபிள்யூ. ஜயவர்தனதான் மீண்டும் புதிய நகல் திட்டமொன்றுடன் ஆகஸ்ட் 12 இல் வருவதாகக் கூறியதுடன் முதலாவது திம்பு பேச்சு முடிவடைந்தது.

மீண்டும் பேச்சுவார்த்தை, குறிக்கப்பட்ட திகதியிலேயே ஆரம்பமான போது, தமிழ்ப் பிரதிநிதிகளால்முதல் திம்புவில் முன்வைக்கப்பட்ட நான்கு அம்சங்களையும் ஒரேயடியாக நிராகரித்துப் பேசினர் எச். டபிள்யூ ஜயவர்தன, இலங்கை என்ற ஒற்றையாட்சிக்குட்பட்ட அதிகாரப்பரவலாக்கமே தமது தீர்மானமென இம்முறை சற்று அழுத்தமாகப் பேசினர்.

இவருக்குப் பதிலளித்த இயக்கப் பிரதிநிதிகள் தமது கடந்தகால அரசியல் பிரச்சனைகளை எடுத்துக்கூறி அதிகாரப் பரவலாக்கங்கள் அர்த்தமற்றவை என எடுத்தியம்பினர். அத்தோடு போர் நிறுத்தக் காலங்களில் நிகழ்ந்த இராணுவ அத்துமீறல்களையும் எடுத்துக் கூறினர்.

இந்நேரம் இருதரப்பினரிடையிலும் வாதம் சூடாக நடந்து கொண்டிருந்தபோது, இராஜதந்திர நடவடிக்கைகளுக்காக திம்புவுக்கு விரைந்துவந்தார் ரொமேஷ்பண்டாரி இவரது முயற்சிக்குப்பின், எச்டபிள்யூ ஜெயவர்தன அதிகாரப் பரவலாக்கம் பற்றி பேச ஆரம்பித்தார். எச். டபிள்யூ ஜயவர்தன மாவட்ட சபைகளுக்கு கீழுள்ள உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளை கொண்ட 'பிரதேச மண்டலங்களை' உருவாக்கலாமெனவும், விரும்பினல் மாவட்டசபைகள் இன்றுள்ள மாகாண வரம்புகளுக்குட்பட்டு இணைந்து மாகாண சபைகளை உருவாக்கலாமெனவும் பழைய பாணியில் புலம்பினர். இந்த யோசனைகளும் கடந்தவருட சர்வகட்சி மாநாட்டில் மணிக்கணக்காகப் பேசி நிராகரிக்கப் பட்டவையே என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நேரத்தில் தான் இனவெறி இராணுவம் வவுனியாவில் பொதுமக்களை சுட்டுக்கொன்று வெறியாடியிருந்தது. இச்சம்பவத்தை கடுமையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்ட இயக்கப் பிரதிநிதிகள் அன்றே திம்பு மாநாட்டை விட்டு வெளிநடப்புச் செய்தனர்.

இதற்குப் பின்னல் பேச்சுவார்த்தை மையம் திம்புவிலிருந்து டெல்லிக்குத் திரும்பியது. திம்புவிலிருந்தே நேரடியாக டெல்லி வந்த சிறிலங்கா பிரதிநிதிகள், இந்திய அரசுடன் தனியாக நகல் திட்டம்பற்றி சிலநாட்கள் பேசினர். இவ்விருவரும் கலந்துபேசி நகல் திட்டமொன்றைதயாரித்திருந்தனர். இந்தத்திட்டமே, இலங்கையின் இனப்பிரச்சனையை இந்திய மண்ணிலிருந்து தீர்ப்பதற்கு, ஆரம்பப் புள்ளியாக அமைகிறதென பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அறிவித்துவிட்டு நகல்திட்டத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். இத்திட்டம் நான்கு விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

1. ஐக்கிய இலங்கைக்குட்பட்ட தீர்வையே திட்டமாகத் தயாரிப்பது.
2. மாகாணசபைகள், மாவட்ட சபைகள், கிராம சபைகளே அதிகாரப் பரவலாக்க பிரிவுகளாக இருச்கும்.
3. திருகோணமலை துறைமுகமும் அதன் சுற்றுப்புறமுள்ள பொருளாதார மையங்களும் சிறிலங்கா அரசின் அதிகாரத்துக்குரியதாகவே அமையப்பெறும்.
4. இணக்கம் பெற்ற எந்தத்தீர்வும் முப்பது நாட்களில், அமுலாக வேண்டும்.

இந்தத் திட்டத்துக்கு திருத்தம் தருமாறும், அது முடியாது போனல் ஒற்றையாட்சிக்குட்பட்ட மாற்றுத் திட்டம் தருமாறும் இயக்கப் பிரதிநிதிகளிடம் இந்திய அரசு வேண்டுகோள் விடுத்தது. இந்த வேண்டுகோளை அடுத்தே, திம்புவில் இருந்த இயக்கங்களுக்கிடையிலான ஒருமித்த ஒற்றுமை தளரத் தொடங்கியது. நகல்திட்டம் கொடுப்பது ஈழக் கோரிக்கையை கைவிடுவதற்கான முதற்படியாக கருதிய ஈழத் ஈழத்தேசிய விடுதலை முன்னணி, திட்டம் கொடுக்க முற்ருக மறுத்தது. அதே நேரம் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் இடைக்காலத் தீர்வொன்றை ஏற்கக்கூடும் என தொண்டமான் தமிழக விஜயத்தின் பின், இவ்விருவரது எண்ணப்பாடுகளையும் வெளிக்கொணர்ந்திருந்தார்.

இந்தக்காலங்களிலேயே, இந்திய அரசுக்கும், ஈழத்தேசிய விடுதலை முன்னணிக்குமிடையே கசப்பான அனுபவங்கள் நடந்திருந்தன. விடுதலைப் புலிகளின் பேச்சாளராக இருந்த பாலசிங்கம் மீது, நாடுகடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும், அதன் பின்னல் தமிழகத்தில் அமைதியின்மை உருவெடுத்ததும் அது விரைவில் சீரான நிலைமைக்குத் திரும்பியதும் பரபரப்பான செய்திகளாகும்.

சிலவாரங்களில் உறவுகள் சீரடைந்ததும், ஈழத் தேசிய விடுதலை முன்னணி பிரதிநிதிகள் ராஜீவின் அழைப்பின் பேரில் பேச்சுக்களுக்காக டெல்லி சென்றனர். இச்சந்திப்பில் ஈழத்தேசிய விடுதலை முன்னணியானது, உறுதியாகத் தனது கருத்தைத் தெரிவித்திருந்தது. அதாவது, எந்தவகை திட்டம் பற்றியும் பேசுவதற்குமுன் இலங்கையில் சமஉரிமையும், அமைதி நிலைமையும் ஏற்பட வேண்டியது அவசியமெனவும், ஜயவர்தன, நாட்டற்றவராக்கப்பட்ட மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கியும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை அப்புறப்படுத்தியும், இராணுவக் கெடுபிடிகளையும் தயாரிப்புகளையும் கைவிட்டும், கடுமையான தொழிற்சங்கச் சட்டங்களை நீக்கியும், கைதுசெய்தோரை விடுதலை செய்தும் தனது நேர்மையைக் காட்டும் போதே நகல்திட்டம் பற்றிப் பேசமுடியுமென ஆணித்தரமாக எடுத்துரைத்தது.

இந்தப் பேச்சுக்களின் விளைவாக ஈற்றில் இந்திய அரசும், இலங்கை அரசும் போர் நிறுத்த கால, வன்முறைகளை கண்காணிக்கவென கண்காணிப்பு குழுவொன்றை அமைக்க இணங்கினர். இந்தக் குழு இரண்டு தமிழ் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மொத்தம் பதினேரு பேரைக் கொண்டதாக அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் உற்சாகமாகச் செயற்பட்ட இந்தக் குழுவுக்கு இராணுவப் பாதுகாப்பு கொடுக்கப் போவதாகக் கூறிய ஜெயவர்தன அதை தனது கைகளுக்குள் மடக்கிவைத்தார். கண்காணிப்புக்குழு எனப் பெயரிடப்பட்ட இக்குழு, விசாரணைக்குழுவாகி, பின் செய்தி சேகரிக்கும் கூட்டமாகி இறுதியில் அதைக்கூட வெளியிடும் உரிமையற்றதாக ஜயவர்தனவால் மாற்றப்பட்டுள்ளது.

இலங்கை என்ற ஒற்றையாட்சிக்குட்பட்ட அதிகாரப் பரவ்லாக்கமே தமது தீர்மானமென இம்முறை சற்று அழுத்தமாகப்பேசினர்.

இந்தக் கட்டத்திலேயே, ராஜீவ்காந்தி முன்மொழிந்த ஆரம்ப நகல் திட்டத்துக்கு மாற்றுத் திட்டம் வைக்க தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தீர்மானமெடுத்தனர். இவர்கள் 84இல் தொண்டமானூடாக முன்வைத்த வடக்கும் கிழக்கும் ஒன்றிணைக்கப்பட்ட மாநில சுயாட்சியை அடிப்படையாகக் கொண்ட திட்டமொன்றையே மீண்டும் வைத்துள்ளனர். இத்திட்டத்தை ஜே. ஆர் ஏற்றுக் கொள்வாரா? அல்லது தேக்கமடையச் செய்வாரா? அல்லது முறியடிப்பாரா? என்பது அவரது இராணுவத் திட்டத்திலும் தயாரிப்பிலுமே அடங்கியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 85இல்—சிறிலங்காவின் இராணுவத்திட்டமும் வன்முறைகளும்

84ஆம் ஆண்டு முழுவதும், கடல் கண்காணிப்பை முதன்மைப் படுத்தி தீட்டிய திட்டங்கள் செய லிழந்து போக, அத்துலத்முதலி தனது அடுத்த கட்டத்திட்டத்தை பலதடவைகள் பறை சாற்றியுள் ளார்.

'மலேசியாவில் 6 இலட்சம் பேரைத் தகுந்த இடங்களில் குடி யேற்றிய போது பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டது. என இவ்வருட ஆரம்பத்தில் கூறியிருந்தார் அத்து லத்முதலி. இலங்கையை சிங்கப் பூராக்குவேன் என கனவு கண்ட ஜயவர்தனவின் பந்தோபஸ்து அமைச்சர் சிங்கப்பூரிலிருந்து மலே சியாவை நோக்கிப் புறப்பட்டு விட்டார்.

மலேசியா பாணியில் இலங்கை யில் செயற்படத் துடிக்கும் இவர், தனது அடுத்த கட்டத்திட்டம் பற்றி பிரஸ்தாபிக்கையில் 'வடக்கு, கிழக் கில் 20,000 சிங்களவரைக் குடி யேற்றப் போகிறேன். இவர்களுக் காக நவீன பண்ணை அமைப்பு களும் விவசாயத்திட்டங்களும் ஏற் படுத்தப்படும். அத்துடன், இவர் களின் பாதுகாப்புக்காக ஆயுதப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கப் படும். இவர்கள் இயக்கங்களின் கோட்டைகளாகக் கூறப்படும் இடங் களில் குடியேற்றப்படுவர். திரு கோண மலையிலும் வவுனியாவிலும், முல்லைத்தீவிலும், கிளிநொச்சியிலும் இது உடனே நடக்கும்' என குறிப் பிட்டிருந்தார்.

கடந்த வருட இறுதியில், முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள கொக் கிளாய், நாயாறு பகுதியில் இளைஞர் கள் தாக்குதல் தொடுத்ததற்குப்பின் இவ்வருட ஆரம்பத்தில் 25-30 வயது கொண்ட சுமார் 500 குற்ற வாளிகள் பயிற்சி பெற்று இயந்தி ரத் துப்பாக்கியுடனும், சாதாரண துப்பாக்கியுடனும் குடியமர்த்தப் பட்டுள்ளனர். இவர்கள், அயல் கிராமங்களுக்குள் புகுந்து செய்த வெறித்தனங்களினால் குறிப்பாக தென்னமரவாடி பகுதிமக்கள் முற் ருக இடம் பெயர்ந்து அகதிகளாக இன்னமும் இருக்கிருர்கள்.

இந்த நவீனரக முகாமுக்கு இவ்வருடம் விஜயம்செய்த அத்துலத் முதலி பரீட்சார்த்தமாக மேற் கொள்ளப்பட்ட இந்தத் திட்டம் வெற்றியளித்துள்ளதென அறிவித் திருந்தார்.

இந்தியாவுடனை பேச்சுவார்த் தையை, ஒருபுறம் ஆரம்பித்து வைத்துவிட்டு தனது இராணுவத் திட்டங்களை செயற்படுத்துவதற் கேற்ற கைங்கரியங்களில் இவர் முழு மூச்சாக இறங்கியிருந்தார்.

6.3.85 அன்று இளைஞர் விவ கார வேலைவாய்ப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவின் பொறுப் பில் இராணுவப்பயிற்சிக்கு ஆட் சேர்த்து பயிற்சி அளிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இவர் ஒவ் வொரு சிங்களத் தொகுதிகளிலு மிருந்து சுமார் 250 பேர் வரையில் மாதா மாதம் தெரிவு செய்து மூன்று மாத காலம் பயிற்சியளித்து வரப் போவதாக பேசியிருந்தார்.

இராணுவ 'றிசேவ்' படை யினரது சேவை முழு நேரச் சேவை யாகப் பிரகடனப் படுத்தப்பட்டதும், 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து சிங்களவரும் கட்டாய இராணுவப் பயிற்சிக்குட் படுத்த சட்டமியற்றப் பட்டதும் இத்தயாரிப்பு அம்சங் களாகும்.

அடுத்து இவர்கள் தமது குடி யேற்றத்திட்டங்களுக்கு ஏதுவாக இருக்கக் கூடியதாக, இராணுவ நிர்வாக மாற்றங்கள் ஏப்ரல் மாதத் தில் செய்யப்பட்டன, திருகோண மலைத் துறைமுகத்தை உள்ளடக்கி-திருகோணமலையை தனி மாவட்ட மாக்கவும் ; மூதூர், கிண்ணியாவை உள்ளடக்கி-கந்தளாய் மாவட்ட மென்ற ஒன்றை உருவாக்கவும்; கொக்கி ளாய் நாயாறு உள்ள டக்கி-கொறவப் பொத்தானை மாவட் டத்தை புதிதாக உருவாக்கவும் ; கல்குடாவை பொலநறுவையுடன் இணைக்கவும் ; கென்ற், டொலர் பண்ணைகளை மதவாச்சிக்குள் கொண்டுவரக் கூடியதாக திட்ட மிடப்பட்டன.

இவற்றை நிறைவேற்றுவதில் முதற்கட்ட முக்கியத்துவம் மூதூருக் கும், கிண்ணியாவுக்குமே கொடுக்கப் பட்டிருந்தது. இத்திட்டத்தைச் செயற்படுத்தவென இராணுவ இணைப்பதிகாரிகளின் பொறுப்பு களில் 19-3-85 அன்று மாற்றங்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. வவுனி யா, மன்னூர், கிளிநொச்சி, முல்லைத் தீவு, திருகோணமலை ஆகியவற்றின் கூட்டு இராணுவத் தலைமையகம் வவுனியாவாகவே கடந்த வருடங் களில் இருந்து வந்தது. இதில் திரு கோணமலையைத் தனியாகப் பிரித்து திருகோணமலை இராணுவ முகாமை யே அப்பகுதியின் தலைமை நிலைய மாக மாற்றியிருந்தனர்.

இம்மாற்றம் நிகழ்ந்ததும், மூதூர், கிண்ணியாப் பகுதிகளிலுள்ள 300இற்கும் மேற்பட்ட இளைஞர் களும், யுவதிகளும் கைது செய்யப் பட்டனர். பலதடவைகள் இப்பகுதிக் குள் இராணுவம் தனது 'ஊர் காவல் படை'யுடன் சென்று தமிழ்மக்களை சுட்டுக்கொன்றதுடன் சொத்துக்களுக்கு தீவைத்தும் மக் களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந் தது. தமக்கு வசதியாக, கிண்ணியா விலுள்ள பாடசாலை ஒன்றில் தற் காலிக முகாமமைத்துச் செயற்படவும் ஆரம்பித்தனர்.

இவர்களின் கெடுபிடிகளினால் பீதியுற்று மக்கள் காடுகளுக்குள் ஓடி ஒளிந்து கொண்டனர். இவ்வேளை களிலேயே, மூதூர் காடுகள் பாது காப்பு வலயமாகப் பிரகடனப்படுத் தப்பட்டது, இம்மாதங்களில் தான் மன்னாரில் இருந்து முல்லைத்தீவு வரையிலான கடற் கண்காணிப்பு வலயம் திருகோணமலை வரை நீடிக் கப்பட்டிருந்தது.

அகதிகளாக, கோயில்களிலும், பாடசாலைகளிலும், காடுகளிலும், தெருக்களிலும் மக்கள் குவிந்த போது, அவை அகதிகள் முகாமாக் கப்பட்டன. மூதூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட இத்தகைய அகதி கள் முகாமொன்றுக்குள் புகுந்து மூன்று பேரை இராணுவம் சுட்டு வீழ்த்தியுமுள்ளது. இப்பகுதியில் தற் போது 30,000இற்கும் மேற்பட்ட தமிழ்பேசும் மக்கள் அகதிகளாகி இருக்கின்றனர். அகதிகளாக இஸ் லாமியரும் கணிசமான அளவு இங்கு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சிங்களக் காடை யர்களை திட்டமிட்டுக் குடியேற் றும் செயல்முறை அத்துலத் முதலியின் நீண்டகால அடிப் படையிலானதாகும். இவ்வரு டத்துக்குரிய குறுகிய காலத்திட்டம் பற்றி கூறும்போது—'வடக்கு, கிழக் கில் அதிக எண்ணிக்கை கொண்ட இராணுவத்தினரை இராணுவ முகாம்களில் இருந்து பலப்படுத்தப் படும் கடல் கண்காணிப்பிற்கு, மேலும் ஏழு அதி நவீன பீரங்கிப் படகுகள் வாங்கப்படும்—ஆகாய வழித் தாக்குதலை தொடுக்கக்கூடிய நவீன போர்விமானங்களில் பயிற்சி பெற்றுக் கொடுக்கப்படும். இவை யெல்லாம் செயற்படக்கூடியதாக 4.000 பேர் கொண்ட விசேட படைத் தயாரிப்புச் செய்யப்படும்' என்ருர்.

மேற்படி இருவகைத்திட்டங் களும் ஒழுங்காகச் செயற்பட சேகரிக் கப்பட்ட தேசிய பாதுகாப்பு நிதியைத் தவிர, இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் 600 கோடி ரூபா ஒதுக் கீடும் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியை வைத்துக் கொண்டுதான், ஜயவர்தன—கூட் டணி வைத்துள்ள மாநில சுயாட்சித் தீர்வை எப்படிக் கவனிக்கப் போகி ருர் என்பதை கணிப்பிட வேண்டும்.

ஜயவர்தன இராணுவத்தீர் வுக்கு தயாராகிவிட்டதை இதற்கு மேல் உறுதிப்படுத்த சான்றுகள் தேவையில்லை. தான் எடுக்கப்போகும் இராணுவத்தீர்வானது, இவ்வாண் டின் ஆரம்பத்தில் ஏற்படுத்திய அகதி கள் விளைவைப்போல் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்வதே ஜே.ஆரின் ஒரே நோக்கம். அதா வது தனக்கெதிரான சர்வதேசப் பிரச் சாரம் ஏற்படாவண்ணம், இந்தியா, இலங்கைப் பிரச்சனையில் தலையிடா வண்ணமும் இந்த இராணுவ நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி யுள்ளது.

தனக்கெதிரான சர்வதேசப் பிரச்சாரத்தை முன்னின்று நடத்தும் நாடாக இந்தியாவையே கருதியுள் ளார். இதனால் இந்தியாவுடன் அதிகம் பகைக்காத வகையில், நடந்துகொண்டு, தனக்குச் சார்பான சர்வதேசப்பிரச்சாரத்தை முடுக்கிவிட வேண்டியது இவருக்கு கடமையாய் உள்ளது. கடந்த சில மாதங்களில் இந்தியா அமைதி காத்திருந்தவேளை களில் இந்தியப் பத்திரிகைகளான 'தினமணி', 'இன்டியன் எக்ஸ்பிரஸ்' போன்றவற்றில் ஜே.ஆரின் வாழ்க் கைச் சரித்திரம் பிரசுரமாயிருந்ததும், அதில் ஜே.ஆர். 'வல்லவர் நல்லவர்' என்ற பாணியில் அமைந்திருந்ததும் இதற்கு சான்றுகளாகின.

அதே நேரம், கிழக்கு மாகாண மானது, ஈழக்கோரிக்கைக்கு, எதி ரானதாகவும், வடக்கு கிழக்கு இணைப்பென்பது அர்த்தமற்றதென வும் எடுத்துக் காட்டக் கூடிய காரி யங்களிலும் இவர் இறங்க வேண்டி யுள்ளது.

மேற்படி இரு நோக்கையும் நிறைவேற்றக்கூடிய வகையிலான தந்திரோபாயங்களை, இந்தியாவின துமம், ஈழப்போராளிகளினதும் செயல் வடிவங்களுக்கேற்ப, பிரயோகிக்கத் தயாராகிவிட்டார் என்பதே இங்கு கவனிக்கப்படவேண்டியதாகும்.

## *அத்துலத் முதலியின் இராணுவத்திட்டமும், ஈரோஸின் இராணுவ உபாயமும்*

84இலும், 85இலும், அத்துலத் முதலியின் தலைமையில் நடந்தேறிய இராணுவ வன்முறைகளுக்கு ஈடு கொடுக்கக் கூடியதாக ஈரோஸின் திட்டங்கள் எவ்வாறு அமைந்திருந் தன என இங்கு குறிப்பிட வேண்டி யுள்ளது,

ஈரோஸின் இராணுவ உபாய மானது, இது வரையில் இரண்டு அடிப்படைகளில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. முதலாவது வகை, பொருளாதார இலக்குகளையும், உள வியல் தாக்கத்தைக் கொடுக்கக் கூடிய இலக்குகளையும் நோக்கியதாக விளங்கியது.

இஸ்ரேலிய மொசாட் பிரிவினர் இலங்கையில் நலன்காக்கும் பிரி வை திறந்து வைத்து இயங்கத் தொடங்கியதும் முதலாவது நடவடிக் கை நிறைவேற்றப்பட்டது. ஒபரோய் விடுதியில் 28-ஜூன் 84 அன்று வைத்த குண்டு வெடித்தபோது இரண்டு இஸ்ரேலியர்கள் மாண்டார் கள். இச்செய்தியை இலங்கை அரசு மூடிமறைத்தாலும், இந்தியப் பத்திரி கைகள் வெளிக் கொணர்ந்திருந்தன. இது உல்லாசப் பயணத்துறையின் வீழ்ச்சிக்கும் அத்திவாரம்.

கடல் கண்காணிப்பு வலையமா னது, பலப்படுத்தப்பட்டு, கடல் அடங்குச் சட்டங்கள் பிறப்பித்த வேளைகளில் 8-10-84 அன்று கொழும்பிலுள்ள எண்ணைக் குழாய்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தகர்ப்பு முயற்சியும், கொழுமபின் பிரதான மையங்களில் 22-10-84 அன்று பல குண்டு வெடிப்புகளும் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

சிங்களக் குடியேற்றங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட விக்டோரியாத் திட்டத்தை திறந்து வைக்கவந்த பிரித்தானியப்பிரதமர் தாட்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க கட்டு நாயக்கா புகையிரத நிலையத்தில் 10 ஏப்பிரல் 85-ல் வைக்கப்பட்ட குண்டு புகை வண்டியையும், புகையிரத நிலயத்தின் ஒரு பகுதியையும் தகர்த்தெறிந்தது.

இந்த ஆண்டு நாடற்றவராக நான்கு இலட்சம் தொழிலாளர் இருக்க மே தினத்தை குதூகலமாகக் கொண்டாட ஆட்சியாளர்கள் தீர்மானித்த வேளை 29 ஏப்பிரல் 85 அன்று இராணுவத் தலைமைக் காரியாலயத்தின் ஒரு பகுதி குண்டு வைத்துக் தகர்க்கப்பட்டது.

பாக் ஜனாதிபதியும் ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையுமான ஜியா-உல்-ஹக் தனது சக நண்பனான ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடனான உறவின் வலிமையை எடுத்துக் காட்ட கொழும்பு வந்திருந்தபோது ஈழவர்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக 12.12-85 அன்று கொழுமபு கோட்டை ரயிலடியில் குண்டு வெடிக்கச் செய்யப்பட்டது. ரயிலின் இருபெட்டிகள் நாசமாக்கப் பட்டது.

இவையாவும் எமது எதிர்ப்பின் வடிவங்களாக வெளிப் பட்டிருக்கையில், கிழக்கு மாகாணத்தை நோக்கி அத்துலத் முதலி குறிவைத்திருந்த போது தற்காப்புத் தாக்குதல்களை நிகழ்த்தத் தொடங்கினோம்.

கொடுவா மடுவிலேயே, இது முதலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்தாக்குதலில் 32 அதிரடிப் பொலிசார் ஸ்தலத்திலேயே மாண்டனர். இதில் பிரித்தானிய பயிற்சியாளரான S.A.S இனால் பயிற்சியளிக்கப்பட்ட S.J. வீரதுங்கா சிக்கிக் கொண்டார். மட்டக்களப்பு பகுதியில் மக்கள் மீது சுட்டும் கற்பழித்தும், சித்திரவதை செய்தும் பிரபல்யம் பெற்றவர் வீரதுங்கா என்பது குறிப்பிடத்தக்கது. கொடுவாமடுக்கருகில் அமைந்த தமிழ்க் கிராமம் ஒன்றில் அட்டூழியம் புரிந்து விட்டு திரும்பி வருகையிலேயே இந்த அதிரடிப் பிரிவு மீது தாக்குதல் நடாத்தப் பட்டது.

தற்காப்பு நோக்கிய இத்தாக்குதல் அமைந்திருந்தமையாலேயே பொது மக்கள் மீது அதிரடிப் படையினர் பதிலடி கொடுக்க முடியாதிருந்தனர். கிழக்கு மாகாணத்தில் புதியதொரு வடிவத்தை நாம் கொடுவாமடு ஊடாகப் புகுத்திய போது இலங்கை வானொலியும் இதை உறுதிப்படுத்தியது.

இதைத் தொடர்ந்து, மட்டக்களப்பு அம்பாறைபகுதிகளில் கிரான், கோமாரி... கொடுவாமடு,
கிரான், வாகரை, மட்டக்களப்பு, புனாை, பொத்துவில், வெல்லாவெளி. கிராமங்களில்
இதே பாணித்தாக்குதல்கள் தொடர்ச்சியாக மேற் கொள்ளப் பட்டன. திருமலைப் பகுதியில் லலித்தின் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது அப்பகுதியிலும் இதே வடிவத்தாக்குதல்கள் நடந்தேறின தெகிவத்தை எல்.பி. 3 மூன்றும் கொலனி, தெகிவத்தை, கடவத்தமடு, பூநொச்சிமுனை பாலம் பொட்டாறு, திருக்கோண மடு. நாங்கள் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக மேற் கொண்ட தாக்குதல்களானது, சிங்கள வெறியர்களின் திட்டங்களை குழப்பியுள்ளதென்பதை 15 டிசெம்பர் 85இல் வெளியான இந்தியா டுடே சஞ்சிகை உறுதிப் படுத்தியுள்ளது. இதில் ஜயவர்தன "கிழக்கு மாகாணத்தில் இவர்கள் விறுவிறுப்போடு செயல் பட்டுவருவதால் அங்கு குடியேறிய ஏராளமான சிங்களவர்கள் அகதியாகியுள்ளனர்" என அவர் குறிப்பிட்டிருப்பது, போர் நிறுத்த காலத்தில் அவர் மேற்கொள்ளவிருந்த இன அழிப்பு வேலைகளுக்கு இத்தாக்குதல்கள் இடையூறுயமைந்துள்ள தென்பது வெளிப்படையாகிறது.

இராணுவ நடவடிக்கைகள் பெரும்பாலும் தற்காப்பு உத்தியை தழுவியிருந்த போது அரசியல் ரீதியில் நவம்பர் 15இல் எம்மால் 'நாடற்றவர் நினைவு' முன்னெடுக்கப் பட்டிருந்தது அன்றைய தினம் வடக்கு கிழக்கு மலையகப்பகுதியில் சுவரொட்டி ஒட்டப்பட்டு வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அரசியல் ரீதியில் இந்த முன்னெடுப்பானது இது வரை வடக்குக்குள் முடங்கிக் கிடந்த அரசியல் மையத்தை மலையகப் பகுதிக்கு மாற்றுவதற்கு அத்திவாரமிடப்பட்டது. மேலும் இந்நடவடிக்கையானது வடக்கு கிழக்கு மலையக இணைப்பிற்கும் அத்திவாரமிட்டதென்பது குறிப்பிடத்தக்கது. ●



## ஈழத்தில் பொருள் உற்பத்தி

சுன்னாகம் வாணி கல்வி நிலயத்தினரும் மாணவரினதும் ஒழுங்குடன் ஐப்பசி மாதம் 23, 24, 25ந் திகதிகளில் "மாபெரும் கண்காட்சியும் மலிவு விற்பனையும்" என்ற தலைப்பில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் கண்காட்சி இடம் பெற்றது.

இதன் நோக்கமானது முக்கியமாக உள்ளூர் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிப்பதற்கும், இதன் மூலம் மக்கள் அப்பொருட்களை தமது பாவனையில் நடைமுறைப்படுத்துவதற்கும் ஆகும்.

பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் திரு சு.வித்தியானந்தா அவர்கள் கலந்து கொண்டார்.

இதில்,

1. பனம் பொருள் அபிவிருத்தி சபை.
2. ஆயுள்வேதக் கல்லூரி யாழ்ப்பாணம்.
3. திருநெல்வேலி விவசாய கால்நடைத்துறைகள்.
4. வரலாற்று, ஆராய்ச்சித்துறை, யாழ் பல்கலைக் கழகம்.
5. அஸ்பெஸ்ரோஸ் சீமேந்துத் தயாரிப்புக்கள், அஸ்பெஸ்ரோஸ் சீமேந்து தொழிற்சாலை, LTD
6. கடற்தொழிலாளர் கூட்டுறவு சமாஜம், யாழ்ப்பாணம்
7. மக்கள் பிரசுராலயம்
8. மில்க் வைற் தொழிலகம்
9. விஞ்ஞானத்துறை, மானிப்பாய் இந்துக் கல்லூரி.
10. சென்யோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு, சுன்னாகம்.
11. தட்டச்சு, சுருக்கெழுத்துக் கழகம் வடமராட்சி.
12. சீமேந்து கூட்டுத்தாபனம்.
13. குஷிபா தொழிலகம்.
14. மகாஜனக் கல்லூரி சாரணர் பிரிவு.
15. யோகாசனப் பயிற்சிகள்.

ஆகிய பலஅமைப்புகள் கலந்து கொண்டன.

போராட்டக் காலகட்டத்தில் எமது பிரதேசத்தினுள் உற்பத்தியில் தன்னிறைவு காண வேண்டியது அவசியமாகிறது. இதன் அடிப்படையில் ஈழவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் பெருகிச் செல்ல வேண்டுமென்பது அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டிய தொன்றாகும். ஏனெனில் இன்றைய ஈழத்தில் உற்பத்தியானது ஸ்ரீலங்கா அரசினால் பலவந்தமாக சூறையாடப்பட்டு வருகின்றது. இந்நிலை தொடர்ந்து நீடிப்பதானது எமது மக்கள் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாததாகி விடும். ஆகவே போராடும் அமைப்புகள் யாவும் உற்பத்தியை ஊக்குவிப்பதிலும் முழுக் கவனம் செலுத்த வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஈழப்போராட்டம் போர்த்திட்டங்கள்

ஈழப் போராட்டம் என்பது என்ன? அதன் வடிவம், அணுகுமுறை, போர் தந்திரோபாயம் என்பவை என்ன? இவை குறித்து எமது மதிப்பீடு என்ன? ஏறத்தாழ 10 ஆண்டு அநுபவங்களின் ஊடாக ஈழப்புரட்சி அமைப்பானது, ஈழப் போராட்டத்தை சற்றே திரும்பிப் பார்க்க விரும்புகின்றது. ஈழவர்களின் போராட்ட வெற்றிக்கு ''மக்கள் போராட்டம்'' சரியான வழி என்பதை முன் வைத்ததுடன், நவீன ஆயுதங்களை கொள்வனவு செய்தலும், சிங்களவர்களுடன் சண்டை பிடிப்பதும் மட்டுமே போராட்டமென்று எம்பிக் குதித்தோரின் சாரமற்ற ''வெற்றுக் கூச்சல்''களையும் ஈரோஸ் நிராகரித்திருந்தது. ஆனால் மக்கள் போராட்டம் என்பதை இந்த வெற்றுக் கூச்சல்காரர்கள் கிண்டல் செய்திருந்தனர். வரலாற்று நிலைமைகளோ இவர்களை பொய்யர்களென்று அம்பலப்படுத்தியுள்ளது.

''தமிழ்'' என்னும் உணர்ச்சியை மட்டுமே மூலதனமாகக் கொண்டு, ஈழவர்களின் நரம்புகளை ஆங்காங்கே மீட்டிவிட்டு, 'பாராளுமன்றத்தில் நாடுவாங்கித்தருவோம்' என்ற உணர்ச்சிமிகு அரசியல்வாதிகள், தங்கள் கூக்குரலின் வெற்றுத்தனத்தை மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கியபோது, ''வோட்டு'' இனி வேண்டாம் ''வேட்டு''த்தான் வழியென்ற கூக்குரலுடன் ஈழப் போராட்டத்தை முழு இராணுவமயப் படுத்தினார்கள். வெறும் மொழி உணர்விலும், இனவெறியிலும் போராட்டத்தில் (சண்டை பிடித்தல்) இறங்கிய இத் ''தமிழீழ வாதிகள்'' காலப் போக்கில் தம்மீது செம்பசையையும் பூசிக்கொண்டு ''ஜனநாயக சோஷலிசமும்'' பறையத் தொடங்கினார்கள்.

இந்நிலையில் அவர்கள் ''தாக்குதல்—தப்பித்தல்'' (Hit and run) போராட்டத் திட்டத்திற்கும், ''மக்கள் போராட்டம்'' என்பதற்குமான வேறுபாடுகளை புரிந்து கொள்ள மறுத்த இவர்கள் ''இதுவே அது'' என்ற கோட்பாட்டை மக்களுக்கு ஊட்டினார்கள். மக்களின் பலவீனமான உணர்ச்சிகளை வளர்த்து அறுவடை செய்ய முயன்ற இவர்கள் மக்கள் அரசியல்மயமாவதை நிராகரித்தார்கள். மக்கள் வெறும் ஆடு மாடுகள் என்றும், தோள்களில் துப்பாக்கி ஏந்தி திரிபவனே சுத்தவீரத் தமிழ் மகனென்றும், உணர்ச்சிப் பிரகடனம் செய்தனர்.

''தமிழீழம்'' பொங்கலில் அமைக்கலாம், ஆறு மாதத்தில் பெற்றுக் கொள்ளலாம், இரண்டு வருடங்களில் வென்றுவிடலாம், என்ற போலி உத்தரவாதங்களை அள்ளி வீசிய இவர்கள் ''நேர்முக பரீட்சை மூலம்'' (Interview) ''ஆள்-அணி'' சேர்த்துக் கொண்டு தாக்குதல்— தப்பித்தல் என்னும் ராணுவ முறையை தமது போராட்டத் திட்டமாகக் கொண்டு செயற்பட்டனர். இவர்கள் சிங்களவருடன் சண்டை பிடித்து ''தமிழ் ஈழத்தை'' மீட்க முனைந்ததால் மக்களின் சக்தி புரியாததில் அதிசயம் ஒன்றுமில்லை. ஆனால் அதிசயம் ஒன்று என்னவென்றால் தாக்குதல்—தப்பித்தல் மூலம் மக்களை அணிதிரட்ட முடியும் என்ற கண்டுபிடிப்புத்தான். எப்படியென்றால் ''மக்கள் சுயநலவாதிகள், நம்மவரில் பலருக்கு இழப்புகள் வராவிடின் பங்காளிகளாக வரவே மாட்டார்கள்'' என்று, ''பாசிச'' போக்கு மிக்க நியாயங்களை முன்வைக்கிறார்கள். இப் பொறுப்பற்ற வாதங்களின் அடிப்படையிலான நடவடிக்கைகளும், நடத்தைகளும் ஈழப்போராட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டத்தை கொச்சைப் படுத்திக் கொண்டிருந்த போது, இந்தியாவின் அனுதாபம் இயக்கங்களை 'வீங்க' வைத்ததோடு, ஈழப்போராட்டத்தை மாற்றியது அரசியல் வாதிகளாலும், இயக்கங்களாலும் வீசி ஏறியப்பட்ட வாக்குறுதிகள் [இந்தியாவின் உதவியுடனே நேரடி தலையீட்டுடனே ''தமிழ் ஈழம்'' காணலாம்], இதனால் மக்களுக்கு ஏற்பட்ட எதிர்பார்ப்பு; இந்தியாவையும், தமிழ்நாட்டையும் பற்றியதான இயக்கங்களின் தவறுன கண்ணோட்டம, இந்தியாவின் எண்ணங்களுக்கு இசையும் தன்மை கொண்ட இயக்கங்களை பற்றியதான இந்தியாவின் பாகுபாடான எண்ணம், இதனால் முந்தியோட எத்தனித்த இயக்கங்கள், இதனால் அளவுகடந்த மக்களின் நம்பிக்கை இவை அனைத்துமே ஈழப்போராட்டத்தின் இயல்பான ''படிமுறை வளர்ச்சிக்கு'' பாதக நிகழ்வுகளாயின. இப்படியான போலி வளர்ச்சியின் பின்னணியில் தான் இந்தியா ''போராட்ட நிறுத்தம்—பேச்சுவார்த்தை''என்ற கட்டத்தை ஈழப்போராட்டத்துக்குள் திணித்தது, இதனால் திம்பு வந்தது. திம்புவை நோக்கி உலகின் கண்கள் திரும்பியபோது ஸ்ரீ லங்காவின் சோவனிஸ வேஷத்தை கண்டு கொண்டது.

## ஸ்ரீலங்காவின் நடவடிக்கைகள்

ஸ்ரீ லங்கா அரசு தனது சோவனிஸ முகத்தை மறைத்துக் கொள்வதற்காகவும், ஈழப்போராட்டத்தை ''உலக அரங்கிற்கு'' கொண்டுசெல்வதை தடுப்பதற்காகவும், எழுச்சி பெறும் ஈழ போராட்டத்தை நசுக்குவதற்காகவும், குடாவுக்குள் முடங்கிக்கிடந்த ''போராட்டமையம்'' தென் ஈழம் நோக்கி நகர்த்தப்படுவதை தடுத்து நிறுத்துவதற்காகவும், தென் ஈழத்தில் எழுச்சியுறும் ஈழவர்களுக்கு இராணுவத்தோல்வியை விளைவிப்பதற்காகவும் இருமுனை நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா இறங்கியுள்ளது.

I. அரசியல் நடவடிக்கை (Political Activities)

II. இராணுவ நடவடிக்கை (Military Activities)

''முற்போக்கு மிக்க ஈழப்போராளிகளால் ஈழப்போராட்டம் சர்வதேசமயப்படுத்தப்படுவதை'' (Internationalise) தவிர்க்க விரும்பும் ஸ்ரீலங்கா துணைக்கண்ட பிரச்சனைக்குள் குறுக்க முனைந்துள்ளது.''

எமது ஈழப்போராட்டத் தீர்வானது உலக அரங்கினுல் தீர்த்துவைக்கப்படுவது தனக்கு பாதகமாகவே அமையும் என்ற காரணத்தினுல் இந்தியாவின் உதவியுடனேயே தீர்த்துக் கொள்ள ஸ்ரீ லங்கா முடிவெடுத்துள்ளது. ஏனெனில் உலக அரங்கு போராடும் சக்திகளின் பக்கமே தனது புரட்சிகர ஆதரவை வழங்கி வருகிறது. தென் ஆப்பிரிக்கா, எல்சல்வடோர், பாலஸ்தீனம், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளின் போராட்ட ''எழுச்சி நிலைக்கு'' ஈழப் போராட்டமும் வந்துவிடக் கூடா தென்பதில் ஸ்ரீ லங்கா சோவனிஸ அரசும், அதன் எஜமானர்களும் விரும்புகின்றனர். இந்தியாவும் இதனையே விரும்புகின்றது. ஏனெனில் இந்தியா தனது ',துணைக் கண்ட பாதுகாப்பு வலையத்தினுள்'' இலங்கைத தீவையும் உள்ளடக்கியே வைத்திருக்கிறது.

இந்தியா, தனது பாதுகாப்பிற்கு ''அச்சுறுத்தல்'' ஏற்படும் தறுவாயில், இலங்கைத் தீவுக்குள் ''காலடி வைக்கும் உரிமையை'' தனக்குத் தானே கொடுத்துள்ளது. அதன் நியாயத்தைஅடிக்கடி உலகஅரங்கில் இந்தியா ஊர்ஜிதப்படுத்தி வந்துள்ளது. ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா இதனை எதிர்த்தபோதும், இப்போது இந்தியாவின் எண்ணங்களுக்கு படிந்து வருவதாய் அமைந்துள்ளது. இந்தியாவை தன் எண்ணத்திற்கு பணிய வைப்பதற்காய் ''மார்க்சிய பயத்தையும்'' ஊட்டியது. இதன் பின்னணியில் ஈழப்போராட்டத் தீர்வை இந்தியாவின் கைக்கு ஸ்ரீலங்கா கொடுத்துள்ளது.

ஈழப்போராளிகளுக்கும் [பயங்கரவாதிகள்] இந்தியாவுக்குமுள்ள தொடர்புகளை ''உலகஅரங்கில்'' அம்பலப் படுத்தப் போகிறேமென பிரச்சாரம்செய்துவந்த ஸ்ரீலங்கா அரசானது, இஸ்ரேலிய சியோனிஸ்டுகளையும், தென் ஆபிரிக்க நிறவெறியர்களையும், சுரண்டல் ஏகாதிபத்தியங்களின் உதவிகளையும் பெற்றுக் கொண்டதன் பின்னுல், அரசியல் சாணக்கியத்துடன் இந்தியாவை தனக்குத் துணைக்கு அழைத்திருப்பதுடன், இராணுவ மயமாக்கலினுல் இழந்துபோன ''பெருந்தேசிய இனவெறியை'' மீட்டெடுத்து சிங்கள மக்களுக்கு ஊட்டவும். , ஈழவர்களின் போராட்ட உணர்வில் இருந்து போராளிகளை பிரித்து விடவும் ஸ்ரீலங்கா சோவனிஸ அரசு முனைந்துள்ளது. ''பழைய இந்தியா வேறு, புதிய இந்தியா வேறு'' என்று தனது பணிவிற்கான காரணத்தை கற்பிக்கின்றது,

உலக அரங்கிற்காக ஈழத்திலும் சில காட்சிகளில் நடித்துக் கொண்டிருக்கிறது. ''தாக்குதல் தப்பித்தல்'' நடவடிக்கை மூலம், தமிழ்பேசும் மக்களின் போராட்ட மையமாக-வடஈழம்-குறிப்பாக யாழ்குடா நாட்டை உலக அரங்கு நன்கு தெரிந்து வைத்திருந்தது. ஆதலால் இந்தியாவின் போர் நிறுத்தத் திட்டத்தை ஸ்ரீலங்கா ஏற்றுக் கொண்டபோது வடஈழம் யாழ்குடா நாட்டை ''இராணுவ அமைதிப்பகுதி''யாக காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது. ஆதலால் முகாம்களுக்குள் இருக்கும்படி ஸ்ரீலங்கா அரசு, தனது துருப்புகளுக்கு உத்தரவிட்டது. இது தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு வடஈழத்தில் [யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு] அரசியல் தீர்வொன்றை வழங்குவதன் மூலம்'ஈழக்கோரிக்கையை மழுங்கடிக்கலாமென்ற' ஸ்ரீலங்கா அரசின் நீண்ட காலத்திட்டத்தின் வெளிப்பாடாகவும் கொள்ளலாம்.

தென் ஈழத்தில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தை தமிழ் பேசும் மக்களின் தாயகம் இல்லை என்னும் பிரச்சாரத்தையும், தனது பிரச்சார சாதனங்களின் மூலம் வெற்றிகரமாக நடத்துவதற்கு முனைகின்றது. நிலங்கள் அபகரிப்பதை பகிரங்கமாக நடத்தி கொண்டு இருக்கிறது. ஏறத்தாழ சிங்கள மயமாக்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு சமூக விரோத சக்திகளையும், குண்டர்களையும் ஊர்காவல்படை பயன்படுத்துகின்றது. அத்துடன் அப்பகுதியின் இறைமையை (திருகோணமலை) அன்னிய சக்திகளுக்கு விற்றுவிடவும் முயற்சிக்கிறது.

தென் ஈழத்தின் இன்னொரு பகுதியான மலையகத்தின் பிரச்சனைகளை தீர்க்கப் போவதாகவும் வார்த்தை ஜாலம் செய்கின்றது. ''நாலு இலட்சம் பேர் நாடற்றவரான'' அவலம் தொடர்ந்து கொண்டிருக்கையில் 95 ஆயிரம் பேரே நாடற்றவர்களென்று பொய்க் கணக்கு காட்டுகின்றது. இவ்வாறு மலையகத்தின் மீது தனிப்பாசம் காட்டுகின்றது. இவை ஸ்ரீலங்கா அரசின் அரசியல் நாடகங்களாகும்.

## இராணுவ நடவடிக்கை

ஸ்ரீலங்கா அரசானது ஈழ ஆக்கிரமிப்பை நிலை நிறுத்துவதற்காக, ஈழவர் போராட்டத்தை தோற்கடிப்பதற்காக, ஈழத்தை மூன்று துண்டுகளாக பிரித்து தனது இராணுவ தந்திரோபாயங்களை ''மூன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வகையாக மேற்கொண்டு வருகிறது. அது ஈழத்தை 1.குடாநாடு 2. குடா நாடுகள் தவிர்ந்த பகுதிகளும் (மன்னார், வவுனியா, முல்லைத்தீவு) கிழக்கு மாகாணமும், 3. மலையகம்.

## 1. குடாநாடு

இது ஆனையிறவுக்கு மேற்பட்ட பகுதியையே பிரதானமாக குறிக்கின்றது. இங்கு ஸ்ரீலங்கா இராணுவம் ''தற்காலிக பின்வாங்கலில்'' ஈடுபட்டிருப்பது போன்ற தோற்றம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இது ஸ்ரீலங்காவின் அரசியல் நாடகத்திற்கு உதவியாக இருக்கின்றது. ஏனெனில் இங்கு மேற்கொள்ளப்படும் எந்த சிறு இராணுவ நடவடிக்கையும் உலக அரங்கின் கேள்விகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாய் உள்ளது. ஆனாலும் இந்த தற்காலிக பின்வாங்கலுக்கு வேறு காரணங்களும் உண்டு. யாழ்ப்பாணம் (அதாவது குடாநாடு) 'தமிழர்களுடையது' என்னும் எண்ணம் சிங்கள பேரின வாதிகளால் கூட ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. அத்துடன் சிங்கள இராணுவத்தை அவர்களது எதிரிகளான தமிழர்களே முற்றிலும் சுற்றியிருந்தனர். இதனால் இராணுவத்தினால் தன்நம்பிக்கையுடன் மோதலில் இறங்கமுடியவில்லை. தாங்கள் எதிரிகளால் சூழப்பட்டு இருக்கிறோம் என்னும் அச்சம் அவர்களைப் பீடித்திருந்தது. தங்களைவிட போராளிகள் அதிகத் தொகையில் இருக்கிறார்களென்ற மனநிலைப்பாதிப்பும் இந்த தற்காலிக பின்வாங்கலுக்கு காரணங்களாய் அமைந்தன. ஆனாலும் இராணுவ முகாம்களை பலப்படுத்துவதிலும் புதிய நவீன ஆயுதங்களை வழங்குவதிலும், இராணுவத்தை தொகை அடிப்படையில் அதிகரிப்பதிலும் தனது முயற்சியை கைவிடவில்லை. அத்துடன் சிங்களக் காடையர்களை ஏற்றுமதி செய்து குடியமர்த்தவும் முயற்சி செய்கின்றது. அதாவது ''யாழ்ப்பாணத்தை பின்னால் கவனித்துக் கொள்ளலாம்'' என்ற அடிப்படையில் இராணுவத் தந்திரோபாயத்தை வகுத்திருக்கின்றது.

## 2. மலையகம்

இங்கே சில எலும்புத் துண்டுகளை வீசுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம் என்ற பழைய பாணி நடவடிக்கையில் இறங்கிவருகின்றது. குடியுரிமை வழங்கலாம், கூலி உயர்வு தரலாம், கல்வி மருத்துவ வீட்டுவசதிகள் புனரமைக்கலாம் என்ற பசப்பு வார்த்தைகளை பேசுவதன் மூலம் அவர்களின் எழுச்சியை ஈழப் போராட்டத்தில் இருந்து பிரித்து விடலாம் எனவும் முயற்சிக்கின்றது. அதே வேளையில் மறைமுகமாக பொலிஸ் நிலையங்களை பலபபடுத்தியும், ''பாதுகாப்பு கண்காணிப்பு வலையங்களை'' புதிதாக உருவாக்கியும் தனது இராணுவத் தயாரிப்புகளை மேற்கொள்கின்றது. இது மலையகத்தில் மேற்கொள்ளப்படும் இராணுவத் தந்திரோபாயமாகும்.

## 3. கிழக்கு மாகாணமும், குடாநாடு தவிர்ந்த வட ஈழமும்.

இப்பகுதியில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தையே தனது இராணுவ கேந்திர நிலையமாக ஸ்ரீலங்கா அரசு கருதுகின்றது. இங்கு குடா நாட்டைப் போல் தமிழர்கள் செறிவாக இல்லாமல், குடியேற்றத் திட்டங்கள் மூலம் கொண்டு வரப்பட்ட சிங்களம் பேசும் மக்கள் கணிசமாக கலந்து உள்ளனர். ஆரம்பம்முதலே இக்குடியேற்ற திட்டங்கள் திட்டமிட்ட முறையில் அமைக்கப்பட்டதனால் இன்று அவை இராணுவக் கேந்திரங்களாக மாற்றம் பெறுகின்றன. ஆகவே சிங்களப் பேரினவாதம் தனது வலிமையையும் நிலை நிறுத்தும் ''களமாக'' கிழக்கையே கருதுகின்றது. இங்கே தனக்கு ஏற்படும் வெற்றிகள் ஈழப்போராட்டத்தை தோல்வியடையச்செய்யுமென நம்புகின்றது. ஏனெனில் ஈழக் கோரிக்கையும் (வடக்கு, கிழக்கு, மலையகம்), தமிழீழக் கோரிக்கையும் (வடக்கு கிழக்கு) கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கியே உள்ளது. ஆனால் ''தமிழீழவாதிகள்'' கிழக்கில் எந்த வகையில் ''தளம்'' கொண்டுள்ளார்கள் என்பது வேறு விஷயம்.

இங்கு ஸ்ரீலங்கா இராணுவம் இரண்டு விதமான இராணுவ தந்திரோபாயங்களைக் கடைப்பிடிக்கிறது. 1. ஈழவர்களை அப்பகுதியிலிருந்து விரட்டுவது. 2. போராளிகளுடன் நேரடி மோதலில் இறங்குவது இதன் வெளிப்பாடுகளை அண்மைக்கால பத்திரிகைகள், வானொலிச் செய்திகள் ஊடாக கண்டு கொள்ளலாம்.

## ஈழப்போராட்டம் மக்கள் போராட்டமாக பரிணமிக்க..

தென் ஈழப்பகுதியான கிழக்கு மாகாணத்தை அதாவது; திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை ஆக்கிரமிப்பதன் மூலம் இலங்கைத் தீவின் ''ஈழக் கோரிக்கைக்கு பலத்த அடி''யைக் கொடுத்து விடலாம் என்ற நம்பிக்கை ஜே ஆரின் அரசுக்குத்தான் இருக்கிறதென்று சொல்ல முடியாது. காலனி ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த காலத்திலேயே (1948 இற்கு முன்) சிங்களப் பேரினவாதிகள் ஆக்கிரமிப்புத் திட்டங்களை வகுத்து செயலாற்றத் தொடங்கியிருந்தனர். அன்று இவை பொருளாதாரத் திட்டங்கள் என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்டன. இன்று இராணுவமயமாக்கலுக் கூடாக நடைமுறைப் படுத்தப்படுகின்றன. ஈழத்தேசிய போராட்டமானது தன்னை ஆயுதபாணியாக்கத் தொடங்கிய பொழுது குடா நாட்டையே மையப்படுத்தி [தமிழீழவாதிகளின் செயற்பாடுகள்] கூர்மையடைந்ததினால், தென் ஈழத்தில் ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவ மயமாக்கலை இறுக்கமாக்கியுள்ளது.

இந்நிலைமையில், ஸ்ரீலங்கா அரசின் ஆக்கிரமிப்பை முறியடித்து சிங்களப் பேரினவாதத்தின் நோக்கங்களை அம்பலப்படுத்தி தமிழ்பேசும் மக்களான ஈழவரின் இடரைத் தீர்க்க, வெற்றிக்காக போராட எப் போராட்டத்திட்டத்தை நாம் தெரிவு செய்ய வேண்டும்? இவை குறித்து அறிந்து கொள்ளுவதும் அவசியமாகிறது.

1. தாக்குதல்—தப்பித்தல் என்ற இராணுவ தந்திரோபாயத்தை மக்கள் போராட்டமென மயங்கி நிற்கும் சிலர் அதனையே தமது போராட்டத் திட்டமாகவும் பிரகடனம் செய்கின்றனர். ''இராணுவத்தை கதிகலங்க வைப்பதன் மூலம்'' ஸ்ரீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இருந்து ''தமிழீழத்தைக் காப்பாற்றலா?''மென நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இதனால் ஆயுதம் தரித்த இவர்கள் இராணுவத்தைத்தேடி அலைந்து கொண்டு இருக்கிறார்கள். ஆதலால் இவர்களது தாக்குதல்—தப்பித்தல் என்னும் இராணுவத் தந்திரோபாயமானது ''தாக்குதல்'' (offensive) அம்சத்தை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. இங்கே மக்களுக்குரிய தற்காப்பு என்பது நிராகரிக்கப்படுகிறது. இதனால் நிராயுதபாணியான மக்கள் சிங்கள இராணுவத்தின் பழிவாங்கலுக்கு உள்ளானார்கள். இதனால் மக்கள் இடம் பெயர்தலையும், மண்ணில் இருந்து தப்பித்துச் செல்வதையும் போராட்ட எதிர்ப்புணர்வை வளர்த்துக் கொள்வதிலுமே ஈடுபட்டனர். இதனால் இயக்கங்கள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போயின. ஆயுதம் தரித்த இளைஞர்கள் மக்கள்மீது இராணுவத்தனம் புரிந்தனர். இதனையே தற்போது யாழ்குடா நாடு அடையாளம் காட்டுகிறது. இப்போது 'தாக்குதல்—தப்பித்தல்' மக்களுக்கு பரபரப்பை ஊட்டியதேயன்றி, மக்கள் பங்களிப்பை ஏற்படுத்தவில்லை. போராட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேங்கிவிட்டதென்ற மாயையும், சமரசம் செய்து கொள்ளும் மனப்பான்மையையும் தோற்று வித்துள்ளது. இதனை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட, கடல் கடந்த நாடுகளில் வசதியாக வாழ்பவர்களின் எண்ண வெளிப்பாடுகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது. ஆனல் போராட்டம் தேக்கமடைந்து விட்டதா?

2. ஈழம், தமிழர் என்று கூறிக் கொள்ளும் இன்னும் சிலர் மக்கள் போராட்டம் என்று தங்கள் ஏடுகளில் மட்டும் கோஷிக்கின்றனர். செயலில் தப்பித்தல்—தாக்குதலையே அடிப்படையாக கொண்டுள்ளனர். இவர்களது போராட்டத் திட்டத்திலும் ''தாக்குதல்'' உள்ளாம்சமே வெளிப்பாடாகிறது. காரை நகரில் ஒரு தாக்குதலும், அதற்கு தொடர்பில்லாமல் கிளிநொச்சியில் இன்னொரு தாக்குதலுமாக மேற்கொண்ட இவர்கள் தாக்குதல் பற்றிய சுவரொட்டியை வெளியிடுவதன் மூலம் தம்மை பிரபல்யப் படுத்திக் கொண்டனர். மக்களிடமிருந்து அந்நியமாகிப் போயினர். மக்கள் அணி திரட்டலுக்கு எதிராயினர். ஆள் சேர்க்கையை மட்டும் பெருக்கிக் கொண்டனர்.

3. ''மக்கள் போராட்டம்'' என்னும் வார்த்தையை புதிதாக மொண்டு கொண்ட வேறுசிலர், கடல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு தக்க சமயத்தில் படையெடுக்க சேர, சோழ, பாண்டியரைப் போல் ஒரு மாபெரும் சேனையைக் கட்ட முயன்று கொண்டிருக்கிருர்கள். இவர்கள் மக்களிடையே வேலை செய்வது, வாழ்வது என்ற அடிப்படைத் தத்துவங்களை பயனற்ற 'வாய்ச் சொற்' களாக்கிக் கொண்டிருக்கின்றனர். ஆனல் அடிக்கடி ''படையெடுப்போம்'' என்னும் எச்சரிக்கையை மட்டும் உச்சரித்துக் கொண்டிருக்கின்றனர். இது மக்களை ''சும்மா இரு, யாமிருக்க பயமேன்'' என்னும் கனவுலகப் போதைக்குள் தள்ளுவதாகும் தாக்குதல் — தப்பித்தல் என்னும் இராணுவ நோக்கிற்கும், இவர்களது ''மாயாவாத'' நோக்கிற்கும் இடையில் வேறுபாடு கிடையாது. ஏனெனில் தாக்குதல்—தப்பித்தல் நடைமுறையாளர்கள் அதன் பரப்பினூடாக சேனையைத் திரட்டிக் கொள்வார்கள். இந்த ''மாயாவாதிகள் சேனையைத் திரட்டிக் கொண்டதின் பின் இராணுவமாய் மாறுவார்கள். இங்கும் மக்கள் அந்நியமானவர்களே, பார்வையாளர்களே.

**மேற்கண்ட மூன்று இராணுவத் திட்டங்களையும் புரட்சிவாதிகள் (நாம்) நிராகரிக்கிருர்கள். இவர்கள் தங்கள் போராட்டத் திட்டத்தின் கோஷமாக ''பிரச்சாரம், மக்களை அணி திரட்டல், செயற்பாடுகள்'' என முன் வைக்கின்றனர்,**

### பிரச்சாரம் :

மக்களிடமிருந்து கற்றுக் கொண்டவற்றை மீண்டும் ஒழுங்கு படுத்தி கற்பிக்கின்ருர்கள். அரசியலை அம்பலம் செய்கிருர்கள். இவைகளின் ஊடே மக்களை அணிகட்டுகிருர்கள் போர்க்குணமிக்கவர்களாக மாற்றுகிருர்கள். அவர்களின் போராட்ட முன்னெடுப்புக்கு புரட்சிவாதிகள் துணை புரிகிருர்கள்.

### நடவடிக்கைகள் :

இதன் தன்மை வெறும் இராணுவச் செயற்பாடுகளை மட்டும் குறிப்பதல்ல. மக்களின் அணி திரட்டலுக்கான திட்டங்களும், செயற்பாடுகளும், அதற்கான முயற்சிகளும் கூட நடவடிக்கைகளே. இராணுவ செயல்முறை என்பது ''நடவடிக்கையின்'' ஒரு அம்சமே.

ஆதலால் புரட்சிவாதிகள் (நாம்) தமது இராணுவ போராட்டத் திட்டங்களை ''சமூக—பொருளாதார—இராணுவத் திட்டங்களென'' (Social-Economic-Military) பிரகடனம் செய்கின்றனர். இவைகளின் வெளிப்பாட்டையே ''மக்கள் போராட்டமென'' புரட்சிவாதிகள் அறிவிக்கின்றனர். ஆகவே ''பிரச்சாரம்'', ''நடவடிக்கை'' இரண்டுமே ''மக்களை அணி''கட்டுவதற்காகவே. மக்கள் அணி கட்டுவது என்பது ''மக்கள் போராட்டத்துக்காகவே.'' இவர்கள் மக்களுக்கு ''தற்காப்பு—தன்னிறைவு'' (Self Defence, Self Sufficient) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ''சமூக—பொருளாதாரத் திட்டங்களை'' அமைக்க வேண்டுமென்பதற்காகவும், இதனை நிலைப்படுத்தக்கூடிய ''அடிப்படைச் சூழ்நிலைகளை'' (Subjective Conditions) உருவாக்குவதற்காகவும், ஸ்ரீலங்கா அரசினை பலவீனப்படுத்துவதற்காகவும், ''சதிநாசகாரமென்னும்'' (Sabotage) இராணுவத்தந்திரோபாயத்தையும் முன்வைக்கின்றனர். இவ் இராணுவ செயல்பாடும் மக்களை அணி கட்டுவதற்காகவே. இதனுடன் இணைந்து ''தாக்குதல்—தப்பித்தல்'' என்ற நடைமுறையில்லாமல்,

Ambush and Raid என்னும் நடைமுறையையும் மேற்கொள்கின்ருர்கள். இது சிங்களப் பேரினவாதிகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளினல் அகதிகள் முகாமுக்கு செல்லும் மக்களை பாதுகாப்பதற்காகவும், மக்கள் இடம்பெயர்தலை தடுப்பதற்காகவும், மக்கள் அணி திரளுதலை தடுக்கும், ''எதிரியின் நடவடிக்கையை'' முறியடிப்பதற்காகவும், இவ் ராணுவச் செயலை மேற்கொள்கின்றனர். இவ் இராணுவத்தந்திரோபாயம் ''பாதுகாப்பை'' (Defence) உள்ளாம்சமாகக் கொண்டதாகும். ஆதலால் எமது இராணுவ செயல் திட்டமானது பெயரளவில் மட்டும் மற்றைய இராணுவத் தந்திரோபாயங்களோடு மாறுபடுவது மட்டுமல்லாது, உள்ளாம்சமாகவும் மாறுபடுகின்றது. புரட்சிவாதிகளின் திட்டமானது மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கின்றது. மற்றைய இராணு திட்டங்களோ பின்னடைவை ஏற்படுத்துவதுடன் சமரசத்துடன் கூடியதான மக்களுக்கெதிரான அடக்கு முறையையும் கொண்டு வருகிறது. இதனல்தான் ஆயுதம் தரித்த இளைஞர்கள் மக்கள்மீது இராணுவத்தனம் புரிகின்ருர்கள்.

ஆகவே போராளிகள் தமது இராணுவ செயல்பாட்டை மேற்கொள்ளும்போது இலக்குகளை (Targets)கண்டறிந்து, தெரிவுசெய்து அவற்றிடையே தொடர்பானதும், தொடர்ச்சியானதுமான செயல்பாடு மேற்கொள்ளவேண்டும். தமிழ்பேசும் மக்களை பாதுகாக்க, அவர்களுக்கு போராட்டத்தில் நம்பிக்கையை வளர்க்க, அவர்களை அம்மண்ணிலிருந்து பிரிக்க முயற்சிக்கும் சதிகளை முறியடிக்க கூடியதான வேலைத் திட்டங்களை வகுப்பதுடன், புரட்சிகரமாக செயல்படுவதே ஈழப்போராட்டத்தை வெற்றிக்கு அழைத்துச் செல்லும்.

**ஈழம் உருவாக ''மக்கள் போராட்டமே'' மார்க்கம். புரட்சிவாதிகளின் நடவடிக்கைகள் மக்கள் போராட்டத்திற்கானதே.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இஸ்லாமிய பிரமுகர்களின் தமிழக விஜயம்

# ஈழப் போராட்டத்தில் முஸ்லீம்களின் எதிர்காலம்

இலங்கையில் இனப் பிரச்சினை யானது கொழுந்துவிட்டெரியும் இந் நேரத்தில், இறுதித் தீர்வை நோக்கிப் போராட முனையும் தமிழ் பேசும் மக்களில் இஸ்லாமியர்களின் பங்கு இன்றியமையாததாகும். ஈழப் போராட்டத்தில் இவர்கள் தவிர்க்க முடியாத சக்தியாய் விளங்கும் இவ் வேளையில் கடந்த காலங்களில் மத ரீதியாகப் பிரித்து பலவீனமாக்கிய போது அவற்றிற்கெல்லாம் முண்டு கொடுத்து வந்த அரசியல் பிரமுகர்களை இங்கு நாம் இனம் காட்ட விரும்புகின்றோம்.

03 ஆகஸ்ட் 85' அன்று சென்னைக்கு விஜயம்செய்து, ஈழப் போராளிகளுடன் நடத்திய பேச்சுக்களில், இவர்கள் தந்த அபிப்பிராயங்கள் இஸ்லாமிய பிரமுகர்களின் இன்றைய தத்தளிப்பு நிலைமையை நன்கு புரிய வைத்துள்ளது. முஸ்லிம்களின் கடந்த கால அரசியல் வரலாற்றுடன் இவர்களது விஜயத்தையும் இணைத்துப் பார்க்கும்போதுதான் இது துல்லியமாகத் தெரியவரும்.

வரலாற்றுக் காலமாக இலங்கை வாழ் முஸ்லிம்கள் வர்த்தக சமுதாயம் என்று கருதப்பட்டு வந்த போதிலும், உண்மையில் மொத்த முஸ்லிம்களின் சனத்தொகையில் வர்த்தகர்கள் எனக் கூறக்கூடியவர்கள் 5% கூட இல்லை எனலாம். இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் பொதுவாக முஸ்லிம்கள் என்றவுடனே பிரித்தானிய காலனிய கால கட்டத்தில் சேர் வாப்பிச்சை மரைக்காயர், சேர் முகம்மது மாக்கான், அல்ஹாஜ் T.P. ஜாயா, அல்ஹாஜ் அப்துல் கபூர், அல்ஹாஜ் ஹமீம் போன்றோரையும், சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால கட்டத்தில் அவர்களின் வாரிசுகளான, சேர். ராசிக் பரீத், அல்ஹாஜ். மாக்கான் மரைக்காயர் அல்ஹாஜ் கிச்சிலான், அல்ஹாஜ் M. H. முகம்மது, அல்ஹாஜ் முகம் மது ஹமீம், ஜனாப் ஹலீ இஷ் ஹாக், அல்ஹாஜ் பளீல் அப்துல் கபூர், அல்ஹாஜ் அப்துல் கபூர் போன்றோரையும் மனதிற்கொண்டே எம் சமுதாயத்தை நோக்கும் நிலை வழக்கிலிருக்கின்றது. கொழும்பை மையமாக வைத்து இரத்தினக்கல், மேலும் இதுசார்ந்த முதலீட்டில் ஈடுபட்டிருக்கும் இவர்களே இஸ்லாமிய மக்களது ஏகபோக பிரதிநிதிகளாகத் தம்மைத் தாமே மாற்றிக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப காலங்களில் இவர்களது ஆதிக்கம் பெருமளவு இருந்த போதும் 1950 களின் பின் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமியர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் இத்தலைமையின் அழுத்தத்தில் தளர்வைக் கொடுத்தது.

1950 களில் கல்லோயா குடியேற்றத் திட்டமானது அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்கள குடியேற்றங்களுக்கு இடமளித்தபோது திருகோணமலையிலும், அம்பாறையிலும் தமிழரசுக் கட்சி நிலப்பறிப்பு அபாயத்தை வெளிப்படுத்தத் தொடங்கியது. இக்காலங்களில் கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப் பற்று, திருகோணமலைப் பகுதிகளில் இக்கட்சி மேற்கொண்ட பிரச்சாரத்தினால் முஸ்லிம்களும் தமது எதிர்காலத்தின் அபாயத்தை உணரத் தொடங்கினர். இதனால் கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முஸ்லிம்கள் அரசியல் பிரவேசம் செய்யத் தொடங்கினர். இவ்வாறு பரந்து பட்டு வாழும் முஸ்லிம்கள் தத்தமது பிரதேசங்களின் பிரச்சினைகளை மையப்படுத்தி அரசியல் தலைமையை உருவாக்க விளைந்ததால் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் பிரதேச ரீதியான பிரச்சினைகளை மையப்படுத்தியதால் கொழும்பு வர்த்தகத் தலைமை ஆட்டங்காணத் தொடங்கியது.

இதன்காரணமாகவே இலங்கை வாழ் முஸ்லிம்களின் ஏகத் தலைவர் என வர்ணிக்கப்பட்ட சேர். ராசிக் பரீத் 1960 இல் பொத்துவில் தொகுதியில் தோற்கடிக்கப்பட்டார். இதே போன்றுதான் அல்ஹாஜ் மாக்கான் மாக்கார் 1965 இல் நடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பில் தோற்கடிக்கப்பட்டார்.

இவ் வரலாற்றுப் பின்னணி ஈழம் வாழ் முஸ்லீம்களின் பிரதேச ரீதியான அரசியல் விழிப்புணர்வையே உணர்த்துகிறது. இதன் காரணமாகவே பின்னர் உருவாகிய அல்லது அரும்பிய, குறிப்பாகக் கிழக்கு மாகாணத் தலைமை தாம் வாழும் பிரதேசத்தின் அரசியல், பொருளாதார, சமூகப்பிரச்சினைகளை மையப்படுத்தவாரம்பித்தது. இவ் வடிப்படையில் அல்ஹாஜ் காரியப்பர், அல்ஹாஜ் முகம்மது அலி; ஜனாப் அப்துல் மஜீத், ஜனாப் முஸ்தபா, ஜனாப் M. அப்துல் மஜீது, ஜனாப் M. C. அகமது போன்றோர் தந்தை செல்வநாயகத்தின் தமிழரசு கட்சியில் சேர்ந்தே உருவானார்கள்.

ஆயினும் 1965 ஆண்டுக் கால கட்டத்தில் தமிழரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டமைத்து ஆட்சி செய்ய வந்தது முதல் குடியேற்ற பாதிப்புகள் மீது அதிக அக்கறை காட்டாது நழுவத் தொடங்கிய வேளைகளில் இஸ்லாமியரின் ஆதரவையும் விரைவாக இழந்து போனது.

தமிழரசுக் கட்சியின் இந்தப் பலவீனத்தை தமக்கு சாதகமாகப் பயன் படுத்திய ஆட்சியாளர்கள் முஸ்லீம்களின் செயலிழந்த இந்த கொழும்புத் தலைமையை மீண்டும் தூக்கி நிறுத்தத் தலைப்பட்டனர். இவ்வரசியல் மந்தநிலையில் புதிதாக உருவாகிவந்த கிழக்குமாகாண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியல் தலைமையும் கொழும்பை மையப்படுத்தி முதலீட்டில் ஈடுபடத் தொடங்கியது. இருந்த போதிலும் முஸ்லீம்களைப் பொறுத்த வரையில் பிரச்சினைகளை எவ்வாறு பூசிமெழுகிய போதும் உள்ளக முரண்பாடுகள் கொழுந்துவிட்டெரியத் தொடங்கின.

1970-1977 வரை கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்முத் கல்வி அமைச்சராக வீற்றிருந்த காலத்திலேயே நாடு முழுவதும் பத்தொன்பது தடவைகள் இஸ்லாமியர்கள் மீது சிங்களக் காடையர்களும், இராணுவமும் ஏவி விடப்பட்டு பலத்த உயிர், பொருட் சேதங்களை ஏற்படுத்தினர். புத்தளத்தில் பொலிஸ் அத்தியட்சகராக ஜனாப் அப்துல் கபூரும், அத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக ஜனாப் அசன்குத்தூஸும் வீற்றிருக்கையிலேயே பொலிஸ் காடையர்கள் புத்தளம் ஜும் மாப் பள்ளி வாசலுக்குள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் மூலம் பலர் கொல்லப்பட்டனர்.

இவ்வாண்டில் கொம்பனித் தெருவில் நடந்த ஒரு சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயங்களுக்குள்ளாகினர். இவ்வாறான பல சம்பவங்கள் காலி, மடவல, கம்பளை, கண்டி, போன்ற இடங்களில் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுக்கடுக்காய் நிகழ்ந்த இச்சம்பங்களினால் அதிருப்தியுற்ற இஸ்லாமியர்கள் தமது சந்தர்ப்பவாத பிரதிநிதிகள் மீது மீண்டும் வெறுப்புற்றிருந்த நேரத்தில் வடபகுதி இளைஞர்களின் விழிப்புணர்வு நம்பிக்கையூட்டுவதாய் அமைந்திருந்தது. 1970களில் உருவாகிக் கொண்டிருந்த ஆயுதப் போராட்டத்தை மையப்படுத்திய ஈழத் தலைமையை உன்னிப்பாக 'அவதானித்து வந்த முஸ்லீம் இளைஞர்கள் தமது தனித்துவத்தை பேணுவதுடன் உடமைப்பாட்டுக்கான ஈழப் போராட்டத்தை முன்னெடுப்பதில் நாட்டங்கொள்ளலாயினர்.

ஆயுதப் போராட்டத்தை மையப்படுத்திய தமிழ் இளைஞர்கள் மார்க்சிச-லெனினிச அடிப்படையில் ஈழவர்களின் பிரச்சினைகளை அணுகியதுடன் மிதவாத முதலாளிவர்க்க யாழ்ப்பாணத் தலைமையைத் தூக்கி எறிந்ததோடு இஸ்லாமியர்களுக்கும் மலையகத்தவர்களுக்கும், மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்குமுள்ள பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியாக அணுகத் தொடங்கினர்கள். இம் மிதவாதத் தலைமை, இம்மக்களுக்கு இழைத்து வந்த பாரபட்சங்களையும் மற்றும் சாதிப்பிரச்சினை போன்றவற்றையும் அம்பலப்படுத்தியதோடு அவர்களின் இன்னோரன்ன பிரச்சினைகளை ஆராய விழைந்தனர்.

இந்த அடிப்படையில் இவ்விளைஞர்கள் பிரதேச, மத வேறுபாடுகளுக்கு ஆட்படாது மலையகமக்களுக்கும், இஸ்லாமிய மக்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புக்களை கவனத்தில் கொண்டு செயற்பட ஆரம்பித்தனர். 1972இல் காலம் சென்ற சிவகுமாரன் உட்பட 10 இளைஞர்கள் மலையகம் சென்று நிலைமைகளை அறிந்து பிரச்சாரம் செய்ததும், கிழக்கு மாகாணத்தில் சேருவாவில, தீகவாபி சம்மாந்துறை, கல்முனை, புத்தளம் போன்ற இடங்களில் இஸ்லாமியரது பிரச்சினைகளை கருத்தரங்குகள் வாயிலாக விளக்க முற்பட்டதும் கவனிக்கத்தக்கது.

இந்த நிகழ்வுகள் இஸ்லாமிய இளைஞர் மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, கொழும்பை மையமிட்ட இஸ்லாமிய பிரதிநிதிகளது வலிந்த தலைமையை மீண்டும் நிராகரிக்க வைத்தது. இவர்கள் தமது செயற்பாட்டுக்காக "முஸ்லீம் ஐக்கிய முன்னணியை" உருவாக்கலானார்கள். இம் முன்னணியானது தமிழ் ஈழக் கோரிக்கையை வைத்து தேர்தல் களத்துக்கு வந்த் தமிழர் கூட்டணியுடன் ஒப்பந்தம் செய்து தேர்தலில் நின்றது. இத் தேர்தலில் வேட்பாளராக நின்றவர்களில் ஜனாப் இலியாஸ் குறிப்பிடத் தக்கவர். புத்தளத்தில் போட்டியிட்ட இவர் வெற்றிபெருவிட்டாலும் கொழும்புத் தலைமையை முன்நின்று நிராகரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு வர்த்தகத் தலைமையானது ஈழவாழ் முஸ்லிம்களை ஒடுக்கும் சிங்கள-சோவனிச அரசுக்குத் துணை போவது மட்டுமல்ல சர்வதேச இஸ்லாமியர்களின் விரோதியும் சர்வதேச மனிதகுல பொது எதிரியும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாய்களுமான இஸ்ரேலிய சியோனிச வாதிகளுக்கும் துணை போவது மிக வேதனைக்குரிய விடயமாகும். இக் கொடும் செயலுக்குத் தலைமை தாங்குபவர் அமைச்சர் அல்ஹாஜ் M.H. முகம்மது அவர்களேயாகும். இவர் இவ்வெறிநாய்களுக்குத் துணை போவதும் அவர்களின் நலன் காப்பதிலும் நீண்டகால அனுபவம் பெற்றவர். இவர் 1960களில் கொழும்பு மேயராக இருந்தபோது இஸ்ரேலுக்கு விஜயம் செய்து சர்வதேச முஸ்லிம்களைக் காட்டிக் கொடுத்து உலக மக்களின் அவமானச் சின்னமானார்.

இத்தகைய பெருந்தகைதான் தென்ஈழ "இந்து இஸ்லாமிய கலவரத்"தை வெறிகொண்டு நடாத்தியவர். 1985-01-21இல் கொழும்பிலுள்ள லங்கா ஒபராய் ஹோட்டலில் அமைச்சர் முகம்மது மொசாடின் முக்கிய புள்ளியான அவ்வறகாம் சோபி (Avraham Xofi)யைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினர். மேலும் இக்கலவரத்தின் முன் கொள்ளுபிட்டியிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் முன்பாக அமைந்துள்ள இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவிற்கும் பல தடவைகள் சென்று ஆலோசனை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய "பிரதிநிதிகள்" என்று சொல்லப்படுபவர்கள் இவ்வாறு நடத்தப்படுவது ஒருபுறமிருக்க இஸ்லாமிய இளைஞர்களைக் கொண்ட "*தீவிர வலது சாரி*" அமைப்பொன்று இப்போது கொடுங்கோலன் ஜெயவர்த்தனாவால் உருவாக்கப்பட்டு வருகின்றது தவறாக வழி நடத்தப்பட்ட இஸ்லாமிய இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சியையும், ஆயுதங்களையும் சிங்கள இராணுவம் வழங்கி "*ஜிஹாத்*" (புனித யுத்தம்) என்ற பெயரில் அமைப்பு வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களே இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் எதிராக தூண்டிவிடப்பட்டு கலவரங்களை நடாத்துவதற்கு அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகிறார்கள். இது தமிழ்பேசும் மக்களை தமக்குள் மோதவிட்டு பலவீனமாக்க ஆட்சியாளர்கள் செய்யும் சதி நடவடிக்கை என்பது வெளிப்படையானது. அதே வேளையில் ஆழ்ந்த அரசியல் கோட்பாடுகள் எதுவுமின்றி வெற்று இராணுவ வேட்டுக்களிலே ஆர்வம் வைத்து குறைப்பிரசவமான "விடுதலை இயக்க"மென்று தம்மைத் தாமே கூறிக்கொள்ளும் வேறுசிலரும் இந்தக் கலவரங்களுக்கு கால்கோலாக அமைந்துள்ளனர்.

சாதாரண முஸ்லீம் மக்கள் போராட்டத்தில் தமது பங்களிப்பை செலுத்துவதானது தவிர்க்க முடியாதது. தாம் இவ்வளவு காலமும் கொழும்பு தலைமையின் வர்க்க நலத்தால் காட்டப்பட்டு வந்த சிங்கள பெருந்தேசியவாதிகளின் அரவணைப்பில் வாழ்கின்றோம் என்ற மாயை கிழித்தெறியப்பட்டுவிட்டது.

புத்தளம், காலி, கொழும்பு, கண்டி, மடவெல, திருகோணமலை, தீகவாப்பி, கொம்பனிச்சி போன்ற இடங்களில் தலைவிரித்தாடிய இன வெறிக்கும், நிலபொருள் கொள்ளைக்கும் பதில் கூறமுடியாது கையை விரித்த இந்த கொழும்பு வர்த்தக தலைமை, இறுதியாக கொழும்பு வர்த்தகர்களுக்கு பதவிகள் பறிக்கப்பட்டபோதும், கோட்டாக்களில் பாரபட்சம் காட்டப்பட்டபோதும், இறுதியாக சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் தூக்கியெறியப்பட்டபோதும் இந்த பூர்சுவா தலைமையானது கையால் ஆகாததாக வாய்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூடி மௌனியாக இருந்ததை நாம் மறக்கவோ, மன்னிக்கவோ முடியாது.

உண்மை என்னவென்றால் பரந்துபட்டு வாழும் சாதாரண தமிழ் மக்களை தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் சகாக்களும், சந்திரஹாசன்களும் எவ்வாறு பிரதிநிதித்துவப் படுத்தவில்லையோ அதே போன்றுதான் தற்பொழுதுள்ள ''முஸ்லிம் தலைமை'' என தம்மைத் தாமே கூறிக்கொள்வோரும் பரந்துபட்ட சாதாரண முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இதே அடிப்படையில்தான் மலையக மக்களின் தொண்டைமான் கோஷ்டியையும் நாம் நோக்குகின்றோம்.

இந்த அடிப்படையில்தான் இஸ்லாமிய ஒன்றியம், ஜமா-அதே-இஸ்லாமி, இஸ்லாமிய சோஷலிச இயக்கம் போன்ற அமைப்புகளின் ஆய்வுகள் அமைந்திருக்கின்றன. ஈழம் வாழ் முஸ்லிம்களின் (ஜமாஅதே இஸ்லாமியின்) முக்கியமான மாத இதழான ''அல்ஹஸநாத்'' இதனை தெளிவாக வெளிப்படுத்துகிறது. அல்ஹஸநாத் மலர் 15, இதழ் 5 பின்வரும் அறைகூவலை இந்து—கிறிஸ்தவ—இஸ்லாமிய சமுதாயத்தினருக்கு விடுத்துள்ளது.

''.................தூர நோக்கோடு தமிழ்-முஸ்லிம் இளைஞர்கள் செயற்படவேண்டும். ஏனெனில் இரண்டு சிறுபான்மை சமூகத்தின் வீழ்ச்சியானது, இரு சமூகத்தவரும் விரும்பாத பலரும் வருந்தத்தக்க பல விளைவுகளுக்கு வழி ஏற்படுத்தி கொடுத்து விட முடியும். ஏற்கனவே கொடும் மனம்படைத்தோர் அத்தகைய முயற்சிகளுக்கு வித்திட்டு செயற்பட்டு வருவதை அல்ஹஸநாத் மூலம் நாம் பலமுறை எச்சரித்து வந்துள்ளோம். அப்படி ஒரு நிலை தோன்றுமானால் ஒரு தமிழனோ அல்லது முஸ்லிமோ எந்த பெரிய இலாபத்தையும் அடையப்போவதுமில்லை. மாருக மாற்ருரிடம் எதுவித நிபந்தனையுமின்றி மண்டியிட்டு வாழும் நிலையில் உருவாகிவிட முடியும். அதன்பின் கவலைப்படுவதால் எதுவும் நடக்கப் போவதில்லை. இத்தகைய முஸ்லிம் மக்களின் சிந்தனைப்பாடுகளின் தாக்கம்தான் 3 ஆகஸ்ட் 1985 அன்று இஸ்லாமிய பிரமுகர்களை கொண்ட குழுவொன்று விஜயமொன்றை மேற்கொண்டிருந்தது. DR. பதியுதீன் மஹ்மூத், அல்ஹாஜ் S.Z.M. மஷூர் மௌலானு அல்ஹாஜ் ஹமாவி ஹனிபா, அல் ஹாஜ். W.M. அமீர், ஜனுப் M.M. முஸ்தபா, DR. A.M.M. ஷஹாப்டீன் ஜனுப்A.L.A. மஜீத், அல்ஹாஜ் M.M சுஹைர் ஆகியோர் விடுதலை இயக்கங்களின் ''போர்நிறுத்தம்'' ''பேச்சு வார்த்தை'' ஆகியவைகள் இலங்கை அரசியலில் ஏற்படுத்திய சலசலப்பால், ஜெயவர்தன இனப்பிரச்சினையை காகிதச் சட்டங்களை கொண்டு ஒரே இரவில் தீர்த்துவிடப் போகிருர் என்ற பிரமை துளிர்விட்டிருந்தபோது இவர்கள் விடுதலை இயக்கங்களின் எண்ணப்பாடுகளை அறிந்து செல்வதற்காக வந்திருந்தனர். சென்னை வந்த இக்குழுவினர் எதுவித ஏகோபித்த கருத்து எதையும் கொண்டிருக்கவில்லை. இக்குழுவில் மூன்றுபிரிவினர் மூன்றுவிதமான நம்பிக்கையை கொண்டவர்களாக காணப்பட்டார்கள்.

ஒரு சாரார் ஜெயவர்தன இனப் பிரச்சினையை தீர்க்க உண்மையிலேயே தயாராகி விட்டார் என்ற பிரமையில் இருந்தனர். இவர்கள் இஸ்லாமியர் பிரச்சினையில் ஜே.ஆர். எந்தவகையான தீர்வை முன் வைத்தால் உங்களால் ஏற்க முடியுமென வினு எழுப்பினர்.

இன்னொரு சாரார் ஜெயவர்தன மீது நம்பிக்கையற்றவர்களாய், விடுதலை இயக்கங்கள் மீது நம்பிக்கை வைத்து இந்தியாவிற்கூடாக இஸ்லாமியர் பிரச்சினையை இயக்கங்கள் எப்படி அணுகப்பார்க்கிறது என்பதை அறிவதில் ஆர்வம் காட்டினர்.

மீதியானேர் வடக்கு, கிழக்கு, மலையகத்துக்கப்பால் கணிசமான இஸ்லாமியர் இருக்கின்ருர்கள் என்றும் அவர்களை ஈழக் கோரிக்கை திருப்திப்படுத்தாது என்பதை சொல்வதற்காக வந்திருந்தனர். இந்த மூன்று வகையினரின் அடிப்படையையும் கவனித்த பின்னர் ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் தமது கருத்தை தெரிவித்தனர்.

நாங்கள் இன்றைக்கு ஈழப் போராட்டமானது இறுதிக்கட்டத்துக்கு வந்து விட்டதாக எண்ணவில்லை! இந்த முன்னணியில் அங்கம் வகிக்கும் இயக்கங்கள் இதுவரையில் செய்து வந்த அரசியல் இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக சிறிலங்கா அரசு எங்களுடன் பேச வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் தற்போதைய பேச்சுவார்த்தை சந்தர்ப்பத்தை பிரச்சார மேடையாக பயன்படுத்த தீர்மானித்தே செயல்படுகின்ருேம். எமது பிரச்சாரமானது ஜெயவர்தனவின் அட்டூழியங்களை அம்பலப் படுத்துவதாயும், எமது நியாயமான கோரிக்கைகளை உலக அரங்கில் வெளிப்படுத்துவதாயும் அமைந்திருக்கிறது. நாம் இந்த பேச்சு வார்த்தையில் பிரச்சினைகளை தீர்த்து விடுவோமென்று அறவே நம்பவில்லை. J. R. இராணுவத் தீர்விலேயே கண்ணும் கருத்துமாக செயல்படுவது வெளிப்படையானது. நாம் ஈழம் தவிர்ந்த தீர்வெதையும் ஏற்றுக் கொள்ள தயாராயில்லை. ஆதலினுல் ஒற்றை ஆட்சிக்குட்பட்ட தீர்வாக இடைக்கால திட்டமொன்றை முன் வைக்கத் தயாராகவில்லை?

இந்தப் பதிலை புரிந்து கொண்ட இஸ்லாமிய பிரமுகர்கள் பேச்சு சுமுகமாக முடிந்துவிட்டதாக அறிக்கை விட்டுவிட்டு சென்னையிலிருந்து கிளம்பிச் சென்றனர்.

ஈழப்போராட்டத்தில் இஸ்லாமியரின் பங்கு பற்றியும் ஈழக்கோரிக்கை இஸ்லாமியப் பிரச்சினை எந்த அளவுக்கு தீர்த்து வைக்கும் என்பதில் இயக்கங்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு.

ஈழப்புரட்சி அமைப்பானது வர்க்க அடிப்படையில் மலையகம், இஸ்லாமிய, கிறிஸ்துவ, இந்து எல்லா மக்களையும் ஒருங்கிணைந்த அதாவது ஈழவர்கள் என்ற அடிப்படையில் ஒரு பாட்டாளி வர்க்க தலைமையை தோற்றுவிப்பதில்தெளிவாக உள்ளது. ஈழம்வாழ் இஸ்லாமியர்களை போராட்டத்தினூடாக ஸ்தாபனப் படுத்தி அவர்களது அபிலாசையை, அவர்களது தலைவிதியை அவர்களே நிர்ணயிப்பதற்கான ஈழவர் என்ற அடிப்படையில் உருவாகும், கூட்டுத் தலைமையை உருவாக்குவதே ஈரோஸின் கண்ணேட்டமாகும்.

இந்த அடிப்படையில்

''மதத்தால் இந்து ஆனலும்

மாண்பில் முஸ்லிம் என்ருலும்

வேதம் பயிலும் கிறிஸ்தவனும்

தீரச் சைவன் ஆனலும்

ஈழத்தமிழர் ஈழவரே....அவர்

எங்கிருந்தாலும் நம்மவரே

எந்த வனத்தில் வாழ்ந்தாலும்

ஈழத்தமிழர் ஓரினமாம்-

சொந்தம் என்பது உறுதியடா—இது

சோஷலிசத்தின் சுருதியடா''

எனப் பகர்கின்றது ஈரோஸ்.

எனவேதான் ஈழவர்களின் உடைமைப் பாட்டுக்கான போராட்டத்தை மக்கள்-மொழி-நாடு அடிப்படையில் கோருகின்றது. இதனலேயே நாம் ஈழவர் — நமது மொழி தமிழ் — நம் நாடு ஈழம் என ஈழவர்களைத் தட்டியெழுப்புகின்றது ஈரோஸ்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையக மக்கள்



மலையகத் தமிழ் பேசும் மக்கள் தொடர்பான எமது நிலைப்பாடு மிகத் தெளிவானது. தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வளப்படுத்திய மண் அவர்களுக்கே உரியது என்பதும்; ஈழப் போராட்டத்தின் முதுகெலும்பாக அமையப் போகின்றவர்கள் அவர்களே என்பதும்; அம்மக்கள் வாழும் பகுதியை உள்ளடக்கியதே ஈழம் என்பதும் நாம் உரத்துக்கூ[illegible] கருத்துக்களாகும். இந்த மக்க[illegible] பிரச்சனை அரசியல் அரங்கில் [illegible] ரொலிக்கின்றது. சர்வதேச [illegible] 'ஈரோஸ் தோழன்' இ[illegible] மெல்லாம் மலையக மக்க[illegible] விழிப்புணர்வு வளர்ந்து [illegible] ஈழத்தமிழர் [illegible] முறையாக ஏனைய த[illegible] இம்மக்களுக்காக [illegible] 15இல் தமது ஒருநா[illegible] தியாகம் [illegible] துவத்[illegible] மேற் கூ[illegible] லேயே [illegible] வுகள் [illegible] வெளிப்[illegible] இச்சிறு [illegible] வின் நோ[illegible]

நவ[illegible] நிகழ்வின் பின் தொண்[illegible] பதவி அடைந்[illegible] லுள்ள சந்தாப் [illegible] திற்கு [illegible] சட்ட [illegible] இலாவ[illegible] டம்(?) [illegible] றிவித்தார். [illegible] பணத்தி[illegible] களுக்கு [illegible] விளம்ப[illegible] பதவிக்[illegible] தார். [illegible] தொண்டமான் பயங்கர[illegible] பாற்ற[illegible] வின் கூற்[illegible] ஞர்.

இதன் விளைவாக மீண்டும் ஒப்பந்தம் - மீண்டும் நாடுகடத்தல்! தொண்டமானின் பிரார்த்தனை கலந்த வேலைநிறுத்தப் போராட்டம் நிறுத்தப்பட்டது. இலங்கை-இந்திய அரசுகள், மலையகமக்கள் பிரச்சனைக்கு இ[illegible] தீர்வு என அறிவித்தன. [illegible] Solu[illegible]n for all Time) உண்[illegible] நிலை என்ன?

[illegible]மிழ்பேசும் மலையக மக்கள் ஒரு பே[illegible] வர விரும்பியவர்க[illegible] அவர்கள் மத்தியில் [illegible] றடுத்துப் பெருகிய [illegible] நாட்டுப் பாடல்கள் கவிதைகள் க[illegible]தைகள் அவர்களின் [illegible] பிணைந்த [illegible]டுத்துகின்றன.

> [illegible] நாடு—என்
> [illegible] நாடு
> [illegible] நாடு—என்
> [illegible] த வீடு

என்ற, மண்மீது அவ[illegible] உள்ள [illegible]மையைப் [illegible] செய்யும் [illegible]களும்;

> [illegible] நாட்டினிலே
> [illegible] நிதியில்லை
> [illegible]
> [illegible] மையில்லை
> [illegible] கின்றோம்
> ஜென்ம பூமியே

[illegible] அவர்களின் சோகத்[illegible] அந்த மண்மீதுள்ள ஆழ[illegible] நமக்கு துல்லிய[illegible] காட்டுகின்றன.

ஆனால் [illegible] உணர்வு [illegible] கால் [illegible] இரு அரசு[illegible] எங்கோ சந்தித்துப் பேசி [illegible] செய்வது போல் [illegible] நாடுகடத்தலை [illegible] 1964ஆம் ஆண்டு [illegible] ஒப்பந்தம் [illegible] ஆனாலும் பெரும்பான்மையான மக்கள் இலங்கையில் தங்கியிருக்க விரும்பி இலங்கை பிரஜாவுரிமை கோரியே விண்ணப்பித்தனர். மனிதாபிமான அடிப்படையில், மனித உரிமைகளின் அடிப்படையில் இவர்கள் ஏற்கப்பட்டிருக்க வேண்டும். இருந்தும் சிறிலங்கா அரசு இவர்களை கட்டாய நாடுகடத்தல் செய்ய தந்திரமான பல வழிகளைக் கையாண்டது.

மலையக தமிழ் பேசும் மக்கள்மீது மிருகத்தனமான தாக்குதலை கட்டவிழ்த்து விட்டு, அவர்களிடம் 'பாதுகாப்பின்மை', அச்சம் ஆகிய உணர்களை உருவாக்கி இந்தியா செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையை தோற்றுவித்தது.

"இந்தியா[illegible] செத்தாலும் சரி, இலங்கை வெறுத்துப் போச்சு" என்ற தொடர்கள் இவர்களது மனநிலையை பிரதிபலிக்கின்றன. இனக்[illegible] பாதிக்கப்பட்டவர்கள் இரத்தினபுரி, பலாங்கொடை, கண்டி, மாத்தளை போன்ற பகுதிகளில்தான் அதிகம் எனினும், மலையகப் பகுதிகளில் பரந்துகிடந்த மற்றைய பிரதேசங்களில் உள்ளவர்களுக்கும் தாங்கள் "சமூகப் பாதுகாப்பற்ற" நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது உணர்த்தப்பட்டது. இவர்கள் வாழும் பிரதேசங்களின் மத்தியில் புதிய சிங்களக் கிராமங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 'நட்சா' என்ற மாற்றுப் பயிர்ச் செய்கைத் திட்டம்மூலம் இவர்கள் அடித்துத் துரத்தப்பட்டு சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டார்கள். இந்நிலையில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இலங்கையை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்ற உணர்வு தோன்றியது.

இந்நிலைமையை அவர்கள் அடைய வேண்டுமென்பதே இலங்கை ஆளும் வர்க்கத்தின் தேவையாக இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழகத்தில் தேனும், பாலும் ஓடுவதாக தொண்டமான் போன்றோர் மூலம் பொய்ப்பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. சிலசமயங்களில் போலிப் புகைப்படங்களைக் காண்பித்து, தமிழகத்தில் இவர்கள் வருகையை எதிர்பார்த்து கட்டப்பட்டுள்ள வசதியான வீடுகள் இவையென இம்மக்கள் ஏமாற்றப்பட்டனர்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் சில விதிமுறைகளைப் பாவித்து மலையக தமிழ் பேசும் மக்களின் இலங்கைப் பிரஜைக்கான விண்ணப்பங்களை நிராகரித்தமை அல்லது விண்ணப்பங்களை பரிசீலிப்பதில் காட்டிய நியாயமற்ற வீண் காலதாமதம். இவ்வாறு பல்லாயிரக்கணக்கான விண்ணப்பங்களை நிராகரித்ததென சிறிலங்கா அரசே ஒத்துக்கொண்டுள்ளது. (15-01-86 வெளிவந்த சிறிலங்கா அரசின் பத்திரிகைக் குறிப்பு) இவ்வாறு செய்வதன் மூலம் இந்தியப் பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. கொடிகாராவின் கூற்றுப்படி (INDO-CYLON RELATIONS SINCE INDEPENDENCES — U. S. KODIKRA) 1937 இல் இருந்து பெருந்தோட்டங்களுக்கு இந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் திரட்டப்படவில்லை. மற்றொரு புள்ளிவிபரப்படி மலையகத் தொழிலாளர்கள் 50 விகிதமானோர் பிரசா உரிமைச் சட்டங்கள (1948-1949) இயற்றப்பட்ட காலகட்டத்தில் கூட ஒருபோதும் இந்தியா சென்றதில்லை. வணிக வட்டங்களைச் சேர்ந்தவர்களே அடிக்கடி இந்தியா சென்று திரும்பினர். இம் மக்களில் பெரும்பாலானோர் இலங்கையில் நிலைபெற்று விட்டனர். 1920 ஆம் ஆண்டளவிலேயே இந்தியாவுடன் ஒப்பந்தங்களை துண்டித்த ஒருபகுதியினர் இங்கு நிலையாக வாழத் தொடங்கினர். (ஆதாரம்:- பொருளியல் நோக்கு, மார்ச் 1980) சோல்பெரிக்கமிஷன் இவ்வாறு நிலைபெற்றவர்கள் 80% என மதிப்பிட்டது.

சிறிமா-சாஸ்திரி உடன்பாடு தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள தொடர்பாக, இந்தியா செய்த உடன்பாட்டை விட மிகவும் மோசமானது; அந்த வகையில் தென்னாப்பிரிக்க அரசு, இலங்கை அரசை விட நாகரீகமாக நடந்துள்ளது. ஆரம்பத்தில் ஸ்மட்ஸ்காந்தி (SMUTS—GANDHI) உடன்பாட்டில் கூட கட்டாய நாடுகடத்தலுக்கு (COMPULSARY REPATRIATION) இடமிருக்கவில்லை. தாமாகவே முன் வந்து இந்தியா செல்ல முன்வந்தவர்க்கே வசதிகள் (VOLUNTIARY REPATRIATION) இதில் செய்யப்பட்டன. ஆனல் இதுகூட வெற்றியளிக்காத போது இன்னொரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன்படி தாயகம் பெயர்வோர் (REPATRIATES) என்ற சொல்லுக்குப் பதிலாக ஒத்தாசையோடு நாடு விட்டேகுவோர் (ASSITED REPATRIATES) என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இதன்படி தென்னாப்பிரிக்காவில் பிறந்தவர் அந்நாட்டு குடிகள் என்றும் இந்தியா போக விரும்புவோருக்கு தென்னாப்பிரிக்க அரசு உதவிகள் ஊக்கங்கள் அளிக்கும் என ஏற்பாடு செய்யப்பட்டது. இவ் ஏற்பாடுகளினல் அங்கு கட்டாய நாடு கடத்தலுக்கு இடமிருக்கவில்லை. இவ்வேற்பாடுகள் கூட இலங்கை அரசினல் கடைப்பிடிக்கப்படவில்லை. மேலும் இவற்றைவிட 1948 டிசம்பர் 10 ஐ. நாவில் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் சாசனத்தையும் சி. சா (S.S.) ஒப்பந்தம் மீறியதாக அமைந்துள்ளது. (ARTICLE IS EVERY ONE HAS THE RIGHT TO A NATIONALITY NO ONE SHALL BE ARBITRAILY DEPRIVED HIS NATIONALITY NOR DENIED THE RIGHT TO CHARGE HIS NATIONALITY எனவே தான் சி. சா. ஒப்பந்தம் தென்னாப்பிரிக்காவின் கறுப்புச் சட்டங்களை விட மோசமானது. இவ் ஒப்பந்தம் மனிதகுல மனசாட்சிக்கே களங்கம் கற்பிக்கின்றது எனக்கூறி, இவ் ஒப்பந்தத்தை புதுப்பிக்க வேண்டாம் என நாம் கோரிக்கை விடுத்தோம். ஆனலும் ஒப்பந்தம்புதுப்பிக்கப்பட்டுள்ளது.

## தற்போதைய நிலை என்ன?

இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவோரைத் தவிர ஏனையோரை இலங்கை ஏற்றுக்கொள்ளுவதாக உறுதியளித்துள்ளது. (இது தொடர்பாக புள்ளி விபரங்களில் குழப்பம் உள்ளது. ஏறத்தாழ 5 லட்சம் பேர் வரை இன்று நாடற்றவராக இருக்கின்றனர். இப்பிரச்சனை எவ்வாறு 18மாதங்களுள் தீர்க்கப்படும் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விஷயம்). ''வாக்குரிமை'', ''பிரஜாவுரிமை'' பிரச்சனைகள் தீர்க்கப்பட்டதாக பெரும் பிரச்சாரம் நடக்கின்றது ஆயினும் இவ் 'வாக்குரிமை' தொடர்பாக சிலவற்றை குறிப்பிட வேண்டியிருக்கிறது. (வாக்குரிமை பயன்படுத்தப்படக்கூடிய ஜனநாயகச் சூழ்நிலை சிறீலங்காவில் இல்லையென்பதும் சிங்கள மக்களுக்கே தமது வாக்குரிமையை முறையாக பயன் படுத்தக் கூடிய வாய்ப்பு வருடக்கணக்காக மறுக்கப்பட்டுள்ளதும், தமிழர்களும் அவர்களது 'பாராளுமன்றப் பிரதிநிதிகளும்' தமது வாக்குரிமையை என்ன செய்வது என திகைப்பதுவும், ஏற்கனவே வாக்குரிமை பெற்ற மலையக மக்கள் கலவரங்களால் இடம் பெயர்ந்து அகதிகளாக இருப்பதையும் ஒரு பக்கத்தில் வைத்துவிட்டுப் பார்ப்போம்!)

மலையக தமிழ்பேசும் மக்களுக்கு வாக்குரிமையை ஏதோ 'தான தருமம்', படியளப்பது போன்ற பாணியில் வழங்கப்பட்டிருப்பதாக நிலவும் கருத்தை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். இந்த மக்களுக்கு ஏற்கனவே வாக்குரிமை இருந்ததும், அதனை அவர்கள் 'மேட்டுக்குடி அறிவுஜீவிகள்' எதிர் பார்த்ததற்கு மாறாக மிகவும் அறிவு சார்ந்த முறையில் பயன்படுத்தியதும் வரலாறு. 1947 இல் இலங்கையில் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் 7 மலையக தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதை விட பல தொகுதிகளில் இடதுசாரிகள் வெற்றிபெறுவதற்கு இவர்களின்வாக்குகள் காரணமாக அமைந்தன. A.J. வில்சனின் கூற்றுப்படி மலையகத் தமிழ்ப்பேசும் மக்கள் 20 தொகுதிகளில் வெற்றியை நிர்ணயிக்கும் சக்திகளாக விளங்கினர். மேலும் கண்டியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் இடதுசாரி வேட்பாளர் டி.பி. இலங்கரத்ன U.N.P. வேட்பாளரை தோற்கடித்து வெற்றியீட்டினர். இவர் ஒரு இடதுசாரி வேட்பாளர் (ஆனல் இவர் பின்னல் SLFP யிலிருக்கும்போது மலையகத் தமிழர்க்கு எதிராக மாறியது வேறு விஷயம். ஆனல் வியப்பான விஷயமல்ல) இதனல் வெகுண்டெழுந்தார் அப்போதைய முதலாளிய நலன் பேணும் அரசின் பிரதமமந்திரியான D. S. சேனநாயக்க அவரைப் பொறுத்த வரை அவர் இவ்விஷயத்தில் தீர்க்க தரிசனம் கொண்டவராக இருந்தார். இந்த ரீதியில் மலையகமக்கள் செயல்பட்டால் ஏற்படும் அபாயத்தை அவர் புரிந்து கொண்டார். இடதுசாரிகளின் ஆதரவு பெருகுவதையும் அணிதிரட்டப்பட்ட, விழிப்புணர்வு கொண்ட சக்தியாக இவர்கள் உருப்பெறுவதை தடுக்கவும் தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவாவதை தடுக்கவுமே இம்மக்களின் பிரசாவுரிமையும் வாக்குரிமையும் தட்டிப்பறிக்கப்பட்டது.

ஆனல் இன்று திரும்பவும் இந்த உரிமைகளை வழங்க வந்ததிற்கு காரணங்கள் உண்டு. இதில் பிரதானமானது தொண்டமான் பதவியில் ஒட்டி இருக்கும் வரை இம் மக்களின் பெரும்பான்மை வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் தமக்கேகிடைக்கும் என்பதும், தமிழ் மக்களின் பிரச்சனையுடன் மலையக மக்கள் பிரச்சனை மேலும் மேலும் இறுகுவதை தடுத்து, அதனை பிரித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈரோஸ் அறிக்கை

### பேச்சு வார்த்தை ஓர் மூடுதிரை :

ஜே. ஆர். ஜயவர்த்தன. அத்துலத் முதலி ஆகியோரின் சமீபத்தைய பேச்சானது கடன் வழங்கும் நாடுகளின் அபிமானத்தை பெறுவதற்குரிய தந்திரோபாயமாகும். 1984-ம் ஆண்டு வட்ட மேஜை மாநாடு, இரண்டு கட்டங்களில் நடந்த திம்புப் பேச்சு வார்ததை ஆகியவற்றின் மூலம் எவ்வித பெறு பேறுகளும் ஏற்படவில்லை. வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்குரிய சாதன மாக இதனைப் பயன்படுத்தி வந்த ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவ விவகாரங்களுக்கு இந்த உதவிகளைப் பிரயோகித்து வந்தது. ஆயினும் ஸ்ரீலங்கா அரசினது ஏமாற்று நடவடிக்கைகளை நன் குணர்ந்த மேற்கத்தைய நாடுகள் ஸ்ரீலங்கா அரசுடனான பொரு ளாதார உறவுகளை துண்டிக்க ஆலோசிக்கலாயின.

ஈழப் புரட்சி அமைப்பானது, ஈழப் பிரதேசத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களை இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலிருந்து பாதுகாக்கவேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. அத்துடன் காகித சட்டங்களாலோ அல்லது முரட்டுத்தனமான இராணுவ நடவடிக்கைகளினாலோ மலையக மக்களின் இறைமை பாதிக்கப்படுமாயின் அதை முறியடிப்பதற்கான சகல நடவடிக்கை களையும் மேற்கொள்ளும்.

ஜெயவர்த்தனாவின் வழமையான மேலாதிக்க ஏமாற்று சமரச நடவடிக்கைகளினால் ஏமாற்றப்படாதிருக்க அனைவரையும் வேண்டு கிறோம். இப்படியான படுமோசமான ஏமாற்று நடவடிக்கைகளைச் செய்துவரும் பெருந்தேசியவாத அரசுக்கு எதிரான எமது நீதியான போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு அனைவரையும் வேண்டு கிறோம்.

தனியாக்கி நசுக்கவும் செய்த முயற்சியே இது. ஆனல் இந்த முயற்சியில் ஜே. ஆரும் அவரை தலைமேல் வைத்து போற்றித் துதி பாடும் தொண்டர் தொண்டமானும் வெற்றிபெறு வார்களா ?

நாம் இன்று உறுதியாக கூறு கின்றோம் மலையக தமிழ்ப்பேசும் மக்கள் பிரச்சனைதீரவில்லை! இப் போதுதான் அது வெளிப்பட ஆரம் பித்துள்ளது. இன்றைவரை இவர் கள் பல போராட்டங்களில் ஈடுபட்டு தமது வீரம் செறிந்த போர்க் குணத்தைக் காட்டியபோதும் பெரும் பாலும் 'நீறுபூத்த நெருப்பாக' அமைதியாக இருந்தனர். இதற்கு பிரதான காரணம் — பொதுவாக மலையக தமிழ் பேசும் மக்களிடையே நிலவிய ஒரு 'தாழ்வு மனப்பான்மை' ஆகும். ஏனைய தமிழ்மக்க ளோடு தாம் இணைய முடியாத வர்கள். நாடற்றவர்கள், நவீன அடிமைகள் என ஏங்கி வாடினர்; வருந்தினர்.
ஆனல் இன்று ?

இலங்கை இந்திய அரசுகள், போதாக் குறைக்கு தொண்டமான்- இவர்கள் யாவருக்கு பிரஜாவுரிமை யும் வழங்கப்பட்டதென பூதாகர மாக சித்தரித்து பெரும் சாதனை இயற்றியதாக மார்தட்டிக்கொண் டுள்ளனர். ஆனல் இவர்கள் எதிர் பாராத எதிர் விளைவு - தாம் வாழும் மண்ணை விட்டகல இனிமேல் இம் மக்கள் விரும்பார் என வெளிப்படுத் தியாகும்.

இயல்பாகவே போர்க்குணமிக்க பாட்டாளிகள் மலையக மக்கள். அவர்களின் அறிவு இன்று விழிப் படைந்து வருகிறது. இதன்விளைவை நாம் அண்மையில் நேரடியாகவே காண்கிறோம். அண்மைக் கலவரங் களில் தலவாக்கொல்லை, ஹற்றன், கினிக்கொல்லை பகுதிகளில் மக்கள் தாமாகவே அணிதிரண்டு தோட்டங் களில் படைப்பிரிவுகளை ஏற்படுத் தினர். தமது சொந்த உபகர ணங்களை கைகளில் ஆயுதங்க ளாக எடுத்துக் கொண்டனர். வீதிகளில் வழித்தடைகள் போடப் பட்டது. வழமைக்கு மாருக அரச மையங்கள் சேதப்படுத்தப்பட்டன. போலீசார் கடத்தப்பட்டு ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இளைஞர்களை கைது செய்து சென்ற ராணுவ வாகனத்தை குறுக்கே மறித்து இளைஞர்களை விடுதலை செய்தபின்னரே வாகனத்தை நகர அனுமதித்தனர். பொலிசாரின் துப் பாக்கிகளும் பிடுங்கப்பட்டன. தோட்டப்பகுதிகளில் இருந்து ராணு வம் பின்வாங்கியது. வரலாறு திரும்புபம் மாற்றப்படுகின்றது. புவி யியல் அமைப்பிலான இயற்கை அரண் காரணமாக இராணுவம் மலையேறத் தயங்குகின்றது. முனைப் பாக போர்க்குணம்சத்தை இயல் பாகக் கொண்டுள்ள ஒடுக்கப்பட்ட இம்மக்களது கிளர்ச்சி இயல்பான மக்கள் போராட்டமாக வெளிப் படுத்தப்படுகிறது.

ஈரோஸ் அமைப்பே இதற்குப் பொறுப்பென பிரதமர் பிரேமதாச தனது பிரேமையை வெளிப்படுத்து கிறார். ஸ்ரீமான் தொண்டமானை மலை யேற்றி அமைதியை ஏற்படுத்த பகீரதப் பிரயத்தனம் அரசால் மேற் கொள்ளப்படுகிறது. அப்பட்டமாக அசடுவழியும் அரசின் நிலை உலகெங் கணும் படம்பிடிக்கப்படுகிறது.

நாம் ஈழவர், நமது மொழி தமிழ், நம்நாடு ஈழம் என்ற ஒரு மித்த பதாகையின்கீழ் அணிதிர ளும் ஈழவர் போராட்டத்தின் முது கெலும்பு மலையகத் தமிழ்ப்பேசும் மக்களே-இவர்களின் போராட்டம் ஈழப்போராட்டமாக... ஈழவரின் இடர் தீர்க்கும் போராட்டமாக வடிவம் பெறும். அப்போது ஈழத்தின் விடிவு நாளாகவும் எமது மக்களின், சமுதாயத்தின் மாற்றத் தின் முதற்படிக்கல்லாகவும் அமை யும்-இதை நோக்கிய எமது பயணம் தொடரப்படும் உறுதியான எமது போராட்டத்தை செழுமைப்படுத்த ஒவ்வொரு கணத்தையும் ஆக்கப் பூர்வமாகப் பயன்படுத்துவோம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திம்புவில் நடந்தவை

## 8 - ஆடி - 1985

ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக பூட்டானின் தலைநகரமான திம்புவில் நடந்த முதற்கட்டப் பேச்சு வார்த்தையில் **போராட்ட அமைப்புகள்** EROS, L.T.T.E, TELO, EPRLF, PLOTஇல் இருந்து இருவர் வீதமும், த.வி.கூ சார்பில் மூவரும், ஸ்ரீலங்கா அரசு சார்பாக H.W. ஜெயவர்த்தன தலைமையில் ஒரு குழுவும் கலந்து கொண்டது. முதல் நாள் பேச்சு வார்த்தை சம்பிரதாய பூர்வமாக, ஆரம்பித்து சிலமணி நேரம் நடந்தது.

## 9 - ஆடி - 1985

இன்று H.W. ஜெயவர்த்தன வால் முன்வைக்கப்பட்ட நான்கு அம்சத் திட்டமும், அதிகாரப் பரவலாக்கம் பற்றிய பிரேரணைகளும் தமிழ்க்குழுக்களினல் நிராகரிக்கப்பட்டு, முதற்கட்டமாக 'போர் நிறுத்த ஒப்பந்தத்தை' அமுலாக்குவதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டார். மாலையில் நடந்த கூட்டத் தொடரில் ஸ்ரீலங்கா அரசினல், 1197 பேர் தடுப்புக் காவல் கைதிகளில் (போராளிகளின் கணிப்பின்படி 2500க்கு மேல்) 643 பேர் விடுதலை செய்யப்படுவார்களென்றும், புதன் கிழமையிலிருந்து யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது. H.W. ஜெயவர்த்தன அறிவித்த பிரேரணையில், மாகாண மட்டத்திலுள்ள அதிகாரப் பரவலாக்கம் சர்வகட்சி மகாநாட்டில் முன் வைக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஒத்ததாகவிருந்தது. EROS ஐச் சார்ந்த தோழர் சங்கர் அவர்கள் ஸ்ரீலங்கா அரசின் போர் நிறுத்த மீறல்களைப் பற்றி உரையாற்றினர்.

## 10 - ஆடி - 1985

சர்வகட்சி மாநாட்டில் தாம் பங்கு பற்ருத காரணத்தால், H.W. ஜெயவர்த்தனவால் முன் வைக்கப்பட்ட மாவட்ட ரீதியிலான அதிகாரப் பரவலாக்கம், மற்றும் மாகாணசபைப் பிரேரணைகள் பற்றி ஆராய, ஈழவிடுதலைப் போராளிகள் ஒரு நாள் அவகாசம் கேட்டனர். அத்துடன், தாம் ஈழக் கோரிக்கையையோ, ஆயுதப் போராட்டத்தையோ கைவிட்டு இப்பேச்சு வார்த்தைக்கு வரவில்லையென்றும், ஸ்ரீலங்காவின் புதிய, ஆக்கபூர்வமான பிரேரணைகளைப் பற்றி அறிய வந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

## 11 - ஆடி - 1985

இன்றைய பேச்சு வார்த்தையில் ஆனி 18 இல் நடைமுறைக்கு வந்த போர் நிறுத்தம், நான்கம்ச சமாதானத் திட்ட அமுலாக்கம் பற்றிய கேள்விகளும், எதிர் வாதங்களும் பரிமாறப்பட்டன. மன்னர் மாவட்டத்தில் July 6 ஆம் திகதி ஒரு தமிழ்ப் பெண்மணி இராணுவத்தால் கற்பழிக்கப்பட்டாரென்றும், ஸ்ரீலங்காவினல் புதிதாகச் சீன பீரங்கிப் படகுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதென்றும், தமிழ்ப் போராளிகள் குற்றஞ் சுமத்தினர். H.W. ஜெயவர்த்தன பேசுகையில், 'தன்னல் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்டு, அதிகாரப் பகிர்விற்கான கூறுகளை விவாதிப்போமென்றும், இவ்வதிகாரப்பகிர்வு, அரசினல் மக்கள் முன் சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடப்படுமெனஞர்.

ஈழப் போராளிகளைப் பொறுத்த வரையில், தமக்கு இது ஒரு விடயமல்லமெனவும், 'உறுதியான, புதிய ஆரோக்கியமான பிரேரணைகளையே கொழும்பு முன்வைக்க வேண்டுமெனவும்' கேட்டுக் கொண்டனர். அவ்வேளை, ஜனதிபதி ஜெயவர்த்தனவை கொலை செய்ய முயன்றதாக செய்தியொன்று கொழும்பிலிருந்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. பேச்சுவார்த்தையிலேற்பட்ட திடீர் நெருக்கடியால் திரு. பண்டாரி அவர்கள், இந்திய அரசினல் உடனடியாகத் திம்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

## 12 - ஆடி - 1985

இன்றைய கூட்டத்தில் ஜனதிபதி கொலைமுயற்சி சம்மந்தமாக தம்மேல் சுமத்தப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டை வன்மையாகக் கண்டித்த ஈழப் புரட்சி அமைப்பின் (EROS) பிரதிநிதிகள், தமது மறுப்பைத் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து, H.W. ஜெயவர்த்தனவினல் முன் வைக்கப்பட்ட மாவட்ட, மாகாண அதிகாரப் பரவலாக்கப் பிரேரணை, தமிழ் பேசும் மக்களின் அற்ப, சொற்ப அபிலாசைகளையும் பூர்த்தி செய்யவில்லையெனக் கூறிய தமிழ்க் குழுக்கள் அதனை முற்ருக நிராகரித்தனர். இருப்பினும், H.W. ஜெயவர்த்தன, அதிகார விரிவாக்கம் பற்றியும், 'பிரதேச மண்டலத்'தின் செயல் திட்டம் பற்றியும், இடைநிலைச் சபைபற்றி ஸ்ரீலங்காவின் கருத்தை வெளியிட்டார். **முதலாளித்துவ அமைப்பை, அடிப்படையாகக் கொண்ட, ஸ்ரீலங்கா அரசியலமைப்பு மாருதவரை, அதிகார பரவலாக்கம் பற்றிய பேச்சுவார்த்தை அர்த்தமற்றதென EROS ஐச் சார்ந்த தோழர் சங்கர் கூறினர்.**

## 13 - ஆடி - 1985

அன்று நடந்த கூட்டத்தில் H.W. ஜெயவர்த்தன பேசுகையில், தனது பிரேரணைகள் திருத்தி அமைக்கப்பட முடியுமென்றும், பரவாலாக்கலிலுள்ள பல்வேறு கூறுகளின் அதிகாரங்களும், செயல் திட்டங்களும் பரந்த அளவில் பரிசீலிக்கப்படுதல் நன்மை பயக்குமெனவும் கூறினர்'. தனது பிரேரணைகளை ஏற்றுக் கொள்ள முடியாத பட்சத்தில், தமிழ்ப் பிரதிநிதிகள் தமது மாற்றுப் பிரேரணைகளைத் தெரிவிக்கலாமெனக் கேட்டுக் கொண்டார்.

'தாம் எந்தவிதமான தீர்மானங்களுடனே அல்லது உடன்பாடுகளுடனே இங்கு வரவில்லையென்றும், தமிழ்ப் பேசும் மக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நியாயபூர்வமான எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யக் கூடிய பிரேரணை களை ஸ்ரீலங்கா அரசு முன் வைக்க வேண்டுமெனத் தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இருப்பினும் திரு. H.W.J. இன் வேண்டுகோளை ஏற்று, தமிழ்க்குழுக் களினால் நான்கு அடிப்படைக் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

1. தமிழ்ப்பேசும் மக்களின் தேசிய தனித்துவத்தை அங்கீகரித்தல்.

2. தமிழ்பேசும் மக்களின் பாரம் பரிய பிரதேசத்தை ஏற்றுக் கொள்ளல்.

3. சுய நிர்ணய உரிமையை அங்கீ கரித்தல்.

4. ஸ்ரீலங்காவை தாயகமாக வரித் துக் கொண்ட சகல தமிழ் பேசும் மக்களின் பிரஜாவுரிமையை ஏற்றல்.

ஆறு நாட்களாகத் தொடர்ந்த திம்பு முதலாம் கட்டப் பேச்சு வார்த்தை முடிவடைந்து திரும்பவும் ஆவணி 12ம் திகதி ஆரம்பிப்பதென சகலராலும் முடிவு செய்யப்பட்டது.

## 14-ஆடி-1985

திம்பு மகாநாட்டைப் பற்றி, ஸ்ரீலங்கா அரசு வெளியிட்ட முதலா வது உத்தியோகபூர்வ அறிக்கை யில், 'அரசாங்கம் முன்வைத்த நடுத் தர, அடிமட்ட அதிகாரப் பரவ லாக் கம் பற்றிய பிரேரணைகள், அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவுமெனவும், நாட்டின் அரசியல், அரசியலமைப்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு நிரந்தர தீர்வை அடையவேண்டுமெனில், இம் முயற்சி தொடரவேண்டுமெனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

திரு. பண்டாரி அவர்கள் ஸ்ரீலங்கா குழுவையும், தமிழ்க்குழு வையும் சந்தித்துப் பேசினர்.

## 15-ஆடி-1985

திரு. ராஜீவ்காந்தி திம்பு மாநாட்டைப் பற்றிக் குறிப்பிடுகை யில், 'இப்பேச்சு வார்த்தையில்தான் நன்னம்பிக்கை கொண்டிருப்பதாக வும், ஸ்ரீலங்காவின் இனப் பிரச்சி னைக்கு ஒரு இணக்கமான தீர்வை இது தருமென்றும்' தெரிவித்தார். 'இந்தியாவின் நிலைப்பாடானது, பேச்சு வார்த்தை முறிவடையாமல் இரு பகுதியினரையும் ஒரு நிலைக்குக் கொண்டுவருவதென்றும், சிறீலங்கா அரசுடன் இப்பிரச்சினைக்கான உடன் பாட்டினை ஏற்படுத்துவது தமிழ்க் குழுவினர் தீர்மானிக்க வேண்டிய விடயமென்றும், இருவருக்குமிடை யே பிரதேச சுயாட்சி பற்றி விடயங் கள் விவாதிக்க வேண்டுமெனவும் கோடிட்டுக் காட்டினர்.

## 17-ஆடி-1985

முதற் கட்டத் திம்பு பேச்சுவார்த் தை பற்றி, ஸ்ரீலங்கா அரசின் உத்தி யோக பூர்வப் பேச்சாளர் ஆனந்த-டி-அல்விஸ் கூறுகையில், 'தமிழ்க்குழு வினால் முன்வைக்கப்பட்ட அடிப் படைக் கோரிக்கையான 'சுயநிர் ணய உரிமை', 'பாரம்பரிய பிரதே சம்' என்பன, ஒன்றுபட்ட, ஒற்றை யாட்சி முறைக்கு முரணாகவும், ஒவ் வாததாகவும் உள்ளதென்றார். அத் துடன், ஸ்ரீலங்காவிலுள்ள முஸ்லிம் கள், இந்தியத் தமிழர் உள்ளிட்ட 2.5 மில்லியன் தமிழ் பேசும் மக்க ளின் சார்பாக, இத்தமிழ்க் குழுவி னர், திம்பு மாநாட்டினில் பிரதிநிதித் துவப்படுத்துவதை அங்கீகரிக்க மறுத்தார்.




நன்றி: தி ஐலண்டு

## 12 ஆவணி 1985

கடந்த முதற்கட்டப் பேச்சு வார்த்தையில் ஆறு அமைப்புக்களால் முன் வைக்கப்பட்ட 'நான்கு அடிப் படை கோரிக்கை'களும் H.W. ஜெய வர்த்தனவினால் முற்றாக நிராகரிக்கப் பட்டது. பிரஜாவுரிமை பற்றிப்பேச, பேச்சு வார்த்தையில் கலந்து கொள் ளும் எந்த வொரு அமைப்பிற்குமே உரிமையில்லையென்று ஸ்ரீலங்கா பிரதிநிதி வாதிட்டார். இதைத் தொடர்ந்து கூட்டம் குழப்பமான நிலையில் முடிவுற்றது.

## 13 ஆவணி 1985

H.W. ஜெயவர்த்தனவின் 'நிரா கரிப்பிற்கு' பதிலளித்துப் பேசிய தமிழ்ப் பிரதிநிதிகள், 'அர்த்தபூர்வ மான உடன்பாடுகள், தமிழ் பேசும் மக்களின் பிரிக்க முடியாத உரிமை களை அங்கீகரிப்பதன் மூலமே ஏற்படு மென்று' வலியுறுத்திக் கூறினர். பின்னர் தம்மால் முன்வைக்கப்பட்ட நான்கு அம்சக் கோரிக்கையை விளக்கி, தமிழ்ப்பிரதிநிதிகள் சார்பில் தோழர்இரத்னசபாபதி,தோழர் கேதீஸ் வரன், திரு. அமிர்தலிங்கம், திரு. சிவசிதம்பரம் ஆகியோர் ஒரு. அறிக்கையை வெளியிட்டனர்.

## 14 ஆவணி 1985

H. W. ஜெயவர்த்தனவால் நான்கு அடிப்படைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து ஒவ் வொரு தமிழ்க்குழுக்களின் பிரதிநிதி களும் பதிலளித்துப் பேசினர். 'இப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட தமிழ்ப் பிரதிநிதிகள் குழுக் கள், தமிழ்பேசுப் மக்களின் ஒரு பகுதி யினரை மட்டுமே பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும், இவர்களை தமிழ் பேசும் மக்களின் முற்று முழுதான பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடி யாதெனக் கூறிய H.W. ஜெயவர்த் தனவிற்கு பதிலளிக்கையில், எதிர் கேள்விக் கணை தொடுத்த போராளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள், 'அப்படியாயின் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு வார்த்தையை தொடர வேண்டியதில்லை' என்றனர்.

போர் நிறுத்த காலத்தில் போராளிகள் 26 தடவைகள் வன்செயல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனரென்றும், ஸ்ரீலங்கா அரசு இராணுவம், 58 தடவைகள் போராளிகள் மீதும், பொதுமக்கள் மீதும் தாக்குதலை நடாத்தியிருந்தனரென்றும் பரஸ்பரம் குற்றம் சாட்டப்பட்டது.

## 15 ஆவணி 1985

ஜனாதிபதியால் உத்தியோக பூர்வமாக அதிகாரமளிக்கப்பட்டிருந்த திரு. H.W.J. ஆல், தமிழ்க்குழுக்களின் நான்கு அடிப்படைக் கோரிக்கைகள் திரும்பவும் நிராகரிக்கப்பட்டது. இருதரப்பினரிடையே பேச்சுவார்த்தையில் தோன்றிய இறுக்கமான சூழ்நிலையைத் தளர்த்து முகமாக திரு. பண்டாரி குழுக்களைத் தனித்தனியே சந்தித்துப் பேசினர்.

## 16 ஆவணி 1985

இன்றைய கூட்டத் தொடரில், ஏற்கனவே இரண்டு தடவைகள் தமிழ்க் குழுக்களினல் நிராகரிக்கப்பட்ட, சர்வ கட்சி மாநாட்டில் முன் வைக்கப்பட்ட - 'அதிகாரப்பரவலாக்கல்' பிரேரணை, திரும்பவும் H.W. ஜெயவர்த்வனுவால் கொண்டு வரப்பட்டது. இதனிடையே புதிதாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த வவுனியா படுகொலைகள் அங்கு ஒரு பதட்டமான சூழ்நிலையை உருவாக்கியிருந்தது.

## 27 ஆவணி 1985

தாங்கள் இப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டிருக்கும்போதே, தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியான படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருப்பதால், தொடர்ந்தும் இப் பேச்சுக்களில் கலந்து கொள்ள முடியாதெனக் கூறிய தமிழ் குழுக்கள், வெளிநடப்புச் செய்தன. அவர்கள் விடுத்த அறிக்கையில் 'தாம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டாலும், சிறிலங்கா அரசின் நிலையானது, தமிழ்ப் பேசும் மக்களை அழித்தொழிப்பதிலேயே கவனமாகவுள்ளதெனவும், கடந்த சில நாட்களாக வவுனியாவில் 200க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனரெனவும், திம்பு பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு, முன் நிபந்தனையாக வைக்கப்பட்ட 'போர் நிறுத்த ஒப்பந்தத்தை' மீறும் செயலாகவே இப் படுகொலைகள் அமைந்துள்ளதால், தொடர்ந்தும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வது அர்த்தமற்றதெனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ●



மாணவர் இளைஞர் பொதுமன்றம் GUYS

## ஆசிய மாணவர் ஒன்றியம் – ஈழம்
## A.S.A. MISSION TO EELAM

ஸ்ரீலங்கா அரசினது மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை எதிர்க்கும் வகையில் யூன் 28 முதல் யூலை 4ந் திகதி வரை ஈழ மாணவருக்கான ஆதரவு தினங்களாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. உலகின் 17 நாடுகளில் உள்ள 21 மாணவ அமைப்புக்களின் தலைமையாக விளங்கும் ஆசிய மாணவர் ஒன்றியம் (A.S.A) இத்தினங்களை ஈழமாணவர்களுக்காக அங்கீகரித்துள்ளது.

இத் தினத்தை இந்திய மாணவ அணிகளுடன் இணைந்து எமது போராட்டத்தை சர்வதேச அளவில் நியாயப்படுத்தும் வகையில் மாணவ இளைஞர் பொது மன்றம் சென்னையில் ஒழுங்கு செய்துள்ளது இதன் தொடராக எதிர் வரும் சித்திரை 17 முதல் 30ம் திகதி வரையான நாட்களை 'கொடி தினமாக, (FLAG DAY) நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆதரவு தின ஏற்பாடுகளில் பிலிப்பைன்ஸ் மாணவர் அணி, ஆசிய இளைஞர் அணி, அவுஸ்திரேலியா மாணவர் அணி, தாய்லாந்து மாணவர் அணி, கொங் கொங் மாணவர் அமைப்பு, நியூசிலாந்து பல்கலைக் கழக மாணவர் அணி, பாலத்தீன பொது மாணவர் அணி, பாலத்தீன இளைஞர் அணி, அகில இந்திய நேபாள மாணவர் அணி போன்ற பல்வேறு ஆசிய பிராந்திய அணிகளுடன் இந்திய மாணவர் அணிகளும், ஈழ விடுதலை மாணவர் அணிகளும் கலந்து கொள்ளும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஈழ மாணவர்களுக்கான ஆதரவு தினத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த அனைத்து முற்போக்கு மாணவர் அணியினதும் ஆதரவு எமது போராட்ட முன்னெடுப்புக்கு ஆயத்தமாகவே அமைந்துவிடும். இந்த வகையில் இத் தினத்தை மேலும் சிறப்பிக்க சகலரினதும் ஆதரவையும் வேண்டும்...

GENERAL UNION OF YOUTH AND STUDENTS GUYS

**மாணவ இளைஞர் பொதுமன்றம் (GUYS)**
**ஈழப்புரட்சி அமைப்பின் மாணவர்அணி**

தொடர்புக்கு
த.பெ. எ. 2356
சென்னை 600 024



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்னுயிர் ஈந்தும்...

ஸ்ரீலங்கா சோவனிச
அடக்குமுறைகளை,
எதிர் கொள்வதற்கான
அணி வகுப்பில்,
நேசம் மிகுந்த
உங்களை இழந்தோம்.

தோழர்களே .. தோழர்களே...
வார்த்தைகள் அனைத்திற்கும்
கனம் ஏற்றினீர்கள்.

செயல் என்பதனை
வீரிய மாக்கினீர்கள்.

நீங்கள்.,

ஓலைக் குடிசைகளின்
துவாரங்கள் தோறும்
இறங்கும் ஒளிக்கதிர்கள்.

விதைகள் ஒவ்வொன்றும்
வேர்களைப் பரப்பும்.

ஈழம் எங்கணும்
மலைகளும், வயல்களும்,
கரைகளும், பனங் கூடல்களும்,

கலப்பினில் ஈழவராய்.
ஈழப்புரட்சி அமைப்பினராய்.

எதிர் கொள்ளும்
அணிவகுப்பில்,
உங்கள் நேசத்துடன்
செயல்கள் தொடரும்...
பூபாளம் சிவக்கும்....

**ஈழப்புரட்சி அமைப்பு**

**ஈரோஸ்**

1. இராசகிளி
— 25-7-83
மூதூர்

2. சிவானந்தராசா
— 25-7-83
மூதூர்

3. நவரட்ணராசா
—
மூதூர்

4. பரிபூரணன்
27-12-58 — 22-10-84
ஊர்காவற்றுறை

5. சி. விக்டர் டலிமா
சுமித்திரன்
26-11-61 — 10-12-84
பேசாலை

6. தவராசா (பழம்)
— 30-10-56 — 21-12-84
சம்பூர்

7. பாலச்சந்திரன் (சோ)
- 21-12-84
கட்டை பறிச்சான்

8. சோமேஸ்வரன் (சோமேஸ்)
11-09-63 — 04-01-85
திருநெல்வேலி

9. அழகையா
26-10-84
அம்பாறை

10. சோமசுந்தரம் (சிவநேசன்)
10-10-63 — 25-02-85
கட்டை பறிச்சான்

11. ராதாகிருஷ்ணன் (ரமேஸ்)
12-05-62 — 01-04-85
நாவலப்பிட்டி

12. பெனிஸ்டஸ் சிறில் (சாம்சன்)
08-08-59 — 30-04-85
வங்காலை

13. இராசேந்திரன் (ராஜு)
31-05-56 31-05-85
திருகோணமலை

14. சதாசிவம் (திருக்குமார்)
22-11-66 — 31-05-85
கிளிவெட்டி.

15. மகேந்திரன் (மாயவன்)
14-02-62 — 31-05-85
கிளிவெட்டி.

16. குணசேகரம் (குணம்)
1948 — 31-05-85
தங்க நகர்

17. குலேந்திரன்
— 22-11-60 — 31-05-85
கிளிவெட்டி

18. செல்வராசா நவரட்னராசா
(தீபன்)
1962 — 31-05-85
கிளிவெட்டி

19. சிவானந்தராசா (ஆனந்தன்)
1960 — 13-08-85
கிளிவெட்டி

20. இராமசாமி (குழந்தை)
1957 — 02-09-85
கண்டி

21. ஏகாம்பரம் ராசு (மொசாட்)
— 26-01-51 — 15-10-85
உயிலங்குளம்

22. குமார்
—
—

23. செபமாலை நீக்கிலாஸ்
(பாண்டியன்)
06-07-63 —
வட்டக்கண்டல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தோழன்
இராசகிளி



தோழன்
சிவானந்தராசா



தோழன்
நவரட்ணராசா



தோழன்
பரிபூரணன்






தோழன்
சி. விக்டர் டலிமா
சுமித்திரன்



தோழன்
தவராசா (பழம்)



தோழன்
பாலச்சந்திரன் (சோ)



தோழன்
ராதாகிருஷ்ணன்
(ரமேஸ்)



தோழன்
சோமேஸ்வரன்
(சோமேஸ்)



தோழன்
சோமசுந்தரம்
(சிவநேசன்)



தோழன்
பெனிஸ்டஸ் சிறில்
(சாம்சன்)



தோழன்
இராசேந்திரன்
(ராஜு)



தே
வை. சு
[சு



தோழன்
சதாசிவம் (திருக்குமார்)



தோழன்
மகேந்திரன் (மாயவன்)



தோழன்
குணசேகரம் (குணம்)



தோழன்
சிவானந்தராசா
(ஆனந்தன்)



தே
விஜய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ம்

வில்லை
டுகிறுய்



தோழன்
அழகையா



தோழன்
இராமசாமி (குழந்தை)



தோழன்
ஏகாம்பரம் ராசு
(மொசாட்)



தோழன்
செபமாலை நீக்கிலாஸ்
(பாண்டியன்)



தோழன்
அ.யோகானந்தம் [தாசு]



தோழன்
ஆ. சத்தியநாதன்
[சீலன்]



தோழன்
மகேந்திரன் [மகே]



தோழன்
யுவராசா [ஐயா]



ராசா
]



தோழன்
ஏரம்பமூர்த்தி



தோழன்
துரைநாயகம்



தோழன்
மா. நடராஜா [எஸ்]



தோழன்
தர்ம.ராஜா
மரைக்கார்



ளம்



தோழன்
ஜெயானந்தம் [விஜேத்]



தோழன்
வீ. சுந்தர்ராஜன்
[சுந்தரி]



தோழன
பார்த்தீபன் [கண்ணன்]



தோழன்
விஜயரஞ்சன் [குட்டி]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்னுயிர் ஈந்தும்...

[விடிந்தால் மரணம்! விடிவதற்கு முன் மரணவாசலில் நின்றபடி கவிஞன் பெஞ்சமின் மொலாய்ஸ் எழுதிய தலைப்பில்லாக் கவிதை]

ஆயுதமேந்திய இராணுவத்தினரின்
அதிரடிப்படை நடவடிக்கைகள்.
ஆவேசப்பேச்சுப் பாராளுமன்றங்கள்
இதுவரை உலகில்
இழைத்த கொடுமைகள்
எண்ணிலாதவை - எண்ணிலாதவை
இத்தனைக் கொடுமைகள்
தம்மை மீறியே
இந்தப் பூமியில்
மனித வாழ்க்கை
இன்னும் தொடர்கிறது ......
இனியும் தொடரும் ...
அந்த ஒற்றை வாழ்க்கை...
என்னவாக நான்
இன்று இருக்கிறேன்.
இதற்காக நான்
பெருமை கொள்கிறேன்.
ஒடுக்கு முறைப் புயல்
ஓய்ந்து முடியவே
இரத்த மழையினைப்
பொழியப் போகிறேன்.
எனது வாழ்க்கையை
இழக்கப் போகிறேன்.
இழப்பதிலே நான்
பெருமை கொள்கிறேன்
ஒற்றை வாழ்க்கையை...

24: மகேந்திரன் [மகே]
31-12-58 — 02-10-85
மட்டகளப்பு

25. கு தர்ம.ராஜா மரைக்கார்
15-07-67—

26. யுவராசா [ஐயா]
—
சேனையூர்

27. ஏரம்பமூர்த்தி
—
உப்புவெளி

28. துரைநாயகம்
—
—

29. ஜெயானந்தம் [வினோத்]
1962 — 01-11-85
நாவாந்துறை

30. வீ. சுந்தர்ராஜன் [சுந்தரி]
1963—
இயக்கச்சி

31. பார்த்தீபன் [கண்ணன்]
09-10-60 — 12-12-85

32. விஜயரஞ்சன் [குட்டி]
08-10-64 — 12-12-85
கோண்டாவில்

33. அச்சாதம்பி
—
தம்பிலுவில்

34. வேல்வேந்தன்
—
சித்தாண்டி

35. யோகராசா
—
அக்கரைப்பற்று

36. சண்டி
—

37. நவரட்ணம்
—

38. வை. சுரேசுராசா [சுரேஸ்]
24-04-57—
சம்பூர்

39. ஆ. சத்தியநாதன் [சீலன்]
18-11-62 —
பிச்சைக்குளம் (முருங்கன்)

40. அ. யோகானந்தம் [தாசு]
— 20-09-64
சிறுக்கண்டல் (முருங்கன்)

41. திரேசன்
—
அக்கரைப்பற்று

42. விநாயகமூர்த்தி
—
அக்கரைப்பற்று

43. தேவசகாயம்
—
அக்கரைப்பற்று

44. தேவராசா
—
அக்கரைப்பற்று

45. மா. நடராஜா [எஸ்]
21-11-65 — 08-10-85
காலி

46. விஜயரட்ணம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கார்ல் மார்க்ஸ்

## மானுட எழுச்சியின் வழிகாட்டி

19ஆம் நூற்றுண்டை நினைவிற் கொள்வோம். இந்த நூற்றுண்டு பல வரலாற்றுத் திருப்பங்களை உந்தித் தள்ளியது. நில உடைமை சமுதாயமும், பண்ணை அடிமை முறையும் சரியத் தொடங்கியது. மூலதனம் குவியத் தொடங்கியதும் முதலாளித்துவம் கருக்கொண்டதும் இந்த நூற்றுண்டில் தான் மனிதனும், இயற்கையும் சார்ந்த அறிவுத் துறைகளும மனிதர்கள் இடையேயான உறவுகளும் புதிய மாற்றங்களுக்கு உள்ளாகத் தொடங்கியது. முதலாளித்துவம் முகிழ்ந்தது. அது பிறக்கும் பொழுதே தன் தொப்புள் கொடியுடன் தனக்கான அழிவு ஆயுதத்தையும் கொண்டிருந்தது. அதாவது முதலாளித்துவம் பிறந்த பொழுதே தன்னுடன் பாட்டாளி வர்க்கத்தையும் பரசவித்துக் கொண்டது. ''இழப்பதற்கு விலங்குகளைத் தவிர வேறு எதுவுமற்ற மானுடம்'' அணிசேரத் தொடங்கியது. முதலாளித்துவம் தன்னைக் காத்துக்கொள்ள புதிய நியாயங்களையும், சட்டங்களையும் மரபுகளையும் உருவாக்கிக்கொண்டது. ஒடுக்கட்பட்ட மானுடம் தனது விமோசனம், விடுதலை குறித்து ஏங்கித் தவித்தது. இதற்கான வழிமுறையை கண்டறியும்படி வரலாறு, மானுடத்தை நிர்ப்பந்தித்தது. இதற்கான போதனைகள், தத்துவங்கள் தலைதூக்கத் தொடங்கின. ஆனல் இவை அனைத்தும் கற்பனவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. விஞ்ஞான பூர்வ நியாயங்களை, முடிவுகளை இந்தப் போதனைகள் வகுத்தளிக்கத் தவறின. கற்பனவாத சோசலிசத் தத்துவங்களினல் கனவு நிலையையே உருவாக்க முடிந்தது. உழைப்பாளர் சங்கங்கள் தோன்றத் தொடங்கின. விஞ்ஞான பூர்வமான தத்துவார்த்த ஆயுதம் தொழிலாளர்களுக்குத் தேவைப்பட்டது. தத்துவ ஞானத்தைச் செழுமைப் படுத்திய ஜேர்மனியிலிருந்து, கார் ல் மார்க்ஸ் உலகைத் தலைகீழாக மாற்றுங்கள் என்ற பிரகடனத்துடன், உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்ற அறைகூவலுடன் ஆசானய், வழிகாட்டியாய், தத்துவ வித்தகனய், போர்த் தளகர்த்தனய் தன்னை அடையாளங்காட்டினர்.

எங்கெல்சும், மார்க்சுடன் இணைந்துகொண்டார். இரத்தத்தில் நனைந்த கொடியுடன் கைகளைக் கோர்த்தவண்ணம் மானுடம் தலைநிமிர்த்தியது. கம்யூனிசம் என்னும் பூதம்! ஐரோப்பாவை நடுங்கவைத்தது. அது பூபாளம் எங்கணும் அதிர்வை ஏற்படுத்தியது, உலகம் குலுங்கியது.

1848ஆம் ஆண்டு தத்துவ வித்தகன் மார்க்சும் எங்கெல்சும் இணைந்து, சுரண்டப்படும் மக்களின் விடுதலைக்கு வழிகாட்டும் வேலைத்திட்ட அறிக்கையை வெளியிட்டார்கள். ''கம்யூனிஸ்ட்கட்சியின் அறிக்கை''என்னும் மிகக் குறைந்த பக்கங்களாலான இந்த ஆவணம் இதுவரையான மானுடவரலாற்றின் மிகச் சிறந்த படைப்பாக விளங்குகின்றது.

இவ் அறிக்கை எழுதப்பட்ட போது (1848) கம்யூனிஸ்ட் சங்கத்தில் 400 பேர் மட்டுமே இருந்தனர். உலகைக் குலுக்கிய முதல் சோசலிச புரட்சியான ''அக்டோபர் புரட்சி'' யின் போது (1917) உலகில் 4,000,00 கம்யூனிஸ்டுகள் இதனை ஏற்றிருந்தனர். இன்று இவ்வறிக்கையின் பதாகையின்கீழ் 70 மில்லியனுக்கு மேற்பட்ட கம்யூனிஸ்டுகள் வாழ்ந்து போராடி வருகின்றனர். இன்று உலகில் 1/3 பகுதி மக்கள் சோசலிசப் பாதையில் தம் காலடியை எடுத்து வைத்துள்ளனர். ஏறத்தாழ 100 கம்யூனிஸ்ட் கட்சிகள் உலகெங்கும் செயற்படுகின்றன. உழைக்கும் மக்களின் போராட்டம் மேலும் மேலும் உக்கிரமடைந்து வருகின்றது.

1818 மே மாதம் 5ந் திகதி கார்ல் மார்க்ஸ் பிறந்தார். 1841இல் படிப்பை முடித்து பட்டம் பெற்ருர். ஆசிரியராகப் பணியாற்றலாம் என்றுதான் மார்க்ஸ் முதலில் எண்ணியிருந்தார். ஆனல் கல்விக் கொள்கை குறித்தும், ஆசிரியர்கள் சுதந்திரம் குறித்தும், அப்போதய ஐரோப்பிய அரசுகள் கொண்டிருந்த பிற்போக்கான நடைமுறைகள் மார்க்சின் ஆசிரியராகும் எண்ணத்தை கைவிட வைத்தன. பத்திரிகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யில் ஆசிரியப்பணியை ஏற்று அரசியல் அரங்கிற்கு தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். 1842 ''ரைனிஷ்யைடுங்'' என்னும் பத்திரிகையின் தலைமைப் பொறுப்பை மார்க்ஸ் ஏற்றார். பத்திரிகை புரட்சிகரத் தன்மையை வெளிப்படுத்தியது. அரசியல் நிகழ்வுகளை தயவு தாட்சணமின்றி அம்பலத்திற்கு கொண்டு வந்தார். இதனைக் கண்டு அஞ்சிய பிரஷ்சிய அரசாங்கம் அதனைத் தடை செய்தது. மார்க்சின் போராட்ட வாழ்க்கை ஆரம்பமாகியது.

மார்க்ஸ் தனது அன்பான மனைவி ஜென்னியுடன் பிரான்சிற்கு குடி பெயர்ந்தார். இங்கே பத்திரிகை ஒன்றை வெளியிடுவதே அவரது எண்ணமாக இருந்தது. ஒரு இதழ் வெளியிட்டதுடன் அவர் அந்தப் பத்திரிகையை கைவிட வேண்டியதாயிற்று. ஏனெனில் ஆசிரியர் குழுவில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக இம் முடிவிற்கு வர வேண்டியதாயிற்று. இந்த இதழுக்கான வேலைகளை மார்க்ஸ் மேற்கொண்டிருந்த பொழுது தான் எங்கல்ஸ், மார்க்சை சந்தித்தார். ஒரே விதக் கருத்தையும், ஒத்த சிந்தனையை உடைய இருவரும் இறக்கும் வரை இணைந்து தம் பணியை மேற்கொண்டனர்.

மார்க்ஸ் அவர்களின் ஜென்னியுடனான காதல் மண வாழ்வும், ஏங்கல்சுடனான தோழமையும் காவியப் பண்பு கொண்டவை. பின் நாட்களில் அவரைப் பற்றி நினைவு கூர்ந்தவர்கள் இக்காதலையும், நட்பையும் குறித்தே வியந்து குறிப்பிட்டுள்ளனர். உழைக்கும் வர்க்கத்துக்கு போர் குணத்தையும் போராட்டத் தந்திரோ பாயத்தையும் கற்றுத்தந்த மார்க்ஸ் அவர்கள் அன்பும், கனிவும், மனித நேயமும் மிக்கவராய் திகழ்ந்தார். அவர் தனது வாழ்நாளில் கொடிய வறுமையையும், அதிகார வர்க்கத்தினரின் அடக்கு முறைகளையும், நாடுவிட்டு நாடலைந்த நிரந்தரமற்ற வாழ்க்கையையும் அவர் சந்தித்த போதும் உண்மையைக் கண்டறியும் உறுதியான செயற்பாட்டை கைவிடவே இல்லை.

நாகரீக உலகெங்கிலும் அதிகார தரப்பினரினதும், முதலாளித்துவ விஞ்ஞானம் அனைத்திடமிருந்தும் அளவற்ற பகைமையையும், வெறுப்பையும் பெற்றுக் கொண்ட போதும் இவ்வமைப்பு முறையை நொறுக்கும்படி போர்ப்பிரகடனம் செய்தார். பிரான்சில் அவரது வாழ்க்கையை நீண்டகாலம் தொடர



முடியவில்லை 1845இல் ஆபத்தான புரட்சியாளர் என்ற முத்திரையுடன் மார்க்ஸ் நாடுகடத்தப் பட்டார். அவர் பெல்ஜியத்தில் இயக்க வேலைகளை தொடர்ந்தார். இவ்வேளையில் தான் லண்டனில் நடந்த இரண்டாவது கம்யூனிஸ்ட் மாநாட்டில் கலந்து கொண்டார்.

வர்க்க சமுதாயத்தை உடைக்கும்-அம்பலப் படுத்தும் கம்யூனிஸ்ட் அறிக்கையை தயாரித்து வெளியிட்டார். பெல்ஜியத்தில் புரட்சி நெருப்பு மூழத் தொடங்கியது. அங்கிருந்தும் நாடு கடத்தப்பட்டார். ஜெர்மனி அவருக்கு தஞ்சம் அளித்தது. எதிர்ப் புரட்சியாளர் அவர் மேல் பொய் வழக்குத் தொடுத்தனர். ஜெர்மனி அவரை வெளியேற்றியது. மீண்டும் பிரான்ஸ் வந்தடைந்தார் மார்க்ஸ். பிரான்ஸில் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். இக்கிளர்ச்சிக்கு மார்க்ஸையே பிரான்ஸ் அரசு பொறுப்பாளி ஆக்கியது. குடி பெயர வேண்டியது அவசியமாகியது. 1849 இல் லண்டன் வந்தடைந்தார். 1883ம் ஆண்டு மார்ச் 13ம் திகதி அவர் தமது சிந்தனையை நிறுத்தும் வரை லண்டனிலேயே வாழ்ந்தார்.

மார்க்சின் சிந்தனைகள் அவரது முடிவுகள், ஏதோ நடுஇரவில் தேவ தூதன் தோன்றி வழங்கிய அருள் வாக்குகள் அல்ல. படிமுறையாக வளர்ச்சி பெற்று வந்த மானுட அறிவை அதன் உண்மைகளை விஞ்ஞான பூர்வ வடிவில் தொகுத்தார்.

இதற்கு அவர் ஜெர்மானிய தத்துவ ஞானம், ஆங்கிலேய அரசியல் பொருளாதாரம் பிரெஞ்சு சோஷலிசம் ஆகிய மூன்று அடிப் படைகளில் இருந்துமே விஞ்ஞான சோஸலிஷத்தை, மார்க்சிய தத்துவத்தை உருவாக்கினார். ஹெகலின் தத்துவ முறை, பயர்பாஹின் பொருள் முதல் வாதம் ஆகிய கருத்துச் செல்வங்களிலிருந்தும் தனது தத்துவ ஞானத்தை செழுமைப் படுத்தினார். மார்க்சின் வரலாற்றுத் துறை பொருள் முதல் வாதம் விஞ்ஞான சிந்தனைக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாக அமைந்தது. அதாவது வரலாற்றுத்துறை பொருள் முதல் வாதமென்பது உற்பத்தி சக்தியின் வளர்ச்சியின் விளைவாக ஒரு சமுதாய அமைப்பு முறையிலிருந்து அதைவிட உயர்தரமான இன்னொரு சமுதாய அமைப்புமுறை எப்படி வளர்கிறது என்பதை விளக்குகின்றது. அதாவது நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு முறையிலிருந்து முதலாளித்துவ சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பதை ஆய்வு செய்கின்றது. இந்த பொருள் முதல் வாதம் மானுடத்திற்கு அதாவது உழைக்கும் மக்களுக்கு மகத்தான அறிவு சாதனமாய் விளங்குகின்றது.

இம் மார்க்சிய பொருளாதார தத்துவத்திற்கு 'உபரி' மதிப்பைப் பற்றிய போதனைதான் மூலக்கல்லாகும். கூலிபெறும் உழைப்பாளி நிலம், ஆலைகள், உழைப்புக் கருவிகள் ஆகியவற்றைக் கொண்ட உடமையாளர்களிடம் தனது உழைப்பை விற்கிறான். தொழிலாளி வேலை நாளின் ஒரு பகுதியை தன்னையும் தனது குடும்பத்தையும் பராமரித்துக் கொள்ளும் செலவிற்காக உழைப்பதில் கழிக்கிறான். மறு பகுதியில் ஊதியமின்றியே உழைத்து முதலாளிக்கு உபரி மதிப்பை உண்டாக்கித் தருகிறான். இந்த உபரி மதிப்புத் தான் இலாபத்திற்கு தோற்றுவாயாய் அமைகின்றது. அதுதான் முதலாளி வர்க்கத்தினரிடம் செல்வமாய்க் குவிகின்றது. இந்த முறையான பொருளாதார ஒழுங்கமைப்பில் இலட்சக்கணக்கான, கோடிக் கணக்கான தொழிலாளிகள் இணைக்கப்படுகின்றனர். இவர்களின் கூட்டு உழைப்பில் உற்பத்திப் பொருளை விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சில முதலாளிகள் உடமையாக்கிக் கொள்கிறார்கள். திரளான மக்கள் இழப்பதற்கு எதுவும் இல்லாதவர்களாகின்றார்கள்.

மானுடம் மூலதனத்தை அண்டிப் பிழைக்க வேண்டிய நிலையை முதலாளித்துவம் தீவிரப் படுத்துகின்றது. அதே சமயத்தில் ஒன்று சேர்ந்த உழைப்பாளர்களினது மாபெரும் சக்தியை பிறப்பித்து விடுகின்றது. தொழிலாளர்களும் தங்கள் விமோசனத்திற்கு மார்க்சியத்தை வழி முறையாகக் கொள்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாபெரும் இவ்விஞ்ஞான கண்டு பிடிப்புகளை அறிவித்தமார்க்சின் வாழ்க்கை துயரம் நிரம்பியது. அவர் லண்டனில் தான், தம்வாழ்வின் இறுதிப் பகுதியை கழித்தார். தன்பணம் முழுவதையும் ''புதியரைன்'' பத்திரிகையில் முதலிட்டதனால்-ஆதாரம் அற்ற நிலையில் வாழவேண்டியதாயிற்று. மருத்துவ வசதிக்கு பணம் இல்லாததனால் அவரது நான்கு குழந்தைகள் இளம் வயதிலேயே இறந்தனர். 1852ல் ஒரு குழந்தை இறந்தபோது அதை புதைப்பதற்கு சவப்பெட்டி வாங்கக் கூட பணமற்று திண்டாடினார். அவரது ஆடைகள் அடமானக் கடையில் அடமானம் வைக்கப்பட்டதால் சில சமயங்களில் வாரக்கணக்கில் வீட்டைவிட்டு வெளியேருமலேயே இருந்தார்.

வாழ்க்கையில் கடினங்களை பொருட்படுத்தாது மார்க்ஸ் தொடர்ந்து உறுதியுடன் பணி ஆற்றினார். காலை முதல் மாலை நெடுநேரம் வரை அவர் பிரிட்டன் மியூஸியத்தின் நூலகத்தினுள் படித்து குறிப்பெடுத்தார். அவர் தமது ஆய்வுக்காக இயற்கை விஞ்ஞானம், கிழக்கிந்திய நாகரிகங்களின்வளர்ச்சி, அரசியல், இலக்கியம், சட்டம், கணிதம், என பல்வேறு துறைகள் குறித்தும் ஆழ்ந்து படித்தார். அவர்தம் முழுக்கவனத்தையும் ''மூலதனம்'' நூலைத் தயாரிப்பதிலேயே ஒருமைப்படுத்தினார்.

''மூலதனம்'' நூல் மானுடத்தின் மாபெரும் சாதனையாக அமைந்தது. மானுட எழுச்சியின் சித்தாந்த ஆயுதம் ஆகியது. முதலாளிகளினதும், நிலச் சொந்தக்காரர்களினதும் தலைமீது போடப்பட்ட மிகப்பெரிய வெடிகுண்டாய் ஆனது—

''புதிதாக தோன்றிய மூல்தனத்தின் தலைமுதல் கால்வரை ஒவ்வொரு இடத்தில் இருந்தும் குருதியும் வியர்வையும் சிந்துகின்றன'' என மார்க்ஸ் எழுதினார்.

மூலதனம் நூலில் சமுதாய வளர்ச்சியின் பொருளாதார விதிகள் வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன் வரலாற்றைப் பற்றிய பொருள் முதல்வாத கண்ணோட்டம் தெளிவாக வரையறுக்கப்பட்டது.

''விலங்கினங்கள் மற்றும் தாவர இனங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற, தற்செயலான, கடவுளால் தோற்றுவிக்கப்பட்ட மாற்றம் இல்லாத இனங்கள்'' என்ற கருத்திற்கு டார்வின் முற்றுப்புள்ளி வைத்தார். இனங்களின் மாறும் தன்மையையும் தொடர்ச்சியையும் நிலைநாட்டி ''எப்படி முதன்முதலாக உயிரியலை



முற்றிலும் விஞ்ஞான அடிப்படையில் டார்வின் வைத்தாரோ, அதே போல் மார்க்ஸ்'' தலைவர்களின் (அல்லது சமூகத்தின், அரசாங்கத்தின்) விருப்பு, வெறுப்புகளின் படி எல்லாவித மாற்றங்களையும் அனுமதிக்கக்கூடிய, தற்செயலாகத் தோன்றி, தற்செயலாக மறையக்கூடிய தனிப்பட்ட நபர்களின் இயந்திரமயமான கூட்டுதான் சமுதாயம் என்ற கருத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். குறிப்பிட்ட உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்தம் தான் சமூக-பொருளாதார அமைப்பு எனும் கருத்தையும் இத்தகைய அமைப்புக்களின் வளர்ச்சி ஓர் இயற்கையான வரலாற்று நிகழ்ச்சிப் போக்கு என்பதையும் நிலைநாட்டி முதன் முதலாக சமூக விஞ்ஞானத்திற்கு விஞ்ஞான அடித்தளமிட்டார்''.

என்னும் புரட்சிப் புரவலனின் கூற்று மார்க்சியத்தை சரியான முறையில் அறிமுகப்படுத்துகின்றது. மூலதனம் நூலை தயாரித்து வெளியிட்டதில் அவரது தோழர் எங்கெல்சும் தன் முழுமையான பங்கைச்செலுத்தினார். இந்நூலானது இரு மாபெரும் மேதைகளின் உழைப்பின் பயனாகும். முலதனம் மார்க்ஸ், ஏங்கெல்சின் மற்றைய படைப்புக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தான் மானுடத்தின் விடுதலைக்கான புரட்சிப்போராட்டங்களின் லெனினிய போர்த்தந்திரமும், நடைமுறைத் தந்திரமும் வகுக்கப்பட்டன. இவற்றின் வெளிப்பாட்டையே மார்க்சியம்-லெனினியம் என புரட்சியாளர்கள் அழைக்கின்றனர்.

உழைப்புக்கும், மூலதனத்திற்குமிடையே இறுதியான-தீர்மானகரமான போராட்டம் எங்கெல்லாம் நடத்தப்படுகின்றதோ அல்லது முதிர்ச்சியடைந்துள்ளதோ அந்த நாடுகளில் எல்லாம் உள்ள தன்னலமற்ற பாட்டாளி வர்க்க போர் வீரர்களும், புரட்சி வீரர்களும் மார்க்சியத்தை தமது பலம் வாய்ந்த ஆயுதமாகவே கருதுகின்றனர். இன்று பிலிப்பைன்சிலும், எல்சல்வடோரிலும், தென் ஆபிரிக்காவிலும், ஈழத்திலும் முன்னேறிக் கொண்டிருக்கும் போராளிகள் மார்க்சியப் பதாகையினையே உயர்த்திப் பிடித்துள்ளனர். அவர்கள் தம்மை கம்யூனிஸ்ட்டுக்கள் எனவே பிரகடனம் செய்கின்றனர். அவர்கள் தங்கள் இலட்சியமாக, வேலைத்திட்டமாக கீழ்வரும் பிரகடனங்களை அறிவிக்கின்றனர்.

"கம்யூனிஸ்டுகள் எங்கும் தற்போதுள்ள சமூக, அரசியல் நிலவரங்களது அமைப்பு முறையை எதிர்த்து நடைபெறும் புரட்சிகர இயக்கம் ஒவ்வொன்றையும் ஆதரிப்பவர்கள் ஆவர்.

இந்த இயக்கங்கள் யாவற்றிலும், அவர்கள் சொத்துடமைப் பிரச்சனையை, இதுவரை எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதைப் பொருட்படுத்தாமல் தலைமையான பிரச்சனையாய் முன்னிலைக்கு கொண்டு வருகிறார்கள்.

முடிவில் எல்லா நாடுகளையும் சேர்ந்த ஜனநாயகக் கட்சிகளது ஒற்றுமைக்காகவும், அவற்றினிடையிலான உடன்பாட்டுக்காகவும் அவர்கள் பாடுபடுகிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் தமது கருத்துக்களையும் நோக்கங்களையும் மூடி மறைக்க மனம் ஒப்பாதவர்கள். இன்றுள்ள சமுதாயத்தின் நிலைமைகள் யாவற்றையும் பலவந்தமாய் வீழ்த்த வேண்டும், அப்போதுதான் தமது இலட்சியங்கள் நிறைவேறும் என்று கம்யூனிஸ்டுகள் ஒளிவு மறைவின்றி பறைசாற்றுகிறார்கள். அஞ்சி நடுங்கட்டும் ஆளும் வர்க்கங்கள் கம்யூனிசப் புரட்சி வருகிறதென்று. பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர இழப்பதற்கு ஏதும் இல்லாதவர்கள். அவர்கள், வென்று பெறுவதற்கு அனைத்து உலகும் இருக்கிறது."

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!

ஒடுக்கப்பட்டவர்களே, எழுந்து நில்லுங்கள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்துமா கடலைச் சூழும் கடலாதிக்க அபாயங்கள்

'இந்து மா கடல் அமைதிப் பிராந்தியமாகவும் அணு ஆயுதத் தலையீடில்லாத சுதந்திர வலயமாகவும் இருக்க வேண்டும்' என்ற எண்ணப்பாடு 1971ம் ஆண்டு நடை பெற்ற பொதுநலவாய நாடுகளின் (commonwealth) மகாநாட்டின் போது அங்கீகரிக்கப்பட்டு தீர்மானமாக வும் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் மறு ஆண் டில் ஐக்கிய நாடுகள் (united nations) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட போதும் அத்தீர்மானத்திற்கு முழு வடிவம் கொடுக்க முடியாதளவிற்கு இந்து மா சமுத்திர கடல் பிராந்தியத்தில் தலையிட்டுள்ள ஆதிக்கச் சக்திகள் இடையூறாக இருந்து வருகின்றன. இந்தச் சக்திகள் இந்து மா சமுத்திரப்பகுதியிலுள்ள நாடுகளின் சுதந்தி ரத்தை பாதிக்குமளவிற்கு தமது ஆதிக்கப் போட்டியை நடத்தி வருகின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தளங்களில் ஒன்றான டியேகோ கார்சியாவை தவிர்த்து இந்து சமுத்திரத் தில் நிரந்தரமாக உள்ள அமெரிக்கா சோவியத் யூனி யன், பிரித்தானியா, பிரான்சு, ஆகிய நாடுகளின் கடற்கப்பல்கள் பற்றாது என்றாற்போல், கூட்டுச்சேரா நடுநிலைக் கொள்கைக்கு வித்திட்ட இந்து சமுத்திர நாடுகளை மேற்படி சக்திகளை தங்கள் நாட்டுக்கான கடல் எல்லைக்குள் அழைக்க முனைகின்றன. இதனால் இக்கடல் பிராந்தியத்தில் நிலவக் கூடிய அமைதி குலைக் கப்படுமோ என்ற ஐயப்பாடு தலைதூக்குவதோடு பிராந்தியத்தில் உள்ள முக்கியமான நாடான இந்தியா வின் ஒன்றியத்தையும் பாதுகாப்பையும் பாதிக்குமோ என்ற எண்ணமும் தலை தூக்குவதாக அவதானிக்கப் படுகின்றது. இதன் காரணமாகவோ, என்னவோ கடந்த வருடம் இந்தியாவின் மத்திய அரசு தனது திருவனந்தபுரத்தில் அமர்த்தப்பட்டுள்ள பாதுகாப்புப் படைகளை உஷார்படுத்தி இராமேஸ்வரம் கடற்கரை யோரமாக அமர்த்த முடிவு செய்தது. அந்த முடிவை, சில கணிப்பாளர்கள், அப்போதைய இலங்கை அரசாங் கத்தின் திருகோணமலை பற்றிய எண்ணப்பாட்டுடன் பிணைத்து எஃக முனைந்தார்கள். இலங்கை அரசு திரு கோணமலையில் உள்ள துறைமுகத்தில் அமெரிக்க கடற் கப்பல்கள் தங்கிப் போவதற்கான வசதியும் எண்ணெய் நிரப்புவதற்கான வசதியும் அளிக்க முன்வந்திருந்தது. இதன் மூலம் இலங்கை தனது கேந்திர துறைமுகமான திருகோணமலையில் அமெரிக்காவிற்கு தளவசதி செய்து கொடுக்க முனைந்ததாகவே கணிப்பாளர்கள் கருதிய தோடு இப்பிராந்தியத்தில் மேலும் கொந்தளிப்பு ஏற் படக் கூடும் என்பதனாலேயே இந்தியா தனது தென் பிராந்திய (southern command) கடற்படைகளை உஷார் படுத்தி சிறிலங்கா-அமெரிக்கத் தொடர்பினால் விளையக் கூடிய விபரீதங்களை எதிர் நோக்கக் கூடியளவிற்கு தனது பாதுகாப்பு பந்தோபஸ்த்தையும் இறுக்கப்படுத் தியது.

ஆசிய நாடுகளின், அதிலும் முக்கியமாக இந்து சமுத்திர கடற்பிராந்திய நாடுகளின் எண்ணப்பாட்டை யும் கோரிக்கையையும், அமெரிக்கா எவ்வளவு தூரம் அவமதிக்கின்றது என்பதனை, இக்கடற் பிராந்தியத் தில் அமர்த்தப்பட்டுள்ள அதன் கடற்படைகள், மூலம் அவதானிக்க முடிகின்றது. இதன் மூலம் அமெரிக்கா எவ்வளவு தூரம் பின்தங்கிய நாடுகளை ஆக்கிரமிக்க முனைகின்றது என்பதனையும் அறியக் கூடி யதாய் உள்ளது. இதனை வலுப்படுத்துவதாகவே இலங்கையின் போக்கு அமைந்துள்ளது. கடந்தகாலத் தில் இந்துமா சமுத்திரம் ஒரு அமைதி பிராந்திய மண் டலமாக இருக்க வேண்டும் என்று குரல் எழுப்பிய ஸ்ரீலங்கா அரசு இப்போது அந்த கூக்குரலை விடுத்து அமெரிக்காவின் குரலையே பிரதிபலித்து தொனிக்கச் செய்கின்றது. ஏன் அதனுடைய வெளிநாட்டுக் கொள்கை கூட கூட்டுச்சேரா நடுநிலைமைக்கு குந்தகமான முறை யில் அமெரிக்க தலைநகரமான வாஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையின் எண்ணப்பாட்டை பிரதி பலித்து அமைந்து வருகின்றது. இந்துமா கடலில் உள்ள டியேகோ கார்சியாவில் இருக்கும் அமெரிக்கத் தளம்போல் ஒன்றை திருகோணமலையிலும் அமைத்துக் கொள்வதே அமெரிக்காவின் அந்தரங்கத் திட்டம். இந்தவகையில் இக் கடற் பிராந்தியத்தின் அமைதி சீர்குலைக்கப்படும் வகையில் முனைப்புகள் ஏற்படுத்தப் படும் போது இந்துமா கடலின் முக்கியம் முன்னெப் போதும் இல்லாத அளவிற்கு தொனிப்பாகின்றது. இக் கடற் பிராந்தியத்தில் தளங்கள் தேடும் வல்லரசுகளும் ஏனைய நாடுகளும் இந்திய சமுத்திரத்தை ஆக்கிரமிப் பதன் மூலம் இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளையும் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவே முனைகின்றது என்பது தெளிவாகின்றது. இதனால் இப்பிராந்தியத் தில் ஒரு பெரும் அபாயமே தோற்றுவிக்கப்படலாம் என அஞ்சப்படுகின்றது.

இந்துமா சமுத்திரம் உலகப்பரப்பளவில் மூன்றி லொரு பங்கினை தன்பால் கொண்டு ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் கரையோரங்களை அதன் விஸ்தீரணப்பரப் பெல்லையாக தொடுவதோடு மட்டுமல்லாமல் பசுபிக், அத்திலாந்திக் சமுத்திரங்களை தொடுக்கும் பாலமாக அமைந்து ஐரோப்பாவை வர்த்தக ரீதியில் கிழக்கு ஆப்பிரிக்கா, தெற்காசியா, தென் கிழக்கு ஆசியா, அவுஸ்திரேலியா, ஆசியான போன்ற நாடுகளுடன் தொடுக்கும் மிகப்பிரமாண்டமான கடல் மண்டலமாக அமைகின்றது. மேலும் இந்துமா சமுத்திரம், சோவி யத் யூனியனின் மேற்கு கோடியையும், கிழக்குக் கோடி யையும் பிணைக்கும் ஒரே கடல் வழியாக அமைந் துள்ளது. இந்த விஸ்தீரண பிரமாண்டமான கடற் பரப்பு வல்லரசுகளின் கழுகு கண்பார்வையை ஈர்ப்பது இயற்கையே. இந்து சமுத்திரத்தின் அடித்தளத்தில் பொதிந்திருக்கும் கடல் வளத்தையும் அதன் எண்ணை வளங்களையும், இந்துமா சமுத்திரம் பற்றிய ஆய்வில் கருத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. இந்த வளங்களை அபகரித்துக் கொள்ளவே வல்லரசுகள் இப் பிராந்தியத்தில் தளங்களும் நிலைப்பாடும் ஏற்படுத்திக் கொள்ள முனைகின்றது என்பதனையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

கடல்வழிபோக்குவரத்து தோற்றம் பெற்று கடற் கப்பல்கள் இந்து சமுத்திர கடல்களில் நகர ஆரம்பித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலந் தொட்டு இக்கடல் வழி மேலைத் தேசத்தையும் கீழைத் தேசத்தையும் பிணைக்கும் ஒரு முக்கிய வழியாக அமைந்துள்ளது. கடல் வழி செல்லும் கப்பல்களினால் எடுத்துச் செல்லப்படும் பொருட்களில் 1/4 பங்கும், இந்த வழியோரம் எடுத்துச் செல்லப்படும் எண்ணெ யில் 2/3 பகுதியும் இப்பிராந்தியத்திலுள்ள துறைமுகங் களினூடாக ஏற்றுமதி செய்யப்பட்டும் இறக்குமதி செய் யப்பட்டும் வருகின்றது.

இக் கடல் வழியோரம் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் 36 நாடுகளின் மொத்த சனத்தொகை உலகச் சனத்தொகையில் 1/3 பங்காகும். இத்தேசங்கள் பொரு ளாதார அபிவிருத்தியில் பின் தங்கிய நாடுகளாக இருந்தபோதும் உலகிற்கு தேவையான 90% அத்தி யாவசியப் பொருட்களைத் தருவிக்கின்றன. ரப்பர், தேயிலை, கால் (Jute) தகரம், (Tin) போன்ற பொருட் களையும், எண்ணெய், தங்கம், வெள்ளி, வைரம், யுரே னியம், செம்பு, மங்கனீசு, கோபால்ட், கந்தகம், நிலக்கரி இன்னும் அநேக அரிதான கனிப் பொருட்க ளையும் இத்தேசங்கள் வளமாகக் கொண்டுள்ளன. கடந்த 500 வருடங்களாக இந்த வளங்களை அபகரித்து வந்த வல்லரசு நாடுகள் தொடர்ந்து அபகரிப்பதனைத் தொடர இந்துமா சமுத்திரத்தில் தளங்கள் தேடுவதை யும் அதன் மூலம், இந்து மா கடல் பிராந்திய நாடு களை அரசியல் பொருளாதார ரீதியில் பலஹீனப்படுத்த முனையும் எத்தனிப்பையும் நிராகரித்து இந்நாடுகள் தாம் பெற்ற சுதந்திரத்தை வலுப்படுத்தவும் தத்தமது பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளவும் இக் கடற் பிராந்தியத்தை அந்நிய தலையீட்டிலிருந்து தவிர்த்துக் கொள்ள எழுப்பிவரும் கோரிக்கைகளை வல் லரசு நாடுகள் அவதூறு செய்து வருவதை அவதா னிக்கலாம். அதற்கு உடந்தையாக இப்பிராந்தியத்தி லுள்ள சில நாடுகளின் அரசியல் போக்கும் அதன் தலை வர்களின் அடிவருடித்தனமும் அமைந்துள்ளது. உதா ரணத்திற்கு ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெய வர்த்தன கூட்டுச்சேரா கொள்கையிலிருந்து பிரள்வ தோடு அண்டைநாடுகளின் ஆக்கிரமிப்பும் தலையீடும் உண்டு என்ற மாயையில் அமெரிக்கா போன்ற நாடு களை உதவிக்கு அழைக்க முன்வந்துள்ளார். இவ்வாறு அந்நிய நாடுகளை அழைப்பதன் மூலம் ஸ்ரீலங்கா போன்ற நாடுகள் தமது கடந்த கால வரலாற்றை மறந்து விடு கின்றன. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் முன் னர் இலங்கையில் உள்நாட்டுக் குரோதங்களை தவிர்ப் பதற்காக வெளிநாட்டுப் படைகளை வரவழைத்ததன் பேரில் மேலும் சர்ச்சைகளும் போர்களும் நடந்ததனை சரித்திரம் நன்கு புலப்படுத்துகின்றது. இப்படியிருந் தும் இப்போது ஸ்ரீலங்காவில் 'தமிழ்த் தீவிரவாதிகளை' அடக்குவது என்ற பெயரில் ஸ்ரீலங்கா அரசு அமெரிக்க உதவியைப் பெற்றுள்ளது. இவ்வாறு அமெரிக்க உத வியை பெறுவதற்கு ஸ்ரீலங்கா கற்பிக்கும் மற்றுமொரு காரணம் இப்பிராந்தியத்தில் இந்தியாவின் அரசியல்-பொருளாதார விஸ்தரிப்புக், கொள்கையையேயாகும்.

இந்தியாவில் பொருளாதார விஸ்தீர எண்ணப்பாடு பற்றி தவறான கருத்துக்களை இந்தியாவின் பக்க நாடு கள் கொண்டுள்ளமைக்கான காரணத்தை எளிதில் புரிந்து கொள்ளலாம். 1948 ஆம் ஆண்டிற்கு பின் ஆசிய, ஆப்பிரிக்க பிராந்தியத்திலுள்ள சுதந்திர நாடுகளின் முன் னோடியாகவும் தலைவராகவும் கருதப்பட்டுவரும் இந் தியா, கடற் பிராந்தியத்திலும் பலமுள்ள ஒரு சக்தியாக இருக்க விரும்பியது நியாயமானதே. இதற்கான எண் ணப்பாட்டை வித்திட்டவர் இந்தியாவின் முதல் பிரத மரான ஜவகர்லால் நேரு ஆவார். அவர் ஒரு முறை பின்வருமாறு குறிப்பிட்டார். ''அதிகப்பற்ருக கடந்த காலத்திலும் அதற்கு முன்னை ஆதியான காலத்தி லும் கடற்போக்குவரத்தில் ஈடுபட்ட நாடுகளே கடலா திகத்தில் மட்டுமல்ல பொருளாதார ரீதியில் வளமுள்ள நாடுகளாக திகழ்ந்தன. இதற்காக கடல் வளமில்லாத நாடுகள் ஆதிக்கம் குன்றிய நாடுகள் என நான் கரு தவில்லை. அந்நாடுகளும் அவ்வப்போது ஆதிக்க பலம் கொண்ட நாடுகளாகவே இருந்து வந்துள்ளன. ஆயி னும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது கடலாதிக் கம் என்பது சரித்திரத்தில் ஒரு வலுவான அம்சமாகும்'' மேலே நேரு குறிப்பிட்டது போல் கடற்பிராந்தியத்தி லும் பொருளாதாரத் துறையிலும் இந்தியா பலம் பெற்று விடுமோ என்ற எண்ணமும் அச்சமுமே வல்லரசு நாடுகளை இந்து சமுத்திரத்தில் நிலைக்களம் கொள்ள தூண்டுவதாக கருதலாம். இதனாலேயே இந்தியாவின் விஸ்தரிப்பு பற்றிய குற்றச் சாட்டும், அதனால் இப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கும் உதவும் நோக் குடன் தமது படைகளை அமர்த்த முனைவதும் வெளிப் பாடாகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவின் சுதந்திரத் திற்குப் பின் இந்திய கடற் படையின் பங்கு பற்றி கணக்கில் கொள்ள வேண்டும். 1947ம் ஆண்டு பாக் கிஸ்தான் காஷ்மீரில் தலையிட்டபோது இந்திய கடற் படை எந்தவித செயற்பாட்டிலும் இறங்கவில்லை. அதே போல் 1965 ம் ஆண்டு இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலே சச்சரவும், பகைமையும் ஏற்பட்டபோதும் இந் திய கடற்படை குறிப்பிடக் கூடிய எந்தபங்கையும் ஆற்றவில்லை. ஆனால் 1971 ம் ஆண்டு இந்தியாவிற்கும் பாக்கிஸ்தானிற்கும் இடையில் சச்சரவுகள் மூண்டபோது இந்திய கடற்படை அமைதியாக இருக்கவில்லை. பாக்கிஸ் தானிய விமானக் கப்பல்கள் இந்திய விமானத் தளங் களை தாக்கிய போது இந்திய கடற்படை செயற்பட ஆரம்பித்தது. இந்திய கடற்படை தன் வசமிருந்த வலுவிழந்த படையினரையும், பாவனையில் பழசாகி விட்ட நீர்மூழ்கி கப்பல்களையும், ஏவுகணை கொண்ட கப்பல்களையும், ரோந்து கப்பல்களையும், கொண்டு கராச்சி துறைமுகத்தைத் தாக்கியது. அதன் மூலம் பாக்கிஸ்தானுக்கு இழப்புகளை, ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து மற்றுமொரு தாக்குதல் மூலம் இந்திய கடற்படையின் வலிமைக்கு பாக்கிஸ்தானிய கடற்படை எதிர் நிற்க முடியாதளவிற்கு செயற்பட்டது.

பின் இதற்குப் பாக்கிஸ்தான் கரையோரமாக இந்திய படையினை ஏற்றிச்செல்லும் ''விக்ரண்ட்'' கப்பலை அமிழ்த்தும் நோக்கமாக பாக்கிஸ்தானிய நீர் மூழ்கிக் கப்பல் ''காஸி'' அமர்த்தப்பட்டிருந்தது. ஆனால் இந்திய கடற் படையினரின் திட்டமிட்ட அணுகு முறையினால் கிழக்குப் பாக்கிஸ்தான் பகுதி களான குல்னா, சாலா, மொஸ்லா, சிட்டகொஸ், மற் றும் ஏனைய துறைமுகங்களைத் தாக்கியதோடு அங்கி ருந்த பாக்கிஸ்தானிய துருப்புகளை வங்காள தேசத் திலிருந்து வெளியேற விடாது தடுக்கவும் செய்தது. இதனால் 97000 பாக்கிஸ்தானிய துருப்புக்கள் இந்திய இராணுவத்திடம் சரணடைந்தார்கள். இந்திய கடற் படையின் இச்செயற்பாடுகள் இந்தியாவின் எதிரிகளை, முக்கியமாக 'இந்தியா ஒரு பின் தங்கிய நாடு; வறுமை யும் பசியும் பட்டினியும் மலிந்து கிடக்கின்ற நாடு; தொழில் மயப் படுத்துவதற்கோ அல்லது அபிவிருத்தி செய்வதற்கோ வக்கில்லை' என்று எண்ணிக் கொண்ட வல்லரசு நாடுகளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. இதன் மூலம் அந்நாடுகள் இந்துமா கடலில் நிலைக் களன் கொள்ளும் எண்ணம் ஈடாட்டம் கண்டது. மேலும், வியட்நாமிலிருந்து அமெரிக்க ராணுவம் வெளி யேற்றப்பட்டதும், ஆப்கானிஸ்தானிலும், ஈரானிலும் நிகழ்ந்த மாற்றங்களும், கம்பூச்சியாவிலி ருந்து பொல் பொட்டின் இராணுவ அதிகாரம் கவிழ்க் கப் பட்டதும் அதே நேரத்தில் ஆசிய ஆபிரிக்க நாடு களில் தோன்றியுள்ள ஏகாதிபத்தியத்திற்கு எதிரான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலை அணிகளும் இன்றும் அமெரிக்க ஆதரவுடன் இயங்கும் தென் கிழக்காசிய கூட்டணி' (SEATO) போன்ற அமைப்புக்களை செயலிழக்கச் செய்தமையும் இந்துமா கடலில் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் தடுக்கப்பட்டு வருவதையே சுட்டிக்காட்டுகிறது. ஆனாலும் அரசியல் ஆய்வாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியதொன்று என்ன வெனில் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக இந்துமா கடலையும் அதை யொட்டிய நாடுகளையும் அடிமைப் படுத்தியும், இந்த நாடுகளின் வளங்களை அபகரித்தும் வந்த வல்லரசு நாடுகள் தொடர்ந்தும் இப்பகுதியினை ஆக்கிரமிக்க முனையும் என்பதனையே இந்த வல்லரசு நாடுகள் தமது ஆதிக்கத்தை செலுத்த முடியாத பட்சத்தில் இப்பிராந்தியத்திற்குள் உள்ள நாடுகளிடையே பகைமையைத் தோற்றுவித்து அதன் மூலம் சச்சரவுகளையும் விளைவிக்க முனையும். உதாரணத்திற்கு, அமெரிக்கா பாக்கிஸ்தானுடைய தேவைக்கு மீறி அதற்கு ஆயுத உதவி செய்துள்ளதன் மூலம் இந்தியாவிற்கு ஒரு எதிராளியாகவே பாக்கிஸ்தானை தயார் படுத்தியுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையே பொருளாதார கூட்டையும் இறுக்கப் படுத்தியுள்ளார்கள். இதையே ஆசிய ஆபிரிக்க நாடுகள் வெளிப்படுத்தும் பொருளாதாரக் கொள்கைகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. மேற்கத்தைய நாடுகளின் பொருளாதார உதவியையும் அந்நாட்டு சந்தைகளிலும் உள்ள நம்பிக்கையை குறைக்கு மளவிற்கு இந்நாடுகளிற்குள் பிராந்திய பொருளாதார கூட்டுறவும் ஐக்கியமும் வளர்க்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த நாடுகள் பெரும்பாலாக கூட்டுச் சேரா நிலைப்பாட்டினையே விரும்புகின்றன. இந்நிலைப் பாட்டை வலுப்படுத்த சோஷலிஸ நாடுகளுடன் தமது உறவுகளை இறுக்கப்படுத்தி வருகின்றன.

கடந்த நூற்றாண்டுகளாக மேற்கத்தைய காலனித்துவ ஆதிக்க வாதிகளான இங்கிலாந்து, பிரான்சு போர்த்துக்கல், ஒல்லாந்து, இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகளே இந்து சமுத்திரத்திலும் அதன் கரையோர நாடுகளிலும் அதிகாரம் செலுத்தி வந்தன. ஆனால் கடந்த நூற்றாண்டுகளாக அமெரிக்காவும் தனது நிலைக் கொள்ளலை வெளிப்படையாக்கியுள்ளன.

**இந்துமாகடல் பகுதியை எடுத்துக் கொண்டால் இப் பிராந்தியம் இன்று வல்லரசுப் போட்டிக்கு களமாக இருந்தாலும் இதன் அரசியல் ரீதியான முக்கியத்துவம் மிகவும் வலியது.**

இந்து சமுத்திரத்தை ஆக்கிரமிக்க முனையும் சக்திகள் இந்தியாவின் அண்டை நாடுகளான வங்காள தேசத்திற்கும், நேபாளத்திற்கும் ஆயுத உதவி செய்து வருகின்றன. இந்த சூழ்நிலையை மேலும் வலுப்படுத்து மளவிற்கு இந்தியாவின் மற்றுமொரு பக்க நாடான ஸ்ரீலங்கா அமெரிக்க உதவியினை பெற்றுள்ளது. அதே நேரத்தில் இஸ்ரேலிடத்திலும், தென்னாபிரிக்காவிடத்திலும் இருந்து ஆயுத உதவிகளைப் பெறுகின்றது ஸ்ரீலங்கா.

மனித உரிமைகள் பேணப்படல் வேண்டும் என்று பேரம் பேசும் ஸ்ரீலங்கா இஸ்ரேலிய தேசத்தினால் நசுக்கப்படும் பாலஸ்தீனருக்காக குரல் கொடுப்பதோடும் தென்னாபிரிக்காவில் இருக்கக்கூடிய நிற வெறிக்கு எதிராக குரல் கொடுப்பதோடும் தன்னை இணைத்துக் கொள்ளும் அதே வேளையில் மேற் கூறிய நாடுகளிலிருந்து ஆயுதம் பெறுவது நகைப்பிற்கிடமானதே. அதுவும் ஈழப்போராளிகளை நசுக்குவதற்காக என்று சொல்ல இந்நாடுகளில் இருந்து ஆயுதங்களைப் பெறுவது ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மிலேச்சத்தனமான போக்கினையே எடுத்துக் காட்டுகின்றது. இந்தப் போக்கின் மூலம் இந்துமா கடலை அமைதிப் பிராந்தியமாக அமைத்துக் கொள்ள முனையும் ஏனைய பிராந்திய நாடுகளின் எண்ணப்பாட்டிற்கு இடையூறாகவே ஸ்ரீலங்கா அரசு இருந்து வருகின்றது. ஸ்ரீலங்கா அரசின் போக்கு என்னவாக இருப்பினும் இந்துமா கடற் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் ஏகோபித்த கொள்கை, இப்பிராந்தியத்தில் ஏகாதிபத்தியத் தலையீட்டை தவிர்ப்பதற்கான எண்ணப் பாடாகவே அமைந்துள்ளது. இதையே அண்மையில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும் மாலைதீவு ஜனாதிபதியும் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வலியுறுத்துகிறது. இவ்வறிக்கை மூலம் இந்துமா சமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாக பிரகடனப் படுத்தப்பட்ட எண்ணப்பாட்டிற்கு முழுவடிவம் கொடுக்க வேண்டியதற்கான செயற்பாட்டின் அவசியத்தை இரு தலைவர்களும் வற்புறுத்தியுள்ளார்கள். அதன் முதற்படியாக

இரண்டாவது மகாயுத்தத்தின் பின்னர் ஆசியக் கண்டத்தில் தோன்றிய விடுதலை இயக்கங்கள் இப்பிராந்தியத்தில் பலத்த தாக்குதலான மாற்றத்தை ஏற்படுத்தியது. இப்பகுதியிலிருந்து வெளியேற முடியாது என்ற அளவிற்கு வேரூன்றியிருந்த அந்நிய ஆதிக்கங்களை படிப்படியாக வெளியேற வைத்து புதிய சுதந்திர நாடுகள் உருவாகின. இந்த வரிசையில் கடந்த 1978ம் ஆண்டு ஜூன் மாதம் 27ம் திகதி ''ஜிபெட்டி'' தேசம் காலனித்துவாதிக்கதிலிருந்து விடுவிக்கப்பட்டு சுதந்திர தேசமாக பிரகடனப் படுத்தியதோடு இப்பிராந்தியத்திலிருந்து காலனித்துவாதிக்கத்தின் இறுதி நிலக்களனும் அகற்றப்பட்டது. இருந்தாலும் இந்துமாகடலில் ஏகாதிபத்திய சக்திகள் நிலவுதலை தவிர்க்க முடியவில்லை. காரணம் காலனிகள் அகற்றபட்ட போதும் அதற்குப் பதிலாக ஏகாதிபத்தியத்தின் தலையீடு அதிகரித்துள்ளது. இந்த வகையில் அமெரிக்கா தனது பொருளாதார விஸ்தரிப்பை இந்துமாகடலில் இறுக்கப் படுத்துகின்றது. இதனால் அண்மை காலத்தில் இந்து சமுத்திர பிராந்தியத்தில் மட்டும் 12 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேலாக அமெரிக்கா முதலீடு செய்துள்ளது. இதன் மூலம், தனது அரசியல் ஆதிக்கத்தை இழந்த நாடுகளில், பொருளாதார ஆதிக்கத்தை செலுத்துவதன் மூலம், இப்பிராந்தியத்திலும், இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளிலும் உள்ள மூலப் பொருட்களையும் வளங்களையும் அபகரிக்கவே திட்ட மிட்டு வருகிறது. இதற்காகவே இந்துமா சமுத்திரத்தில் தனது கடலாதிக்கத்தை பெருக்க, டியேகோ கார்சியா போன்று மற்றுமொரு கேந்திர தளத்தை திருகோணமலையில் அமைத்துக்கொள்ள திட்டமிட்டு வருகிறது. இதை தடுக்கும் வகையிலேயே ஈழப்போராட்டம் அமைந்து வருகிறது. இதன் பரிமாணங்களை தனியாகப் பார்க்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக...




லிபியா மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக சென்னையில் ஈழ விடுதலை அமைப்புகள் ஊர்வலமாகச் சென்று அமெரிக்கத் தூதுவராயம் முன் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

## ஈரோஸ் அறிக்கை

**விமானத் தாக்குதல்கள் நிறுத்தம் :**

14—3—86 முதல் 20—3—86 வரை விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்படும் என 13—3—86 ல் ஸ்ரீலங்கா அரசு அறிவித்ததன் பின்னணி என்ன என்பது எம்மால் ஏற்கெனவே வெளியிடப்பட்டதாகும். குறிப்பிட்ட அந்த வாரத்திற்கிடையில் 75 அப்பாவித் தமிழர் கொல்லப்பட்டனர். 500 க்கு மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனோடு பல தமிழ்ப் பெண்கள் பாதுகாப்புப் படையினரால் கற்பழிக்கப்பட்டும், தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள், வீடுகள், வயற்காணிகள் தீயிடப்பட்டுள்ளன. ஆகவே ஸ்ரீலங்கா அரசு தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுள்ளதென்றும் பேச்சுவார்த்தைக்காக எம்மை அழைப்பதிலும் என்ன நியாயம் இருக்கின்றது.

ஆகவே ஸ்ரீலங்கா அரசின் இந்தப் போலி நாடகச் சிக்கலை இந்திய அரசே விடுவிக்க வேண்டுமென நாம் விரும்புகின்றோம். சகல மனித உரிமைகள் அமைப்புகளையும் நாம் கேட்டுக் கொள்வது யாதெனில் ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு படையினரால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்தி அவர்களை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழப்போராட்டமும் அதன் சர்வதேசியக் கடமையும்

ஈழப் போராட்டம் என்பது சர்வ தேச ரீதியில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானது எனவும் உலகெங்கும் வாழும் பாட்டாளி வர்க்கப் தன் விடிவுக்காக நடத்தும் போராட்டத் தின் அங்கம் எனவும் கூறப்படுகின் றது. ஆனால் இதன் சரியான உள் ளடக்கத்தையும், அர்த்தத்தையும் புரிந்து கொள்ளும் போதே ஈழப் போராட்டத்தின் நிச்சயமான வெற்றி குறித்தும், அதன் நீடித்து நிலைக்கும் தன்மை பற்றியும் புரிந்து கொள்ளப்படுதல் இலகுவானதாகும்.

எனவே, இப்பிரச்சினை பற்றி ஆராயுமுன் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம், இந்து மா கடல் பிராந்தியத்தில் வல்லரசுப் போட்டி யும் அதன் காரணங்களும், ஈழப் போராட்டத்தின் ஆரம்பம் முதலே வெளிநாடுகளின் ஆதரவு என்பனவற் றைத் தனித்தனியே நோக்கலாம்.

இந்து மா கடல் பிராந்தியத் தில் இந்தியாவின் தென்புறமாக 24 மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு தீவு தான் இலங்கை. 240 மைல் நீளமும், 140 மைல் அகலமும் கொண்ட இலங்கைத் தீவு ஏறத்தாழ 1½ கோடி சனத் தொகையினையும், 25,332 சதுர மைல் பரப்பளவையும் கொண்டதாகும். சுற்றிலும் பல தீவுக் கூட்டங்களைக் கொண்டிராத இலங்கையின் இயற்கையமைப்பு இந்து மா கடல் பகுதியில் மிக முக்கியமான ஒரு கேந்திர நிலைய மாகும். மேலும் இத்தீவின் கிழக்குப் பகுதியில் உள்ள திருகோணமலைத் துறைமுகமும் மிகவும் பிரசித்தி பெற்றதும், பாதுகாப்பானதும் ஆகும். திருகோணமலைத் துறை முகத்தில் உள்ள வசதிகளும் நன் மைகளும் பின்வருமாறு அமை கின்றது. முதலாவது துறைமுகத்தி னுள்ளேயே ஏறத்தாழ 10 பக்கத்திற் மேல் ஆழமான நீரைக் கொண்டுள் ளது. இதனல் எந்தப் பெரிய கப்ப லும் துறைமுகத்தினுள் இலகுவாக வரமுடியும். அடுத்து பாறைகள் எதுவுமில்லாததாக காணப்படுகின் றது. மூன்ருவதாக, இயற்கையாக வே சுற்றிலும் மலைகளைக் கொண்ட குடாக் கடல்கள் பல காணப்படுகின் றன. இதனல் புயல், சூருவளி போன்ற இயற்கை அழிவுகளின் போதும் கப்பல்கள் அதிகம் பாதிக் கப்படாதவாறு கட்டி வைக்க முடியும்.

இதே போல் பாதுகாப்பு ரீதியி லும் துறைமுகத்தின் உட்புறத்தில் நிற்கும் கப்பல்களை எதிரிக் கப்பல் கள் கண்டறிவது மிகவும் கடினமான தாகும். ஏனெனில் துறைமுகம், உட்புறத் துறைமுகம் வெளிப்புறத் துறைமுகம் என இரு பெரும் பகுதி களாக்கப்பட்டுள்ளது. உட்புற துறை முகத்தினுள் நுழைவதற்கு ஒரு வழிப் பாதை மட்டுமே இருப்பதுடன் இப் பாதையின்இருமருங்கிலும்பாரிய மலை கள் இருப்பதோடு, இம் மலைகளிடை யிலான இடைவெளி குறைவாகவே இருப்பதனல் தேவையற்ற விருந்தி னர்களை இலகுவாக முறியடித்து விட முடிகிறது. அத்துடன் பாரிய எண் ணெய் குதங்கள் துறைமுகத்திலேயே இருப்பது மிகச்சிறந்த ஒரு வசதியா கும். இப்படியாகப் பல்வேறு வசதி களைக் கொண்ட இயற்கை அரண் மிக்க திருகோணமலைத் துறைமுகத் தை தமது கட்டுப்பாட்டினுள் வைத் திருக்க வல்லரசுகள் போட்டியிடுவ தில் வியப்பொன்றுமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்ததாக இந்து மா கடல் பகுதியை எடுத்துக் கொண்டால் இப்பிராந்தியம் இன்று வல்லரசு போட்டிக்கு களமாக இருந்தாலும் இதன் அரசியல் ரீதியான முக்கியத்துவம் மிகவும் வலியது. முதலாவதாக உலகின் மற்றைய பாகங்களிலுள்ள பசுபிக், அத்திலாந்திக் கடல்களைப் போல் அல்லாமல் எல்லாப் பருவக் காலங்களிலும் கடற் பயணம் மேற்கொள்ளக் கூடிய கடற்பிராந்தியம் இந்து மாக்கடல் பகுதியாகும். உலகின் மொத்த கப்பற் போக்குவரவில் ஏறக்குறைய 2 / 3 பங்கு கடற்பகுதியின் ஊடாகவே இடம் பெறுகின்றது என்பதை எண்ணிப்பார்த்தால் இதன் முக்கியத்துவம் மேலும் புலனாகும். எண்ணெய், மற்றும் பலவகையான கனிப் பொருட்களின் விளை நிலமாக இருக்கும் இப்பிராந்தியம் ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா என்னும் மூன்று கண்டங்களையும் இணைத்திருப்பதுடன், தன் கரையோர நாடுகளில் அதிகளவு சனத் தொகையையும் கொண்டிருக்கிறது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளையும் ஆசிய மற்றும் தூர கிழக்கு நாடுகளையும் இணைக்கும் மிகக்கிட்டிய கப்பற் போக்குவரவு வழியாகவும் இந்தப் பிராந்தியம் விளங்குகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பாதியானது உலகின் பல காலனிகளும் தேசிய எழுச்சிபெற்று விடுதலைக்காக போராடியதும் போராடிவருவதும் தெரிந்ததே. குறிப்பாக 2ம் உலகமகா யுத்தத்தின் முடிவின் பின்னர் ஆசிய ஆபிரிக்கக் கண்டங்களைச் சேர்ந்த பல தேசங்களில் மக்கள் தங்கள் விடுதலைக்காக மூர்க்கமாகப் போராடலாயினர். இத்தகைய போராட்டங்களினால் இப் பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த பிரித்தானிய பிரெஞ்சு, போர்த்துக்கல் காலனித்துவ வாதிகள் ஆட்டம் கண்டனர். சுதந்திரம் அளித்துவிட்டு தத்தப் நாடுகளை நோக்கி நகரத் தொடங்கினர் ஏகாதிபத்தியம் சரியத் தொடங்கிய நிலையில் அதனைத் தாங்கி நிறுத்தவும், தொடர்ந்து தமது சுரண்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமெரிக்கா தனது தலைமையில் வட அத்திலாந்திக் ஒப்பந்த தாபனம் எனப்படும் இராணுவக் கூட்டணியை நிறுவியது. இதே போல் சோவியத் யூனியனும் இத்தகைய இராணுவக் கூட்டணிக்கு எதிராக தானும் ஒரு இராணுவக் கூட்டணியை ஏற்படுத்தியது. இது வார்சா ஒப்பந்த தாபனம் எனப்படுகிறது. போலந்து நாட்டின் தலைநகரான வார்சோவில் இடம் பெற்ற மாநாட்டையடுத்து இக் கூட்டணி பிரகடனப்படுத்தப்பட்டது. நேட்டோ எனப்படும் வட அத்திலாந்திக் ஒப்பந்த தாபனத்தில் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளும், வார்சா ஒப்பந்த தாபனம் சோவியத் யூனியன் தலைமையில் போலந்து, ருமேனியா, செக்கோசெலவாக்கியா ஹங்கேரி போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் செயற்படுகின்றன.

இதே போன்றதான இராணுவக் கூட்டணிகளை ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் தோற்றுவிக்க விரும்பிய ஏகாதிபத்தியம் சியாட்டோ சென்டோ எனப்படும் இரு கூட்டணிகளை 50ன் ஆரம்பத்தில் தோற்றுவித்தது. தென் கிழக்காசிய ஒப்பந்த தாபனம் மத்திய கிழக்காசிய ஒப்பந்தத் தாபனம் என்பன போன்ற இராணுவக் கூட்டணிகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் ஏற்கனவே காலனித்துவத்தின் நுகத்தடியில் சிக்குண்ட அனுபவம் பெற்றிருந்த ஆசிய ஆபிரிக்க நாடுகள் ஏகாதிபத்தியத்தின் சதிவலைக்குள் தம்மைச் சிக்க வைக்காமல் இருக்க தமக்குள் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தத் தலைப்பட்டன. இந்தியாவின் அப்போதைய பிரதமர் நேரு, எகிப்தின் அப்போதைய தலைவர் நாசர், யூகோசிலாவியாவின் அப்போதைய தலைவர் டிட்டோ ஆகியோர் இணைந்து அணி சேராமை என்ற புதிய கொள்கையின் அடிப்படையில் இணக்கம் கண்டு அணிசேரா நாடுகள் என்ற புதிய கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தினர். ஏகாதிபத்திய அணியையும் அதே போல் முற்போக்கு முகாமையும் சாராமல் தத்தமது தனித்துவத்தை பாதுகாக்கும் விதத்தில் எந்த அணியிலும் தங்கியிராமல் அணிசாரா நாடுகள் என்ற கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஏறத்தாழ இதே கால கட்டத்தில் இடம் பெற்ற பாண்டுங் சமாதான மாநாடு மற்றும் பல தரப்பான முயற்சிகளின் பயனாக இப் பிராந்தியத்தில் ஏற்படுத்தப்பட்ட ஏகாதிபத்திய சார்பான இராணுவக் கூட்டணிகள் செயலிழக்க வைக்கப்பட்டன.

இதனால் இந்து மா கடல் பிராந்தியத்தில் ஒரு அரசியல் வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாகக் கருதிய ஏகாதிபத்தியம் தன்னை நிலைநிறுத்த சில தந்திரோபாயங்களைக் கையாள்கிறது. முதலாவதாக வர்த்தகக் கூட்டணி என்ற வகையில் தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்சு, இந்தோனேசியா போன்ற ஏகாதிபத்திய அடிவருடி நாடுகளைக் கொண்டதாக 'ஆசியான்' தென்கிழக்காசிய நாடுகள் சம்மேளனம், என்ற ஒரு அமைப்பை உருவாக்கி பொருளாதார உதவிகளை வழங்குவதன் மூலம் தனது கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொண்டுள்ளது. இரண்டாவதாக சனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசுகளைக் காட்டிலும் இராணுவப் புரட்சி மூலம் அரசாளும் இராணுவ ஜுன்டாக்களுக்கு தன்னாலான முழு ஒத்துழைப்பையும் நல்குகிறது. இந்த வகைக்கு உதாரணமாக இந்தோனேசியா சுகாட்டோ, பிலிப்பைன்சின் மார்க்கோசு, பாகித்தானின் சியா-வுல்-ஹக் ஆகியோருக்கு அமெரிக்கா உதவுவதைக் குறிப்பிடலாம். மூன்றாவதாக நேரடியாக இராணுவத் தளங்களை நிறுவுவதன் மூலம் இப்பிராந்தியத்தைத் தமது செல்வாக்கு மண்டலத்திற்குள் வைத்திருக்க முயல்கின்றது. இதற்காகவே மொரீசியசின் டீகோகார்சியாவில் அமெரிக்கா தனது இராணுவத்தளத்தை நிறுத்தி அதன் பலத்தைப் பலமடங்கு பெருக்கி வருகின்றது. இதைப் போலவே தனக்குச் சார்பான நாடுகளில் இராணுவத் தளத்தைப் பெறவும், தமது இராணுவத்திற்கும், கடற்படைக்கும், ஓய்வெடுக்கவும், களியாட்ட வசதிகளைப் பெறவும் பெரிதும் முயன்று வருகின்றது. மேற் குறிப்பிட்ட வகைகளில் இந்து மாக்கடல் பிராந்தியத்தை தனது செல்வாக்கு மண்டலமாகப் பிரகடனப்படுத்திவிடுவதற்கு ஏகாதிபத்தியம் பகீரதப் பிரயத்தனப்பட்டு வரும் இவ்வேளையில் அதற்கெதிரான ஏகாதிபத்திய எதிர்ப்பு மனோபாவமும் இப்பிராந்தியத்தில் வலுவடைந்து வருவதனையும் உணர முடிகிறது.

வியட்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தோற்கடிக்கப்பட்டதனையடுத்தும், இப்பிராந்தியத்தில் எழுச்சி பெற்ற மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களையும் உன்னித்துப் பார்த்தால் இங்கு வளர்ந்துவரும் ஏகாதிபத்திய எதிர்ப்பின் தன்மை புலனாகும். பிலிப்பைன்சில் மோரோ தேசிய விடுதலை முன்னணி, இந்தோனேசியாவின் சுகார்டோவிற்கு எதிரான கிளர்ச்சிகள் என்பவற்றோடு, ஈழத்தின் விடுதலைப் போராட்டத்தையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு வரிசையில் சேர்த்துக்கொள்ள முடியும்.

இனி இந்து மாகடல் பிராந்தியத்தில் சோவியத் யூனியனின் கவனமும் அக்கறையும் சம்பந்தமாக ஆராயலாம். சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில் உறைபனிக்காலங்களில் பால்டிக் கடல் துறைமுகப் பகுதியில் கட்ட முடியாத போர்க் கப்பல்களை பசுபிக் சமுத்திரத்திலுள்ள துறைமுகங்களுக்கு நகர்த்திச் செல்லும் பாதையில் இந்து மா கடல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரதான பங்கை வகிக்கிறது. அத்துடன் சோவியத் யூனியனின் கிழக்கு ஐரோப்பியப் பகுதிகளையும், ஆசியப்பகுதிகளையும் இணைக்கக் கூடிய ஒரே ஒரு கப்பற் போக்குவரவு வழியாக இருப்பதும் இந்துமா கடல் பகுதியே. இக் காரணங்களால் சோவியத் யூனியன் இந்தப் பிராந்தியத்தை அமைதி மண்டலமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்பதில் மிகவும் குறியாக இருக்கிறது. அதாவது அமைதி மண்டலம் என்றால் இராணுவத் தளங்கள் இடம் பெறுமலும், போர்க்கப்பலின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், ஆதிக்கப் போட்டிகளைத் தவிர்க்கவும் வேண்டுமெனப் பெரிதும் முயல்கின்றது. ஆனால் சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில் இந்தியா, வியட்னும் போன்ற உறுதியான நட்பு நாடுகள் அதற்கு இப்பிராந்தியத்தில் செயற்படுவதனைத் தனது வேலைக்கு சாதகமாகப் பயன் படுத்தி வருகிறது

இவ்வாறாக இந்து மாக்கடல் பிராந்தியம் அமைதி மண்டலமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை இப்பிராந்தியத்தின் கரையோர நாடுகளால் கிளப்பப்பட்டு ஏறத்தாழ பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிறது. இப் பிராந்தியத்திலுள்ள கரையோர நாடுகளான இந்தியா, இலங்கை, மொரிசீயஸ் மற்றும் ஆபிரிக்க நாடுகள், தூர கிழக்காசிய நாடுகள் என்பன இக்கோரிக்கையை பலவேறு மட்டங்களிலும் வற்புறுத்தி வருகின்றது,

76இல் கொழும்பில் கூடிய அணி சேரா நாடுகள் இந்துமாகடல் அமைதிப் பிராந்தியமாக வேண்டும் என்பதில் ஆக்கப்பூர்வமான தீர்மானங்களை நிறைவேற்றின. இதன்பின் ஐ. நா. சபைக்கும் இத் தீர்மானம் எடுத்துச் செல்லப்பட்டது. இது சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

76ன் பின் கூடிய ஒவ்வொரு அணி சேரா நாடுகள் மாநாடும் இந்தத் தீர்மானம் குறித்து தமது நிலையை நிர்ணயம் செய்தன. எனினும் இலங்கையில் 77ன் பின் பதவியேற்ற ஜே. ஆர். அரசாங்கம் அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டைக் கொள்ளத் தொடங்கியதால் இத் தீர்மானத்தை வரவேற்று நிறை வேற்றுவதில் தயக்கம் காட்டி வருகிறது. அணிசேரா நாடுகள் மாநாட்டிலும் பின் ஐ. நாவிலும் மேற் கொள்ளப்பட்ட தீர்மானப்படி 1979ல் கூட்டப்பட வேண்டிய இந்து சமுத்திரக் கரையோர நாடுகளின் மாநாட்டைக் கூட்டாமல் காலம் கடத்தி வருகின்றது. அமைதி மண்டலமாகப் பிரகடனப் படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த பல சந்தர்ப்பங்களில் அமெரிக்கா விற்கு சார்பாக அதிக அக்கறை காட்டாமல் அசட்டை செய்துள்ளது.

இந்தச் சூழலில், எமது போராட்டத்தின் படி முறை வளர்ச்சி பற்றி ஆராயலாம். இலங்கையில் 1978ல் நிகழ்ந்த அதிகார கைமாறலையடுத்து தமிழ் பேசும் மக்கள் இனரீதியாக அடையாளம் காணப்பட்டு ஒடுக்கப் பட்டனர். இத்தகைய ஒடுக்குதலில் முதற்பலியாக்கப்பட்டவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர் ஆவர். தமிழ் பேசும் மக்கள் கூட்டத்தின் அடிப்படைமக்கள் ஆகிய இவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் தொடர்ந்து, 56ல் கீழ் மத்திய தரவர்க்கத்தைச் சார்ந்த அரசாங்க ஊழியர்கள் அரச கரும மொழிசட்டத்தால் பாதிக்கப்பட்டனர். இவ்வாறு தொடர்ந்த இன ஒடுக்குமுறை 70 களில் மாணவ இளைஞர்களை நேரடியாக பாதிப்புக்கு உள்ளாக்கிய போது தமிழ் பேசும் மக்கள் வீறுகொண்டு போராடத் தலைப்பட்டனர். 70களில் முனைப்பு பெற்ற தமிழ் பேசும் மக்களின் உரிமைக்கான போராட்டம் 75 அளவில் ஈழ விடுதலைப் போராட்டமாக பரிணமம் பெற்றது.

**தமிழ்பேசும் மக்கள் இனரீதியாக அடையாளம் காணப்பட்டு ஒடுக்கப்பட்டனர். இத்தகைய ஒடுக்குதலில் முதற்பலியாக்கப்பட்டவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர் ஆவர்,**

இவ்வாறாக ஈழவிடுதலைப் போராட்டம் பரிணமம் அடைந்த காலகட்டத்தில் அதற்கான சர்வதேசிய சூழலிலான ஆதரவும் அநுதாபமும் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியது. ஈழப் போராட்டத்தில் ஈழவரல்லாத வெளி நாட்டாரும் அதிகம் ஆர்வமும் அக்கறையும் காட்டத் தொடங்கினர். 74ல் தமிழராய்ச்சி மாநாட்டின் சோகமான முடிவையடுத்து இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் துயரமான வாழ்வு வெளிப்படையாகத் தொடங்கியது. இக்கால கட்டத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த சிறுபான்மையினர் உரிமைக்குழு இத் தீவில் தேசிய சிறுபான்மையினர் அநுபவிக்கும் அடக்குமுறைகள் பற்றி ஒரு ஆய்வு நூல் வெளியிட்டனர். இதன் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்த சர்தேச மன்னிப்புச் சபை அரசியல் காரணங்களுக்காக விசாரணையின்றித் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் அநுபவித்த கொடுமைகளைச் சுட்டிக்காட்டி அறிக்கை வெளியிட்டது. இதே போல் அனைத்துலக நீதிச் சபைக்கு அப்போதைய தமிழர்களின் தலைவர் செல்வா எழுதிய கடிதமும் இன்ன பிறவுமாக ஈழப் போராட்டம் சர்வதேச அரசியல் அரங்கில் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. 1975ல் இலண்டனில் இலங்கைகிரிகட்கோஷ்டியை துடுப்பெடுத்து ஆடவிடாமல் ஈழத்தமிழர்கள் தடுத்ததும், இக்கால கட்டத்தில் கல்வி வாய்ப்பை நாடியும், தொழில் வாய்ப்பைத் தேடியும் ஈழத்தமிழர்கள் பலரும் நாட்டை விட்டு வெளியேறியதும் ஈழத்தமிழர்களின் இன்னல் உலகின் பல பாகங்களுக்கும் எடுத்துச் செல்லும் வாய்ப்பை வழங்கியது. சர்வதேசஜூரர்கள் சபையும் கூட இலங்கை அரசாங்கத்தின் போக்கினுல் திட்டமிட்டு ஒரு சாரார் ஒடுக்கப்படுவதனை ஊர்ஜிதம் செய்தது.

இவ்வாறான செயற்பாடுகளின் தொடர்ச்சியும், வளர்ச்சியும் ஈழப் போராட்டத்தின் நியாயத்தையும், இது ஒரு ஒடுக்கப்படும் மக்களின் போராட்டம் என்பதையும் உலகின் முன் உறுதிப்படுத்தியதன் விளைவாக 76 இன் ஆரம்பத்தில் சர்வதேச ரீதியாக விடுதலைக்காக போராடிவரும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் இணங்கியது, ஈழவர்களுக்கு உதவ முனைந்தது பயிற்சி வசதியும், ஆயுத வசதியும் அளிக்க பாலஸ்தீன விடுதலை இயக்கம் இணங்கியது, ஈழவர்களுக்கு உதவ முனைந்தது, பயிற்சி வசதியும், ஆயுதவசதியும் அளிக்க பாலஸ்தீன விடுதலை இயக்கம் இணங்கியது, இதன் விளைவாக இலண்டனில் இருந்து ஈழப் போராட்டத்தின் வளர்ச்சிக்காக உழைக்க முயன்ற தோழர்கள் சிலர் ஆயுதப் பயிற்சி பெறலாயினர். இது ஈழப்போராட்டத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது, இது ஈழப் போராடடத்தை ஒரு புதிய பரிணமத்தை நோக்கி நகர வைத்தது.

இதன் தொடர்ச்சியில், 78ல் இங்கிலாந்தில் இடம் பெற்ற ஈழம் ஆராய்ச்சி மாநாட்டையும், 77ஆகஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டில் இலண்டனில் நடைபெற்ற ஈழமாணவர் மாநாட்டையும் குறிப்பிடலாம். இவ்விரண்டு மாநாடுகளிலும் பல்துறையைச் சார்ந்த பல வெளிநாட்டுப் போராளர்களுடன், விடுதலை இயங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்படப்பலரும் பங்கு பற்றினர். இவ்வாறாக ஈழப் போராட்டம் சர்வதேச ரீதியில் முற்போக்கு முகாமைச் சேர்ந்தோரின் அபிமானத்தையும், ஆதரவையும் அதன் ஆரம்பத்திலேயே பெற்றுவிட்டிருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

83 யூலைக் கலவரங்களையடுத்து ஏகாதிபத்தியம் தான் யாருக்கு சார்பாக செயற்படுவேன் என்பதை இலங்கை மண்ணில் ஐயம் திரிபின்றி நிரூபித்துவிட்டது.

முற்போக்கு முகாமின் ஆதரவைப் பெற்றிருந்த ஈழப் போராட்டத்தின் வளர்ச்சி ஏகாதிபத்திய எதிர்ப்பை இப்பிராந்தியத்தில் பலப்படுத்தும் என்பதை ஏகாதிபத்தியமும் உணரத் தொடங்கியது. இதனால் ஈழப் போராட்டத்தில் ஒரு சாராரை தனது கைக்குள் வசப்படுத்த ஏகாதிபத்தியம் எடுத்த முயற்சியும் முளையிலேயே தெரியத் தொடங்கியது.

1978 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாநிலம், ஆளுநர் எட்வேட்சிங் தலைமையில ''தமிழீழத்திற்கு ஆதரவாக'' தீர்மானம் நிறைவேற்றியது. அதே ஆண்டில் சோமர்வில்லி என்னும் இன்னுமொரு அமெரிக்க மாநிலம் திருகோணமலையைத் தனது சகோதர நகரம் எனப் பிரகடனம் செய்தது.

இந்த வெற்றுக் காகிதத் தீர்மானங்களின் சரியான உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ளாத தமிழர் விடுதலைக் கூட்டணியும், அப்போது அதன் ஊது குழலாயிருந்த 'சுதந்திரன்' பத்திரிகையும் ஏகாதிபத்தியத்திற்கு 'லாலி' பாடின. அமெரிக்கா கூட எமக்கு ஆதரவாய் இருப்பதாக ஒத்தூதின. இந்து மாக்கடல் நடுவில் ஒரு இசுரேலாக ஈழத்தமிழரின் ஆட்சி மலரும் எனக் கங்கணம் கட்டினர்.

ஆனால் இது இடம்பெற்று இரு வருடங்களிலேயே ஏகாதிபத்தியத்தின் முகத்திரை ஈழ மண்ணில் கிழிந்து போயிற்று. மாவட்ட சபை மசோதாவை ஏற்றுக்கொள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியை நிர்ப்பந்தித்த காரணிகள் தமிழ் பேசும் மக்களினாலும், அந்த-மக்களின் விடிவுக்காகப் போராடப் புறப்பட்டவர்களாலும் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டன. மூடிய திரைகளுக்குப் பின்னால் ஏகாதிபத்தியம் இயற்றிய சதித்திட்டம் தான் மாவட்ட சபைத் தீர்மானம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் காரணத்தினாலேயேமாவட்டச் சபைகள் நடைமுறையில் செல்லாக்காசுகளாயின. தமிழ் பேசும் மக்களுக்கு நண்பர்கள் போல நடித்த அமெரிக்கா திருகோண மலையில் 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' நிலையத்தையும் எண்ணெய்க் குதத்தையும் மற்றும் சலுகைகளைப் பெற்றுக் கொண்ட விதமும் இந்த மண்ணின் மைந்தர்களாலே நன்கு விளங்கப்பட்டது.

ஆரம்பத்தில் சோசலிச தத்துவத்தையும் மார்க்சிச சித்தாந்த அடிப்படைகளையும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான முற்போக்கு முகாமின் தளர்வில்லாத உறுதியான போராட்டத்தையும் புரிந்து கொள்ளாத, அல்லது புரிந்து கொள்ள மறுத்த ஈழவர்களும், ஈழவிடுதலைப் போராட்டச்சக்திகளும் காலத்தால் நடைமுறையில் ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். 83யூலைக் கலவரங்களையடுத்து ஏகாதிபத்தியம் தான் யாருக்கு சார்பாக செயற்படுவேன் என்பதை இலங்கை மண்ணில் ஐயம் திரிபின்றி நிரூபித்துவிட்டது. இசுரேலிய மொசாட்டும், பிரித்தானிய எஸ்.ஏ. எஸ்சும் இன்னும் பலவாறுகவும் ஏகாதிபத்தியம் அடக்கி ஒடுக்கும் ஆளும் வர்க்கத்தின் நண்பனே தான் என்பதைத் தெளிவாக்கி விட்டது.

இந்த நிலையில் தான் ஏகாதிபத்திய விசுவாசிகளும், அமெரிக்க தாசர்களும் முழிபிதுங்க விழிக்கின்றார்கள். ஈழப் போராட்டத்தை அடகு வைத்தேனும் தமது நலன்களைக் காக்க வேண்டும் என முனைகின்றார்கள். வெறுமையாகக் கிடக்கும் தமது தத்துவப் புத்தகத்திற்கும் சிவப்பு உறையைப் போட்டபடி 'நாமே மார்க்சிஸ்டுகள்' என உரத்துக் கூக்குரல் இடுகின்றனர். இவர்கள் போலிகள். இவர்களது போலி முகத்திரைகள் காலத்தால் கிழிக்கப்படும். சராசரி சிங்கள தொழிலாளரின் ஏன் தமிழ்த் தொழிலாளரின் உள்ளுணர்வைக் கூட புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இனவாதச் சகதிக்குள் சிக்கிக் கிடக்கும் இவர்கள் தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியம் பற்றியும், சர்வதேசத் தொழிலாளரின் உறவு பற்றியும் பேசுவது விந்தையிலும் விந்தை.

எது எப்படியிருப்பினும், இந்து மாக்கடல் பிராந்தியம் அமைதி மண்டலமாக வேண்டும் என்ற உலக மக்களின் ஏகோபித்த நல்விருப்பு, ஏகாதிபத்தியங்களின் மீதான உறுதியான எதிர்ப்பு, தொடரும் சுரண்டல் சமூக அமைப்பை மாற்ற விரும்பும் மக்களின் மனோநிலை என்பவற்றின் மீது ஆதாரப்பட்டிருக்கும் ஈழவர்களின் போராட்டம் ஈழவிடுதலையைப் பிரசவிக்கும் என்பதில் எவரும் எள்ளளவும் ஐயுறத் தேவையில்லை. அதே போல் மலரப் போகும் ஈழம் பொருளாதார ரீதியாகத் தன்னிறைவு பெற்று திகழ்வதுடன், அனைத்துலகப் பாட்டாளி மக்களின் போராட்டத்தில் மேலும் ஒரு அடியை எடுத்து வைக்க உதவும் என்பதும் நிச்சயம். அதாவது மலரப் போகும் ஈழம் ஒரு சமத்துவ சமுதாய அமைப்பைக் கொண்டிலங்குவதோடு, உலக அரங்கில் முற்போக்கு முகாமின் உறுதியான நண்பனாக இந்து மாக்கடல் நடுவில் திகழும் என்றே எதிர்பார்க்கலாம்.

இவ்வேளையில் இந்தியா ஒரு முதலாளித்துவ நாடு. தன்னருகில் ஒரு சோசலிச சமூக அமைப்பு மலருவதை இந்தியா விரும்புமா? அதுவும் அப்படி ஒரு சோசலிச ஆட்சி மலர தானே உதவுமா? என்றெல்லாம் கேட்கப்படுகிறது. இந்தியா தனது உள்நாட்டில் எத்தகைய கொள்கைகளைக் கடைப்பிடித்த போதும் உலக அரங்கில் முற்போக்கு முகாமின் உறுதியான நண்பனாகவே தன்னை இனம் காட்டியிருக்கிறது. தொடர்ந்தும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, முற்போக்கு முகாமுடனான உறுதியான ஆதரவு என்பவற்றைக் கொண்டிருக்கும் பட்சத்தில் ஈழப் போராட்டத்தையும் அதன் விடுதலையையும் தவிர்க்க முடியாமல் ஆதரிக்க வேண்டிய நிலைக்கு இந்தியா நிர்ப்பந்திக்கப்படும் என எதிர்பார்க்கலாம். ஈழத்துள் போராடும் சக்திகள் தமக்கிடையான முரண்பாடுகளை மோதலாக்காமல் பரஸ்பர புரிந்துணர்வுடன் ஈழப் போராட்டத்தின் சகல பரிணாமங்களையும் தெளிவாக விளங்கிக் கொள்வார்களே யானால் ஈழத்தின் விடுதலையை எந்த சக்தியாலும் தடுத்து விட முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பிரித்தானிய உளவாளி
## பெனிலோப் ஈவா வில்லிஸ்

கடந்த 17.01.86 அன்று வட ஈழப் பிரதேசத்தில் முல்லைத்தீவு நகரப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடிய பெனிலோப் வில்லிஸ் என்ற பிரித்தானியப் பெண்மணி எம்மால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். இவர் தன்னை ஓர் பத்திரிகையாளராக அடையாளம் காட்டிக் கொண்ட போதிலும் எமது விசாரணை முடிவுகளின்படி விடுதலை அமைப்புக்களின் செயற்பாடுகள் குறித்து உளவறியும் நோக்குடனேயே இவ் விஜயத்தை மேற்கொண்டிருந்தார் என்பது தெரிய வந்துள்ளது.

ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் எந்த ஒரு பத்திரிகையாளரோ அல்லது உல்லாசப்பயணியோ வட, கிழக்கு பகுதிகளுக்கு செல்ல முடியாதென இலங்கை அரசு அறிவித்தது. மீறி இவர்கள் சென்றால் தென்னிந்தியாவிலிருந்து சட்டபூர்வமற்ற முறையில் நுழைந்தவர்களாகவே இருக்க முடியுமென தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் 64 வயதுடைய இவர் எவ்வாறு தனியொருவராக வாடகைக் கார் ஒன்றில் இப்பயணத்தை மேற்கொள்ள முடிந்தது? பிரகடனப்படுத்தப்படாத போர் என்ற வகையில் ஸ்ரீலங்கா அரச கூலிப் படைகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நெருக்கடியான சூழ்நிலையில் எந்தவொரு இயக்கத்தினரதும் கண்காணிப்புக்கு உள்ளாகாமல் எப்படி இவரால் கொழும்பிலிருந்து முல்லைத்தீவு வரை தனது பயணத்தைத் தொடர முடிந்தது? இவை போன்ற சந்தேகத்திற்கிடமான விடயங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டமையால் எமது கண்காணிப்பில் இவரை வைத்திருக்க வேண்டியது அவசியமாயிற்று.

பிரித்தானிய உளவு நிறுவனமான **MI-5** இனது துணை அமைப்பும், ஆய்வுப் பிரிவுமான ஐக்கிய அரசசேவை ஸ்தாபனம் (Royal United Service Institute)ல் பணியாற்றி உள்ளார் என்பது தெரிய வந்தது. அத்துடன் 1956-60 காலப் பகுதிகளில் (இவ்வேளையில் அங்கு போராட்டம் நடந்து கொண்டிருந்தது.) சைப்ரசில் மேற்குறிப்பிட்ட நிறுவனத்திற்காக உளவு பார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் என்பதும் தெரிய வந்தது.

இவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில்...

தங்களது இலங்கை விஜயத்திற்கான காரணம் என்ன?
நான் ஒரு உல்லாசப் பயணியாகவே இங்கு வந்தேன். அத்துடன் இங்கு வாழும் மக்களையும் அவர்களது பிரச்சனைகளையும் பற்றி அறிய ஆவலாயுள்ளேன்.

தாங்கள் ஓர் பத்திரிகையாளரா?
சைப்ரஸ் நாட்டு கிராம மக்களை பற்றியும் அவர்களது போராட்ட அமைப்புக்கள் பற்றியும் சிறிது காலத்திற்கு முன் சில கட்டுரைகள் எழுதியுள்ளேன்.

நாட்டில் பதட்டநிலை அதிகரித்துள்ள வேளையில், அதாவது சாதாரண உல்லாசப் பயணிகள் பயணம் செய்யத் தயங்குமிடத்து தாங்கள் விஜயம் செய்துள்ளீர்கள். இதற்கு தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?
என் விஜயத்தின் போது எவ்வித பிரச்சனைகளையும் எதிர்கொள்ளவில்லை.

அமைச்சர் லலித் அத்துலத்முதலியை எவ்வாறு தொடர்பு கொண்டீர்கள்?
பெனி ஜெயவர்த்தனவினூடாக

பெனி ஜெயவர்த்தனவிற்கும், தங்களுக்குமுள்ள தொடர்பு என்ன? அவருடன் என்ன பேசினீர்கள்?
அவர் எனது நெருங்கிய சிநேகிதர், அவருடன் நான் இராப்போசன விருந்தும் உண்டேன். இதன்போது S.A.S. (விசேட (பிரித்தானிய உளவுப் பிரிவு) ஐச் சேர்ந்த Mr. Waite, Mr. Forber என்ற இரு அதிகாரிகளை பெனி ஜெயவர்த்தன எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

தங்களுக்கு S.A.S. உடன் தொடர்பு உண்டா? இதனைச் சேர்ந்தவர்கள் யாருடனுவது சிநேகபூர்வ உறவு உண்டா?
எனக்கு S.A.S. உடன் எந்தவிதமான தொடர்பும் இல்லை. ஆனால் 1941ல் ஆரம்பிக்கப்பட்ட S.A.S. இனது ஸ்தாபகர்களுள் ஒருவரான Sterling என்பவரை எனக்குத் தெரியும். அவரது குடும்பமும் எனது குடும்பமும் நெருங்கிய தொடர்புடையது.

எவ்வாறு நீங்கள் 'Check Points'ஐ கடந்தீர்கள்?
எனக்கு இதனைக் கடப்பதில் எவ்வித சிக்கலும் இருக்கவில்லை. என்னை இந்த இடங்களில் அவர்கள் தடுக்கவும் முற்படவில்லை. (இந்த நேரத்தில் எமது தோழர்கள் இவர் இராணுவ வாகனங்களுடன் சேர்ந்து அநுராதபுரத்திலிருந்து முல்லைத் தீவு வரை வந்ததனை கண்டுள்ளனர்.)

தங்களுக்கு N.I.B. (இலங்கை தேசிய உளவுஸ்தாபனம்)யில் யாரையாவது தெரியுமா?
எனக்கு யாரையும் தெரியாது. இப்படியொரு அமைப்பு இருப்பதே எனக்குத் தெரியாது. [ஆயினும் இவ்வேளையில் N.I.B.யின் உதவி இயக்குநர் ஜயா பத்துகொரல்ல (JayaPattukoralle) ஆல் வழங்கப்பட்ட நுழைவுச்சீட்டு அவரது பெட்டியிலிருந்து எடுத்துக் காண்பிக்கப்பட்டது.] அதிர்ச்சியடைந்த அவர் தனக்கு இதனைப் பற்றி ஒன்றும் தெரியாது என்றார்.

அரசாங்கம் உல்லாசப் பயணிகளையும், பத்திரிகையாளர்களையும் (பிரிட்டிஷ் தூதரக அதிகாரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





எமது போராட்டத்திற்கும், ஈழப் போராட்டத்தினது சர்வதேச மயப் படுத்தலுக்கும் கிடைத்த வெற்றி யாகும்.

ஈழப் போராட்டத்தை மழுங் கடிக்க முனையும் இவை போன்ற நடவடிக்கைகள் தொடரும் பட்சத் தில் புரட்சிகரமான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் என்பத னைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஸ்ரீலங்கா அரசிற்கு பின்புலமாக ஏகாதிபத்தியத்தினதும், சர்வதேச பிற்போக்கு கும்பல்களினதும் ஆத ரவு இருந்து வருகிறதென்பதனை உணர முடியும். ஆயினும் மக்கள் சக்தியின் வலிமையை அறிய முடி யாத இவர்கள் எம்முன் புறமுதுகிட் டோடுவது தவிர்க்கமுடியாத தாகும். ●

**பெனிலோப் ஈவா வில்லிஸ்**
செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்படுகின்றார்.

கள் உட்பட) வட, கிழக்கில் அனுமதிக்க மறுத்துள்ள இவ் வேளையில் தங்களுக்கு எவ்வாறு அனுமதி கிடைத்தது?
இது பெனி ஜெயவர்த்தனவினூ டாக அமைச்சர் அத்துலத் முதலி யால் வழங்கப்பட்ட பிரத்தியேக அனுமதியாகும்.

இவர் தன்னுடன் வைத்திருந்த குறிப்பேட்டில் விடுதலை இயக்கங்கள் பற்றியதான ரகசிய குறிப்புக்கள் இருந்ததனை அவதானிக்க முடிந்தது. எமது விசாரணை முடிவுகளின்படி இவ ருக்கு S.A.S. உடனான தொடர்பும், ஸ்ரீலங்கா அரசுக்கு விடுதலை அமைப் புக்களின் செயற்பாடுகள் குறித்து உளவறியும் நோக்குடனேயே இவர் ஈழப் பகுதிகளினுள் பிரவேசித்துள் ளார் என்பது தெளிவாகியது.

ஸ்ரீலங்கா அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ள சர்வதேச செஞ் சிலுவைச் சங்கத்தினரை ஈழப் பிரதே சத்தினுள் அழைக்கும் முகமாகவும், ஸ்ரீலங்கா அரசிற்கு பதிலடி கொடுக்கும் முகமாகவும் செஞ்சிலு வைச் சங்கத்தினரிடம் வில்லிசை ஒப் படைக்க முடிவு செய்யப்பட்டது. ஆரம்பத்தில் இதனை அடியோடு மறுத்து வந்த அமைச்சர் அத்துலத் முதலியும், ஸ்ரீலங்கா அரசும் நிர்ப்பந் தங்கள் காரணமாக இந்நிபந்தனை யை ஏற்றுக் கொண்டது. முன்னெப் பொழுதும் இல்லாத வகையில் முதன் முதலாக ஸ்ரீலங்கா அரசு நிபந்தனை களுக்கு பணிந்து கொண்டதானது



# தொண்டமானின் இந்திய விஜயம்

தொண்டமானின் அண்மைய இந்திய விஜயமானது இலங்கை-இந்திய உறவுகளில் கூர்மையான திருப்பத்தை ஏற்படுத்தி உள்ளது; ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருந்த 84,000 மலையக மக்களை நாடு கடத்தும் முயற்சியை மையப்படுத்தியே இருந்தது. ஆயினும் இலங்கை அகதிகள் தாயகம் திரும்பி அமைதியாகவும், சுதந்திரமாக வும் வாழும் சூழ்நிலை முதலில் ஏற்பட்டால்தான் மலையக மக்கள் பிரச்சனையை பரிசீலிக்க முடியும் என இந்திய அரசு தரப்பில் கூறப் பட்டுள்ளது.

இந்திய பொருளியல் பண்ட ஏற்றுமதி சபையில் தொண்டமான் பேசுகையில் தமிழ்நாட்டு முதலீட்டாளர்களை இலங்கைக் கிராமிய கைத்தொழில் துறையில் முதலீடு செய்யக் கோரியுள்ளார். இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்துள்ள இவ்வேளையில் தொண்டமான் இவ்வாறு கோரியுள்ளதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இலங்கையில் வாழும் பூர்வீகத் தமிழர்களுக்கும், மலையகத் தமிழர்களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தும் வகை யிலேயே இவரது விஜயம் அமைந்துள்ளது. ஈழப்புரட்சி அமைப் பானது மலையக மக்களின் பிரச்சனையானது பூர்வீகத் தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சனையோடு பின்னிப் பிணைந்துள்ளது என்பதனைத் தெரிவிப்பதோடு இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு தமிழ்நாடு முதலமைச்சரையும், இந்தியப் பிரதமரையும் கேட்டுக் கொள்கின்றது.

**ஈரோஸ் அறிக்கை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிம்பாப்வே

## அணிசேரா நாடுகளின் தலைமை

காலனித்துவ இன ஒடுக்கு முறைக்கெதிரான ஆபிரிக்க மக்களின் எழுச்சிமிக்க போராட்ட வரலாற்றின் தொடர்ச்சியாக, சிம்பாப்வே சுதந்திரமடைந்து, தற்போது அணிசேரா நாடுகள் அமைப்பின் தலைமைத் துவத்தைப் பெற்றதன் மூலம் அப் பிராந்தியத்தில் ஆபிரிக்க மக்களின் முன்னேடியாகவும், தென் ஆபிரிக்காவின் விடுதலைக்கு உந்து சக்தியாகவும் திகழ்கிறது. ஈழப்புரட்சி அமைப்பின் சார்பில், சிம்பாப்வேயின் தலைமையை வரவேற்று தோழர் முகாபேக்கு அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்தியில், 'ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளான சோவனிஸ்டுகளால், தேசிய இனங்களின் மீது பிரயோகிக்கப்படும் இன ஒடுக்கு முறைக்கெதிராகக் குரல் எழுப்ப வேண்டிய கடப்பாடு அணிசேரா நாடுகளுக்கு உண்டென்று' வலியுறுத்தப்பட்டுள்ளது. 1977-ஆம் ஆண்டில் ZANU வின் (தற்போதைய சிம்பாப்வே ஆட்சியாளர்) ஐரோப்பிய பிரதிநிதியான தோழர் ரெக்சி வேரா, இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஈழப்புரட்சி அமைப்பின் மாணவர் மன்ற மகாநாட்டில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

### காலனித்துவ பின்புலம்

சிம்பாப்வே சுதந்திரத்திற்கு முன் இருந்த காலனிய வரலாற்றுப் பின்னணியை நோக்கின், 1652 ஆம் ஆண்டளவில் டச்சு கிழக்கிந்தியக் கொம்பனியைப் பிரதிநிதித்துவப்படுத்திய 'ஜான்வான் ரீபிக்' (JAN VAN RIEBEECK) ஆபிரிக்காவின் தென் முனைப் பகுதியில் காலடி வைத்து, 'எதிர்கால டச்சு முனைக் காலனிக்கு' அத்திவாரமிட்டதோடு டிரான்ஸ்வால் நாடால், பசுரோலாண்ட், சுவாசிலாண்ட், பெசுவானலாண்ட், தென் ரொடீசியா, வடரொடீசியா போன்ற பகுதிகளை முழுமையாக கபளீகரம் செய்த போக்கினூடே தான், தேசிய விடுதலைப் போராட்டமானது முன்னெடுக்கப்பட்டு தென் ரொடீசியாவை சிம்பாப்வேயாக மாற்றமடைய வைத்தது. 15ஆம்-19ஆம் நூற்றுண்டு காலத்தில் ஆபிரிக்காவிலும், மற்றும் தூரகிழக்கு நாடுகளிலும் விரிவடைந்திருந்த காலனிய ஆதிக்கப் போட்டி, டச்சுக் குடியேற்றக்காரரை முனை (CAPE) யிலிருந்து வடக்கு நோக்கி இடம் பெயர வைத்து ஆரஞ்சு நதிக் குடியரசு, (ORANGE RIVER REPUBLIC) டிரான்ஸ்வால் குடியரசுகளை உருவாக்கியது. முனையின் அப்போதைய பிரதம மந்திரியான 'சிசில் ஜோன் ரொடீஸ்', பிரித்தானிய சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்புவதற்கெதிரான அச்சுறுத்தலை, தலைவர் காமா (KHAMA) வுடன் செய்து கொண்ட உடன் படிக்கை மூலம் முறியடித்து, 1888 இல் தலைவர் லொபெங்குலா (LOBENGULA) வுடனும் ஓர் உடன் படிக்கை செய்து 'வடலிம் போ போ'வில் நிலை கொண்டிருந்தார். இப்பிரதேசமே பின்னல், 'ரொடீசின்' கனவான 'தெற்கு ரொடீசியா' என அழைக்கப்பட்டது.

முதல் தடவையாக 1893 இல் குடியேற்றக் காரருக்கும், 'என்டபெலி' யினருக்குமிடையே யுத்தமொன்றும், அதன் தொடர்ச்சியாக 1896-97 இல், முதல் தேசிய விடுதலை யுத்தமும் (சின்டுன்டுமா) நடந்தது. ஏற்கனவே 'ரொடீசின்' ஆக்கிரமிப்பால் ஆத்திரமடைந்திருந்த ஆபிரிக்கர், குடியேற்றக் காரருக்கெதிராக மடாபெலி(Matabele) என்ற இடத்தில் நடாத்திய திடீர் தாக்குதலில் (AMBUSH) 130 ஐரோப்பியர் மாண்டனர். தலைவர் 'மசாய மொம்பே'யின் பிரதேசத்தில் உருவான எழுச்சி, அடுத்த இடங்களில் பரவியதால், 'மசோனலாண்டில்' 450 குடியேற்றக்காரர்கள் அழித் தொழிக்கப்பட்டனர்.




இத்தாக்கத்தினுல் பிரித்தானியப் படைகள் 'மசோனலாண்டில்' பலப்படுத்தப்பட்டு, 'சோனஸ் (Shonas) தோற்கடிக்கப்பட்ட தோடு, சகல நிர்வாக அதிகாரமும் 1923 வரை பிரித்தானிய தெற்காபிரிக்க கொம்பனிக்கு அளிக்கப் பட்டிருந்தது. 1930 இல் பிரிட்டனுல்அங்கீகரிக்கப்பட்ட காணிச் சட்டமானது, ரொடீசியாவை, ஆபிரிக்க, ஐரோப்பியப் பகுதிகளாகப் பிரித்தது. 99.6 மில்லியன் ஹெக்டர் நிலப்பரப்பில் 49.1 மில்லியன் ஹெக்டர் நிலம் வெள்ளையருக்கு வழங்கப்பட்டு, சமூக, பொருளாதார, கல்வியில் பாரபட்சமும் காட்டப்பட்டது. நகர, சுரங்க, வர்த்தக, கைத் தொழில் பிரதேசங்களை வெள்ளையர்களுக்கு ஒதுக்கி, எந்தவொரு ஆபிரிக்கனுக்கும் அப்பிரதேசத்தில் நிரந்தர வசிப்பிடம் பெறத் தடை செய்யப்பட்டதோடு, பாடசாலை, வைத்தியசாலைகள் மற்றும் சமூக கலாச்சார மையங்கள் வெள்ளையர் பிரதேசத்தினுள்ளேயே அமைக்கப்பட்டது.

### இயக்கங்களின் வரலாறு

விடுதலை இயக்கங்களின் தோற்றுவாயாக முதன் முதல் (1934-57 இல்) உருவான 'தென் ரொடீசிய ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்' (ANC), 1955 இல் உருவாக்கப்பட்ட தேசிய இளைஞர் அணியுடன் 1957 இல் இணைந்து, மக்கள் மத்தியில் பரந்தஅளவில் ஆதரவைப் பெற்றது. இக்காலகட்டத்தில் தென் ரொடீசியா, வட ரொடீசியா, என்யா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சலாண்டு போன்ற பிரதேசங்களை உள்ளடக்கியதான 'மத்திய ஆபிரிக்க ஒன்றியம்' 1953இல் ஆபிரிக்க தேசியத் தலைவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட போது, வெள்ளையர்களுடன் ஏற்பட்ட தீவிர மோதல்களின் காரணமாக ANC யும், சாம்பியா காங்கிரசும் தடை செய்யப்பட்டு கமுசுபண்டா, கெனத்கவுண்டா (தன்சானிய அதிபர்) ஆகியோர் சிறையிலிடப்பட்டனர். ஜோசுவா என்கோமோவால் வழிநடத்தப்பட்ட தேசிய ஜனநாயகக் கட்சியும்(NDP) ZAPU உம் முறையே 61 இலும் 62 இலும் தடை செய்யப்பட்டன.

இந்நிலையில் 60-61 களில் லண்டனிலும், சாலிஸ்பரியிலும் நடைபெற்ற தென் ரொடீசிய அரசியல் மகாநாட்டில் 65 இடங்களுள்ள நாடாளுமன்றத்தில் 15 இடங்களே ஆபிரிக்கர்களுக்கு ஒதுக்கப்பட்டது. தமக்குச் சாதகமாக அமைந்துள்ள இவ்விட ஒதுக்கீட்டைக் கூட ஏற்க மறுத்த வெள்ளையர் 1964 இல் பழைமைவாத 'அயன்டக்லஸ் சிமித்தை' ஆதரித்ததின் மூலம் தாராளவாதத் தலைவர் 'வின்ஸ்டன் வீல்ட் ஐ' நிராகரித்தனர். 1965 நவம்பர் 11 இல் தென் ரொடீசியாவினால் ஒரு பக்கச் சார்பான (Unilateral Declaration) சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டது.

## ஆயுதப் போராட்டம்

பழைய அரசியல் ரீதியான அணுகு முறைகளின் தோல்வி, எதிரியை வெல்ல ஆயுதப் போராட்டமே ஒரே வழியென ZAPU தலைமையால் உணரப் பட்டு, புதிய தலைமையின் கீழ் 'சிம்பாப்வே ஆபிரிக்க தேசிய ஒன்றியம்' (ZANU) உருவாக்கப்பட்டதோடு சீனா, கானா போன்ற தேசங்களில் பயிற்சி பெறுவதற்காக போராளிகள் அணிதிரட்டப்பட்டனர். 1964 ஆகஸ்டில் ZANU வின் 'மக்கள் நலன் பேணும் சபை' தடை செய்யப்பட்டு, இரகசிய இயக்கமாக இயங்கிய நிலையில் மொசாம்பிக், தான்சானியா, சாம்பியா போன்ற நாடுகளில் பின்னணித் தளம் அமைக்கப்பட்டது. 1966 ஏப்ரலில் எதிரிகளுடன் ஏற்பட்ட சினோயா (Sinoia) போரே, 66-68 கால கட்டங்களில் பல யுத்தங் கள் ஏற்படத் தூண்டு கோலாக அமைந்தது. இதுவே தமது இரண்டாவது விடுதலைப் போர் என (Chimurenga II) ZANU எண்ணியது.

**'எதிரி ஆட்பலம், ஆயுத பல மிக்கவனாக இருப்பதால், பாரம்பரிய போர்த்தந்திரங்கள் பேரிழப்பைத் தருமென்பதை**



**இப்போர்கள் உணர்த்தத் தவறவில்லை.**

பின் ஏறத்தாழ இரண்டு வருட காலத்தினுள் பெற்ற மக்களாதரவுடன் 1972 டிசெம்பரில், ZANU திரும்பவும் தனது போராட்டத்தை சிம்பாப்வேயின் வடபகுதியில் முன்னெடுத்தது.

1974-75 களில் 'லாங்கஸ்ரர் சபை ஒப்பந்தம்' (Lancaster House Agreement) மூலம் ஏற்பட்ட போர் நிறுத்தத்தினால், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தேசியத் தலைவர்கள் பலர் விடுதலை செய்யப்பட்டனர். இடைக்காலச் சமாதானத்தின் விளைவாக ஆயுதப் போராட்டம் தேக்க நிலையடைந்தது. 'பிஷப் அபெல் முசோறேவா'வினால் வழிநடத்தப்பட்ட புதிய ANC அமைப்பானது போர் நிறுத்த காலத்தில் சிமித்தின் கூட்டத்தினரோடு பேச்சு வார்த்தை நடத்துவதில் ஈடுபட்டதேயொழிய, உருப்படியான திட்டங்களையோ, வழி முறைகளையோ கொண்டிருக்கவில்லை. ANC அமைப்புடன் ZANU வைப் பலவந்தமாக இணைக்க, முன்னணி நாடுகளான தான்சானியா, மொசாம்பிக், சாம்பியா, பொசுவானா, அங்கோலா போன்றவை மேற்கொண்ட முயற்சியினால் ZANU வின் புதிய கூட்டமைப்பு அதிருப்தி அடைந்திருந்தது.

1975 ஆம் ஆண்டு மார்ச் 18ம் திகதி காரில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் 'ஹெபட்சிடபோ' கொல்லப்பட்டதினால் அதிர்ச்சியடைந்த ZANU வின் மத்திய குழு, உடனடியாக ஒன்று கூடி புதிய தந்திரோபாயத்தை வகுத்ததுடன் ஏப்ரல் 4இல் கிழக்கு எல்லையிலுள்ள 'என்யாவரோ' (Nyafaro) வில், தலைவர் ராங்வேனாவின் தலைமையில் மொசாம்பிக்கினுள் நுழைந்தனர். சிமித்தின் குழுவினருக்கும் பிஷப் முசோறேவாவைத் தலைமையாகக் கொண்ட ANC இற்குமிடையே நடந்த Victoria Falls பேச்சு வார்த்தையின் தோல்வி, திரும்பவும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மொசாம்பிக்கைப் பின் தளமாகக் கொண்டு 1976 ஜனவரியில் விடுதலைப் போரைக் கொளுந்து விட்டெரியத் தூண்டியது. ZANUவின் இராணுவ அமைப்பான ZANLA தமது இராணுவப் பிரதேசங்களை விரிவுபடுத்தி அநேகமானோரை முழுதாக அல்லது பகுதியாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்குள் அனுப்பினர். 1978 இல் சிமித்தின் ஆட்சி தோல்வியுறும் வரை, ஆயுதப் போராட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருந்தது.

## பேச்சு வார்த்தை

1976 இல், கிசிங்கரின் பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்ட ஜெனிவா மகாநாட்டில் பெரும்பான்மை ஆட்சியை முன் வைத்து, போர்நிறுத்தத்தை ஏற்படுத்த முயலுகையில், சிமித் அத்திட்டத்தை முற்றாக நிராகரித்தார். அதே வேளையில் 1977 இறுதியில் மால்ரா (Malta)வில் முன் வைக்கப்பட்ட ஆங்கில - அமெரிக்க பிரேரணையில், 'அடிப்படை ஜனநாயகக் கோட்பாடுகளான வயதானோர்க்கு வாக்குரிமை, சுதந்திரத் தேர்தல், மக்கள் சேவையைப் புனரமைத்தல் என்பவற்றோடு, சிமித் ஆட்சியின் அதிகாரபூர்வமற்ற இராணுவத்தை கலைக்கும்படி தேசிய முன்னணியால் வலியுறுத்தப்பட்டதுடன்' பேச்சு வார்த்தை முறிவடைந்தது. இதில் என்கோமாவும், முகாபேயும் கலந்து கொண்டனர்.

இங்கு குறிப்பிடத்தக்கதொரு விடயம், பேச்சு வார்த்தை மத்தியிலும் போர் நிறுத்த காலமுட்பட **1972 இற்கும் 1979 இற்குமிடையில் சுமார் 20,000 மக்கள் இறந்துள்ளனர்.** '78 இல் ஏற்பட்ட 'உள்ளிணக்கம்' (Internal agreement) சிம்பாப்வே-ரொடீசியா என்ற புதிய நிலையை உருவாக்கியதும், மக்களும் - கட்சியும் இணைய வேண்டுமென்ற முனைப்பில் 1979 ஐ எழுச்சி ஆண்டாகக் கருதி, போராட்டம் எதிரியின் தளங்களையும், நிர்வாக மையங்களையும் நோக்கி விரிவு படுத்தப்பட்டது. இதன் விளைவாக, முசோறேவா - சிமித் கூட்டு உடைவது தவிர்க்க முடியாததாகியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1979ம் ஆண்டு லுசாக்காவில் நடந்த பொது நலவமைப்பு நாடுகளின் மகாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் மாகிரட்தட்சர் உரையாற்றுகையில் 'பெரும்பான்மையினர் ஆட்சியை தாம் ஏற்றுக் கொள்வதாகவும், அரசியலமைப்பு மகாநாட்டை கூட்டுவதாகவும் ஏற்றுக் கொண்டார்.



'லாங்கஸ்ரர்' பேச்சுவார்த்தையில், தேச முன்னணி (Zanu, Zapu) என்கோமா (தற்போதைய ஆட்சியாளருக்கெதிராக போராட்டம் நடத்திக் கொண்டிருப்பவர்) தலைமையிலும், சிம்பாப்வே ரொடீசியா பிரதிநிதிகள் சார்பில் பிஷப் முசோரேவா, சிலஸ் முன்டவராரா, அயன்சிமித் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரிட்டிஷ் குழுவினரின் தலைவரான 'லோட் கரிங்ரன்' இம் மகாநாட்டினை நடாத்தினார். முசோவொ குழுவினர் பிரிட்டிஷின் அரசியல் அமைப்புப் பிரேரணைகளை ஆமோதித்த வண்ண மிருந்தனர்.

ஆயினும் முன்னணி தமது நிலைப்பாட்டைத் தெளிவாக முன் வைத்தது. இங்கு மூன்று முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (1) சுதந்திர சிம்பாப்வேயின் அரசியலமைப்பை உருவாக்கல் (2) அதை சட்டபூர்வமானதாக்கல் (3) போர் நிறுத்தம்.

1980 மார்ச்சில் பிரிட்டிஷாரின் மேற்பார்வையில் நடந்த தேர்தலில் தேச முன்னணி வெற்றியடைந்தது. முகாபே அதிபரானார். தற்போது ஐக்கிய நாடுகள் சபையிலும், அணி சேரா நாடுகள் இயக்கத்திலும், ஆபிரிக்க ஐக்கிய அமைப்பிலும் சிம்பாப்வே அங்கத்துவம் வகிக்கிறது. தென்னாப்பிரிக்க மக்கள் மீதுள்ள இன ஒடுக்கு முறைக்கெதிராகவும், நமீபியாவின் சுதந்திரத்திற்காகவும், உலகில் தேசிய இன விடுதலைக்காகப் போராடும் மக்களுக்காகக் குரலெழுப்பும் ஒரு முன்னணி நாடாக சிம்பாப்வே விளங்குகிறது'

# தமிழர்நல மருத்துவ அமைப்பு (M. U. S. T.)

ஸ்ரீலங்கா அரசினது அடக்கு முறைகளினால் பல இன்னல்களை அனுபவித்து வருகின்ற தமிழ் பேசும் மக்களுக்கு உதவுமுகமாக 24-12-84 ல் ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பானது கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாய் தனதுபணிகளை செவ்வனே நிறைவேற்றி வந்துள்ளது. சர்வதேச ரீதியான முழு அங்கீகாரம் ஈழப்போராட்டத்திற்கு, இன்னமும் கிடைக்காத பட்சத்திலும் கூட குறைந்தளவு நிதி வசதியுடன் தன் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. ஆயினும் இன்றைய ஈழத்தின் மோசமான நிலைமைகளை கருத்திற்கொண்டு அமைப்பு வேலைகளை விரிபடுத்திச் செயற்பட அனைவரினது ஒத்துழைப்பைக் கோருகிறது தமிழர் நல மருத்துவ அமைப்பு.

கடந்த காலங்களில்,

1. வட, கிழக்கு பகுதிகளில் முதலுதவி விபரங்கள் துண்டறிக்கை மூலம் விநியோகிக்கப்பட்டன.

2. முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் 40,000/- பெறுமதிவாய்ந்த மருத்து வகைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

3. 10,000/- பெறுமதிவாய்ந்த பால் உணவு, மருந்து வகைகள் முல்லைத்தீவு அகதிகள் முகாமிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

4. 12,000/- பெறுமானமுள்ள உடைகள் வட, கிழக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதனைவிட பல பயிற்சி வகுப்புக்களையும், தமிழ் நாட்டில் சிகிச்சைகளையும், அகதிகள் முகாம்களில் மருந்து வசதிகளையும் ஏற்படுத்தி வருகின்றது, அத்துடன் ஈழத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் காயமடைந்து வரும் மக்களுக்கு மருத்துவ வசதிகளையும், ஏனைய தேவைகளையும் ஓரளவிற்கு பூர்த்திசெய்யுமுகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

144, Choolaimedu High Road
MADRAS - 600 094
Tamilnadu - India.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழம் குடிபெயர்ந்தோர் அமைப்புச் சங்கம்
# (EELAM REPATRIATES ORGANISING SOCIETY)
# மூன்றும் ஆண்டு பொதுக்கூட்டம்




சென்ற 4—4—86 அன்று சென்னை தேவநேயர் பாவாணர் நூலக அரங்கில் மேற்படி பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஈழத்திலிருந்து குடிபெயர்க்கப்பட்ட மக்களது அவலங்களையும், அவர்களது நிலையில்லாத வாழ்வையும் கவனத்திலெடுத்து, இம்மக்கள் ஈழத்திலே தங்களால் வளம்படுத்திய மண்ணிலேயே வாழவேண்டியவர்கள் என வலியுறுத்தப்பட்டது.

சிறப்புரையாளர்களாக கலந்துகொண்ட தோழர் தா. பாண்டியன் தோழர் இ. இரத்தினசபாபதி, பேராசிரியர் பெரியார்தாசன், தோழர் சுந்தர், திரு. ஆர். ஆர். சிவலிங்கம், தோழர் கடலூர் பாலன் ஆகியோர் தங்கள் கருத்துக்களை முன் வைத்துப் பேசினார்கள். பொதுவான கருத்தாக இம்மக்கள் கட்டாயமாக நாடு கடத்தப்பட்டவர்கள், இவர்கள் தமக்கே உரிய அந்த மண்ணிலேயே வாழவேண்டியவர்கள் எனக் குறிப்பிட்டதை எல்லோரும் வரவேற்றனர்.

# ஈரோஸ்
## அறிக்கை

## வதை முகாமிலிருந்து....

ஈழப் போராட்டத்தை ஒடுக்க முனைகின்ற ஸ்ரீலங்கா அரசினது இராணுவ முகாம்களில் நடைபெறும் மனிதாபிமானமற்ற கொடுமைகள் பல நாடுகளாலும் விமர்சிக்கப்பட்டு வந்துள்ளது. கிராமங்கள் பொது இடங்கள் நகரப்பகுதிகள் யாவும் குறிப்பிட்ட ஓர் நாளில் திடீரென்று இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்படுகின்றது. ஏனைய பகுதிகளிலிருந்து தடுப்புகள் மூலம் தனிமைப்படுத்தப்பட்ட இவ்விடங்களிலிருந்து 13 - 40 வயது வரையான அனைத்து தமிழர்களும் கைது செய்யப்படுகின்றனர். பின்னர் முகாமிற்கு கொண்டு செல்லப்படும் இவர்கள் வரிசையாக நிற்க வைக்கப்பட்டு ஏற்கெனவே கைதாகி சித்திரவதையினால் காட்டிக் கொடுப்பவர்களாக மாறியவர்களாலும், பணத்திற்காக காட்டிக் கொடுப்போராலும் அடையாளம் காட்டப்படுகின்றனர். இவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர்கள் நிரந்தரச் சித்திரவதை முகாமிற்குப் ஏனையோர் வாரந்தோறும் இராணுவ முகாமில் கையொப்பம் இடவேண்டிய நிர்ப்பந்தத்தின் பேரிலும் விடுவிக்கப்படுகின்றனர். தெரிவு செய்யப்பட்டவர்கள் சித்திரவதை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு ஆரம்பத்தில் வாயால் கேள்விகள் மூலம் வெளிக் கொணர முயல்கின்றனர். ஆனாலும் உண்மை கூறுமிடத்து மிக மோசமான நிலையில் விசாரிக்கப்படுவர். இரண்டாவது நடவடிக்கையாக இவர்கள் விலங்கிடப்பட்டு கை, கால் போன்றவற்றின் மூட்டுப்பகுதிகளிலும், வயிறு, முதுகு போன்ற இடங்களிலும் பின்னர் குதிக்காலிலும்...தொடர்ச்சியாக குதிக் காலிலும் இருப்பு மரத்தடி பிளாஸ்டிக் பைப் போன்றவற்றால் நசுக்குவர். அடுத்த நடவடிக்கையாக நிர்வாணமாக்கப்பட்டு பெருவிரல்களில் கட்டப்பட்டு தொங்கவிடப்பட்டு பலரால் நின்று சுற்றி வளைத்துத் தாக்கப்படுவர். பின்னர் மிளகாய் புகை போட்டும் நெருப்பால் சுட்டும் விசாரிப்பர். இவ்வாறு அவர்கள் எதிர்பார்த்த பதில்கள் கிடைக்காவிடின் 'மஸ்கடே' (இறைச்சிக் கடை) என்றழைக்கப்படும் இடத்திற்கு அழைத்துச் சென்று உடம்பின் அங்கங்களை சிறுக சிறுக முறித்தோ அல்லது வெட்டியோ இம்சைப்படுத்துவர். இறுதியாக இரும்புப் பட்டயங்களால் அடித்துக் கொன்று விடுகின்றனர். அல்லது உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையில் அதை முகாம்களுக்கு அருகேயுள்ள சவுக்குத் தோப்புகளுக்கு எடுத்துச் சென்று பழைய டயர்களை உபயோகித்து உடலை எரித்து விடுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போராட்டத்தில் பெண்கள்

*சீனப் புரட்சியை முன் எடுத்த மாவோ சேதுங் கூறிய ''எப்போது நாட்டிலிருக்கும் பெண்கள் அனைவரும் கிளர்ந்தெழுகிறார்களோ அன்றே புரட்சி வெற்றிபெறும்''.* என்பதையும், ''பெண்களுக்கான முழுமையான சுதந்திரம் கிடைக்காத வரையிலும் பாட்டாளி வர்க்கம் முழு விடுதலையை அடைய முடியாது'' என்று புரட்சிப் புரவலன் முன்வைத்ததையும் மனதில் கொண்டு சர்வதேச பாட்டாளி வர்க்கம் தனது நடைமுறையைச் செழுமைப்படுத்தி வருகிறது.

லெனினிய நெறியமைப்பு வரலாற்று வழியில் நிதர்சனமானதென்பதை உழைப்பாளி மக்களது - உலக விடுதலை இயக்கங்களினது போக்கு-அனைத்தாலும் உலக சோசலிச அமைப்பின் உதயத்தாலும்; முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சிகரமான போராட்டச் சாதனைகளாலும் நிரூபணமாகின்றன. இதனை அத்திவாரமிட்டே 'சமதர்ம ஈழம் நிதர்சனம்' என்பதை உலக வரலாற்றில் நிலைநிறுத்துவதற்காக — கூர்மையடைந்துள்ள தேசிய இனப் போராட்டத்தினூடாக முன்னெடுக்கப்படுகிறது. இதன் வளர்ச்சிக் கட்டங்களை கண்டுணரக் கூடியதாகவுள்ளது.

வர்க்கரீதியான கண்ணோட்டத்தைக் கொண்ட போராட்டத்தாலேயே-உலகெங்கணும்நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்ட வரலாற்றினை ஆராயும் போது - முழுமையான சோசலிச நிர்மாணத்தை உருவாக்க முடியும் என்பது வெளிப்படையானஉண்மை. எனவே, ஒரு நாட்டின் தேசிய இன விடுதலைக்கான போராட்டம் என்பதில் ஆழமான விரிவான பார்வையுடனான ஆய்வுகளுடன் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பது புரட்சியாளர்களால் வலியுறுத்தப்படுவதாகும். இதனால்தான் மேலோட்டமான சில வெளிப்பாடுகளையும் தாக்கங்களையும் பாதிப்புகளையும் கொண்டு கிளர்ந்தெழுந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக 'வீரத்தை' வெளிப்படுத்துவதால் எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை என்பதை வலியுறுத்துகிறோம். பாதிப்புகளின் பொதுமைப்பட்ட அரசியற் காரணங்களை மையப்படுத்தி அரசியல்மயப்படுத்தப்பட்ட தாக்குதல்களால் ஒடுக்குமுறையாளர்களின் திட்டமிட்ட செயற்பாடுகளை தடுத்து நிலைகுலையச் செய்ய வேண்டுமென்பது வலியுறுத்தப்படுகிறது. இந்த வகையிலேயே 'பெண்கள்' பற்றியும்-அவர்தம் பிரச்சனைகள் பற்றியும் - ஈழப் போராட்டத்தில் பெண்கள் பற்றியும்-கவனிக்கப்படுவது சாலப்பொருந்தும்.

ஈழப் போராட்டத்தில் முனைப்பாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில், எமது சமுதாய மேம்பாட்டிற்கும்-போராட்ட முன்னெடுப்புக்கும் புரட்சியாளர்களின் பங்களிப்பின் முக்கியத்துவம் நன்குணர்த்தப்படுகிறது. புத்தி ஜீவிகளால் வலியுறுத்தப்படும் இவ்வாய்வு குறித்து கவனமெடுத்துள்ள நாம் ஈழவர் போராட்டத்தில் பெண்கள்பற்றி இவ்வகைக் கண்ணோட்டத்துடன் நிதானமாக ஆராயவேண்டியது அவசியமாகும்.

## எமது பெண்கள்

சமுதாய முக்கியத்துவம் பற்றி அறியாமல் - சமுதாய மேம்பாட்டுக்குரிய பார்வையில்லாமல் - எம்மவரிலுள்ள பெண்கள் குடும்பம் பற்றியும், தனிநபர் ஏக்கக் கனவுகளோடும், பொருளாதார பிடிமானமில்லாத மற்றோர் இடத்தில் தங்கிய தன்னல அபிலாசைகளோடும் சுற்றியுள்ள சிந்தனைச் சுழல்களால் சிக்குண்டு இருப்பதால் போராட்டம் பற்றியதான தெளிவைப் பெற முடியாத நிலையில் காணப்படுகின்றனர். இதுவே எம்மவர்களிடம் காணப்படும் மிகப்பெரிய குறைபாடாகும். இத்தன்மை குறித்தான குறைபாட்டை நீக்கி விரிவான கண்ணோட்டத்தை பெற புத்திஜீவிகள் ஈடுபடவேண்டியுள்ளது. போலித் தன்மையும் இழுபறியாகவுள்ள மனோவியல் தன்மைகளையும் உடைப்பதற்கான அவசியம் இன்று புரட்சியாளர்களால் வலியுறுத்தப்படுகிறது.

எமது பெண்கள் இருவிதமான ஒடுக்கு முறைக்குள் பொதுவாக உட்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

1. வரலாற்றுக் காலந்தொட்டு தொடரப்படும் ஆண் ஆதிக்கத்தால் பெற்ற ஆண் - பெண் இடையிலான ஒடுக்கு முறை.

   இதனால் ஏற்படும் சமுதாய போலி வரையறைகளை மீற முடியாமல் திணறுவது: தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக்கொண்டு வாழமுனைவது.

   இதனாலேயே விரிவான கண்ணோட்டமில்லாமல் அடிப்படைப் பிரச்சனைகளைக் கவனிக்காமல் மிகக் குறுகிய கண்ணோட்ட வரையறைக்குள்-தமது எழுச்சியையும், கிளர்ச்சியையும் காட்டுகிறார்கள்

   இவ்வகையான வெளிப்பாடுகளை மாதர் சங்கங்களிலும், மாதர் அணிகளிலும்-தனியாக பெண் என்ற விஞ்ஞானப் பிரிவுக்குள் உட்படுத்திய அமைப்புகளில் காணப்படுகின்றன. (பொருளுற்பத்தியுடனான மனிதனின் உறவு, தனிநபர்-சமூகம் - சிந்தனை பற்றிய தெளிவின்மையால்) பொருளாதாரக் கண்ணோட்டமில்லாதபோராட்ட அறைகூவல் விடுப்பதும் ஆணுக்குச் சவால் விடுப்பதும் அவ்வப்போது பெண்களுக்கான வெளியீடுகளிலும், மேடைகளிலும் முன் வைக்கப்படுகின்றன.

   இவ்வகையான வெளிப்பாடுகள் தமது ஒடுக்குமுறைகளுக்கு ஆண்கள் மாத்திரமே காரணமாகவும் இந்த ஆண் ஆதிக்கத்திலுள்ள சமூக அமைப்புமே காரணமாகவும் சித்தரிக்கப்படுவதால் எழுகின்றன. இதன் பின்னணியிலுள்ள அரசினையும் - அதன் மையமாகவுள்ள வர்க்கத் தன்மையையும் புரியப்படாமல் இருப்பதென்பது இந்த முற்(ன்) போக்கு அணியினரது குறைபாடாகும்.

   இவ்வகைக் கண்ணோட்டத்தினூடாகவே இன்று எம் பெண்கள்'எல்லாத் தரப்பிலும் உள்ள' பெண்கள் என்ற வகையில் ஓரணியில் திரட்டப்படல் வேண்டுமென்ற கோஷம் ஒரு சாராரால் முன் வைக்கப்படுகிறது.

2. சமூக அங்கத்துவம் காரணமாக ஏனைய புற அகச்சூழல் தாக்கங்களால் ஏற்படும் பாதிப்புகளும், திட்டமிட்ட ஒடுக்குமுறைகளும். இவ்வகையான பாதிப்புகள் பொதுவாக ஆண்-பெண் இரு சாராருக்கும் ஏற்பட்டாலும் எம்மவர்களில் a) பொருளாதார அரசியல், இராணுவ ஒடுக்குமுறை. b) ஆண்களின் வெளியேற்றம் காரணமாக ஏற்படும் மனோவியல் பாதிப்புகள் c) சமுதாயப் பழக்க வழக்கங்களுக்குட்பட்ட விமர்சனங்களால் ஏற்படும் உளவியல் பாதிப்புகள்.

வர்க்கரீதியான கண்ணோட்டமின்மையால் இவ்வகையான ஒடுக்குமுறைகளை மையப்படுத்தி தேசிய விடுதலைப் போராட்டத்தில் இரண்டறக் கலப்பதன் மூலம் பெண்கள் விடுதலையை உத்தரவாதப்படுத்த ஒரு சாரார் விழைவதை அவதானிக்கலாம்.

சரியான முறையில் இராணுவத்தந்திரோபாயங்களை அரசியல்மயப்படுத்திய தாக்குதல்களாக முன்வைக்காமல் விடுதலைப் போராட்டம் என்ற போர்வையில் ஏற்படுத்தப்படும் தாக்குதல்களால், ஏற்படும் பாதிப்புகளால் மக்கள் பீதி அடைகின்றனர். இதனால் அநேகர் அக்கரை நோக்கியும், அப்பாலும் அகதிகளாகவும், பொருளாதார மேம்பாட்டுக்காகவும் வெளியேறுகின்றனர். மக்களை போராட்டக் களத்திலிருந்து அந்நியப் படுத்தும் இத்தன்மையால் எமது போராட்டம் இழுபறி நிலையிலுள்ளதை அரசியல் அவதானிகளால் எடுத்துரைக்கப்படுகின்றது.

அண்மைக் காலங்களில் 'பெண் விடுதலை' பற்றிய உணர்வு பூர்வமான பிரதிபலிப்புகள் பல ஏற்படுவதனை அவதானிக்க முடிகிறது. ''பெண்விடுதலை'', ''தேசியவிடுதலை'' இரண்டிற்குமான 'உறவுகள்' போராட்டங்கள் என்பன பற்றிய கருத்துக்கள் உருவாக்கப்பட்டு, வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முதலில் 'தோழி'யும் அதனைத் தொடர்ந்து 'சக்தி', 'விள்க்கு' என இதழ்கள் விரிவுபட்டு பெண் விடுதலைபற்றிய ''தாகம்'' பலர் இடையே தோன்றியுள்ளது. பாட்டாளி வர்க்க தலைமையில் நடத்தப்படும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலம் சோசலிசத்தை நிர்மாணிப்பதன் வாயிலாக மடுமே பெண் விடுதலை என்பது பெறப்படும் என்று ஒரு சாராரும் தேசிய விடுதலைப் போராட்டதில் இரண்டறக் கலப்பதன் மூலமே பெண் விடுதலையை உத்தரவாதப்படுத்தலாம் என ஒரு சாராரும், பெண்கள் எதிர்நோக்கும் தனித்தன்மையைக் கருதி எல்லா வர்க்கத்திலும். எல்லாத் தரத்திலும் உள்ள பெண்கள் என்ற வகையில் ஓரணியில் திரடடப்படல் வேண்டுமென ஒரு சாராரும் என வெவ்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்பட்ட நிலையில்.......

[15—06—85 இல் வெளியிடப்பட்ட பொதுமை இதழில் ஆராயப்பட்டது]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடும்பத்தில் தலைவனாகவும் பொருளீட்டுபவனாகவும் ஆண் இருப்பதால் குடும்பப் பொறுப்புள்ளவனாக சமூகத்தால் உருவாக்கப்படும் ஆண்கள்; ஈழத்தில் பொருளாதார பாதிப்பு, உயர் கல்வி பாதிப்பு என்பன பூதாகரமாக முன் வைக்கப்பட் (சமூகம்) பெருமளவில் பொருளீட்ட வேண்டி 'ஆண்'களை வெளிநாடுகளுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கிறது. இதனால் பெண்கள் மண்ணில் நின்றுகொண்டு பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தாலும் இதனைத் தாங்கிக்கொண்டு வாழ்வதை கௌரவமாக மதிக்கப்படுகிறது.

களத்திலுள்ள ஈழவர்களின் மதிப்பீடுபற்றி ஆராயும்போது வடஈழத்தில் பெண்களின் வீதம் அதிகமாகவும், ஆண்களின் வீதம் குறைவாகவும் மதிப்பிடப்படுகிறது. இதனால் அரசினால் மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்குமுகமாக பெண்கள் இயக்கங்களில் அணி திரள்வதென்பதும் எழுச்சியைக் காட்டும் ஊர்வலங்கள், குரல்கள் எழுப்புவதன்பதும் நடைபெறுகின்றன. இந்த வகையில் பாடசாலை மாணவிகள், குடும்பப் பெண்கள் அடங்கிய எழுச்சிகரமான மாதர் ஊர்வலமானது எமது போராட்ட பரிமாணத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

போராட்டம் பற்றிய வெளிப்படையான கருத்துக்களும், விவாதங்களும் முன் வைக்கப்படும் வேளையில்; சர்வதேசமெங்கிலும் பெண்கள் காட்டும் எழுச்சியும் தன்னம்பிக்கையும் - எமது போராட்டத்தில் (பெண்கள்) ஈடுபட வெளிப்படுவதென்பது ஆச்சரியமான தொன்றல்ல. ஆனால் எமது சமூக சிந்தனைக்கேற்ப இவ்வெளிப்பாடு — ஈடுபாடு — குறைவாகவும், தாமதமாகவும் காணப்படுவதென்பதே கவனிக்க வேண்டிய உண்மையாகும்.

இவ்வாறாக, பலவிதமான ஒடுக்கு முறைகளுக்குள்ளாகும் ஈழவரில் பெண்கள் தமதும் தாம் சார்ந்தசமூகம்பற்றியதா னதும் எதிர்காலம் குறித்த தெளிவான சிந்தனையோடு போராட்டத்திலீடுபடுகின்றனரா? இவ்வகை சிந்தனை வளர்ச்சியைப் பெற முடியாமல் ஏன் திணறுகின்றனர்? என்பன நிகழ்காலத்தில் புத்திஜீவிகளால் எழுப்பப்படும் கேள்விகளாகும்.

## வரலாற்றில்...

வரலாற்று ஓட்டத்தில்-மனித குல வரலாற்றில்-பெண்கள் பற்றிய நிலையைத் தெளிவாக ஆராய்ந்த எங்கல்ஸ் குறிப்பிடுகிறார். 'தாய் உரிமை தூக்கியெறியப்பட்டதானது பெண்கள் வரலாற்று ரீதியில் பெற்ற பெரும் தோல்வி'. இந்த பொது மனிதகுல நிலையை ஒட்டி எமது பெண்களினது வெளிப்பாடுகளை ஆராயலாம்.

தந்தை-ஆண்-அதிகாரம் நிலைநிறுத்தப்பட்டதும் பெண்களுக்கான ஒடுக்குமுறை வலுப் பெறத் தொடங்கியது. பணிமகளாக, ஆணின் காம இச்சைக்கு அடிமையாகி வெறுமனே குழந்தைகள் பெறும் சாதனமாக பெண் மட்டுப்படுத்தப்பட்டாள். ஆய்வுக்குட்பட்ட வரலாற்றுக் காலந்தொட்டு இந்நிகழ்வு தொடரப்பட்டே வருகின்றது. மனோவியல் ரீதியாக

> "ஒவ்வொரு உழைக்கும் பெண்ணும் அரசியலில் பங்கெடுத்துக் கொள்வதைச் சாத்தியமாக்குவது நம் கடமை"
>
> — லெனின்

சமூகத்தால் இவ்வகையான ஒடுக்குமுறை தலைமுறை தலைமுறையாக மேற்கொள்ளப்பட்டு நியாய பூர்வமானதென இசைவாக்கமடைந்துள்ளதென்றே காணமுடிகிறது. அதாவது பெண் ஆணின் அடிமையென்று, ஆணிற்கான தேவைகளை தன் தேவை போன்று பூர்த்தியாக்கும் 'சடப் பொருளாக' ஆகிவிட்ட தன்மையை இன்று காண முடிகிறது.

'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என சமூகத்தால் ஏகமனதாக முன்வைக்கப்படும் போதனையானது கண் மூடித்தனமானதும் பெண்களை வெறும் சடப் பொருளாக ஒதுக்குவது போன்றதுமானதும் என்பதை கண் கூடாகக் காண்கிறோம். விஞ்ஞான பூர்வமாக சிந்திப்பவர்கள் இவ்வகையான வெறுமையான போதனைகளை நிராகரித்து சமுதாய உண்மைகளை வெளிப்படுத்தி சமுதாய மேம்பாட்டிற்குரிய வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்: அதை விடுத்து தலைமுறைகளால் இசைவாக்கம் பெற்ற அடிமைத்தன வெளிப்பாடுகளை மீறமுடியாமல் வெற்றுக் கோஷங்களை எழுப்புவதென்பது வீணானதே.

அதிகாரம் ஆணிடம் கிடைத்ததும் (வரலாற்றில் மிக இலகுவான மாற்றமாக ஆரம்ப காலத்தில் இருந்த தாயதிகார முறை தந்தை அதிகாரமாக மாற்றப்பட்டதென ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.) ஒடுக்கு முறைக் கெதிராக பலவிதமான வெளிப்பாடுகள் பெண்களிடமிருந்து வெளிப் பட்டாலும் கூட, தந்தை அதிகார மென்பது தூக்கியெறியப்பட முடியாமல் தொடரப்பட்டே வருகிறது. இதற்கு பொருள் உற்பத்தியினுடனான உறவு ஆணிடம் நெருக்கமாக இருப்பதே அடிப்படையாகும். இத்தன்மையால் ஆண் குடுப்பத்தலைவனாகவும் குடும்பம் பற்றி தீர்மானிப்பவனாகவும் மக்கள் குழாம் தலைவனாகவும் அதனைத் தொடர்ந்து நாட்டுத் தலைவனாகவும் சாதாரணமாக செயல்படத் தொடங்குகிறான். இவனை அண்டி வாழும் அடிமைகளில் விசேட அடிமையாக பெண், குடும்ப வேலைகளையும், வீட்டு வேலைகளையும் கவனிப்பதாக நிர்ப்பந்திக்கப்பட்டு வெளி வேலைகளிலிருந்தும் நிர்வாகத்திலிருந்தும் உற்பத்தி உறவுகளிடமிருந்தும் அன்னியப்பட வேண்டியதாயிற்று. இதனால் தீர்மானகரமான முடிவேதும் எடுக்க முடியாத சடப் பொருளாக சமூகத்தில் அங்கத்துவம் வகிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை அடைய நேரிட்டது.

இக்காலத்துக் குடும்பத்துக்கு, முதலாளித்துவக் குடும்பத்துக்கு அடிப்படையாய் அமைவது எது? மூலதனம்தான். தனியார் இலாபம் தான். இந்தக் குடும்பம் அதன் முழு வளர்ச்சியிலுமான வடிவில் முதலாளித்துவ வர்க்கத்தாரிடையே மட்டும் தான் இருந்து வருகிறது. ஆனால் இந்நிலைமையின் உடன் நிகழ்வாய் குடும்ப வாழ்வு பாட்டாளிகளிடத்தே அனேகமாய் அற்றுப் போயிருப்பதையும், பொதுநிலையான விபசாரத்தையும் காண்கிறோம்.

முதலாளித்துவக் குடும்பத்தின் உடன் நிகழ்வு மறையும் போது கூடவே முதலாளித்துவக் குடும்பமும் இயல்பாகவே மறைந்து போகும், மூலதனம் மறையும்போது இரண்டும் மறைந்துவிடும்.

குழந்தைகள் அவர்களுடைய பெற்றோரால் சுரண்டப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறோம் என்று எங்கள் மீது குற்றம் சாட்டுகிறீர்கள்? நாங்கள் இந்தக் குற்றத்தைப் புரிகிறவர்கள்தான், ஒப்புக் கொள்கிறோம்.

ஆனால் வீட்டுக் கல்விக்குப் பதிலாய் நாங்கள் சமூக முறையிலான கல்வியைப் புகுத்தி மனிதர்களிடையிலான உறவுகளிலேயே மிகப் புனிதமானவற்றை நாசமாக்க விரும்புகிறோம் என்பீர்கள்.

உங்களுடைய கல்வி இருக்கிறதே, அது மட்டும் என்னவாம்? அதுவும் சமூக முறையிலான கல்விதானே? எந்தச் சமூக நிலைமைகளில் நீங்கள் கல்வி போதிக்கிறீர்களோ அந்த நிலைமைகளாலும், பள்ளிக்கூடங்கள் மூலமும் இன்ன பிறவற்றின் மூலமும் சமுதாயத்தின் நேரடியான அல்லது மறைமுகமான தலையீட்டாலும் தீர்மானிக்கப்பட்டது தானே அது? கல்வியில்சமுதாயம் தலையிடுதல் என்பது கம்யூனிஸ்டுகளுடைய கண்டுபிடிப்பு அல்ல; இந்தத் தலையீட்டின் இயல்பினை மாற்றவும், ஆளும் வர்க்கத்தினுடைய செல்வாக்கிலிருந்து கல்வியை விடுவிக்கவுமே கம்யூனிஸ்டுகள் முயலுகிறார்கள்.

குடும்பம், கல்வி என்றும், பெற்றோருக்கும் குழந்தைக்குமுள்ள புனித உறவு என்றும்பேசப்படும் முதலாளித்துவப் பகட்டுப் பேச்சுகள் மேலும் மேலும் அருவருக்கத்தக்கனவாகி வருகின்றன; ஏனெனில் நவீனத் தொழில் துறையின் செயலால் பாட்டாளிகளிடையே குடும்பப் பந்தங்கள் மேலும் மேலும் துண்டிக்கப்பட்டு, பாட்டாளிகளது குழந்தைகள் சாதாரண வாணிபச் சரக்குகளாகவும் உழைப்புக் கருவிகளாகவும் மாற்றப்படுகிறார்கள்;

ஆனால் கம்யூனிஸ்டுகளாகிய நீங்கள் பெண்களை எல்லார்க்கும் பொதுவாக்கிவிடுவீர்களே என்று முதலாளித்துவ வர்க்கம் அனைத்துமாய்ச் சேர்ந்து கூக்குரலிடுகிறது.

முதலாளியாய் இருப்பவர் தனது மனைவியை வெறும் உற்பத்திக் கருவியாகவே பாவிக்கிறார். உற்பத்திக் கருவிகள் எல்லார்க்கும் பொதுவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படப் போவதாய்க் கேள்விப்பட்டதும்; உடனே அவர் எல்லார்க்கும் பொதுவாகிவிடும் இதே கதி தான் பெண்களுக்கும் ஏற்படப் போகிறதென்று இயற்கையாகவே முடிவு செய்துகொண்டுவிடுகிறார்.

பெண்கள் வெறும் உற்பத்திக் கருவிகளின் நிலையில் இருத்தப்பட்டிருப்பதை ஒழிக்க வேண்டும். உண்மையில் இது தான் நோக்கம் என்பது அவருக்குக் கனவிலும் கருத முடியாத ஒன்றாகும்.

இருப்பினும், பெண்களைக் கம்யூனிஸ்டுகள் பகிரங்கமாகவும் அதிகார பூர்வமாகவும் எல்லார்க்கும் பொதுவாக்கப் போகிறார்களென நமது முதலாளிமார்கள் புரளி பண்ணி நல்லொழுக்கச் சீலர்களாய் சீற்றம் கொள்கிறார்களே, அதை காட்டிலும் நகைக்கத்தக்கது எதுவும் இருக்க முடியாது. பெண்களை எல்லார்க்கும் பொதுவாக்கும் கைங்கரியத்தைக் கம்யூனிஸ்டுகள் செய்யத் தேவையில்லை, நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே இது செய்யப்பட்டு வருகிறது.

நமது முதலாளிமார்கள் சாதாரண விபசாரிகளிடம் செல்வதைச் சொல்லவே வேண்டாம், அதோடு அவர்கள் தமது பிடியிலுள்ள பாட்டாளிகளது மனைவியரும் பெண்டிரும் போதாமல் தமக்குள் ஒருவர் மனைவியை ஒருவர் வசப்படுத்திக் களவொழுக்கம் கொள்வதில் ஆகப் பெரிய இன்பம் காண்கிறார்கள்.

முதலாளித்துவத் திருமணமானது உண்மையில் மனைவியரைப் பொதுவாக்கிக் கொள்ளும் ஒரு முறையே ஆகும், ஆகவே கள்ளத்தனமாய்த் திரைமறைவில் பெண்களை எல்லார்க்கும் பொதுவாக்கி வைக்கும் முறைக்குப் பதில், ஒளிவுமறைவற்ற சட்டபூர்வ முறையைக் கொண்டுவர விரும்புகிறார்கள் கம்யூனிஸ்டுகள் என்று இவர்கள் கண்டிக்கலாமே தவிர அதிகமாய் ஒன்றும் சொல்வதற்கில்லை. எப்படியும், இன்றைய பொருளுற்பத்தி அமைப்பு ஒழிக்கப்படும் போது, இந்த அமைப்பிலிருந்து எழும் பொதுப் பெண்டிர் முறையும் — அதாவது பகிரங்கப் பொது விபசாரமும் இரகசியத் தனி விபசாரமும் — கூடவே ஒழிந்தே ஆகவேண்டும் என்பது தெளிவு.

*கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையிலிருந்து....*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





இவ்வகையில் ஒரு உட்போராட்டமாக ஆண்-பெண் போராட்டம் தொடர்ந்து வருகிறது. இயற்கையான நிலைகளை அடிப்படையாகக் கொள்ளாமல் திருமணங்களும், ஆண் பெண் இணைதலும் சௌகரியம் போல நடை பெற்றுவந்தன. ஆதிகாலத்தில் இயற்கையாக வளர்ந்த பொதுச் சொத்தின் மீது தனியுடைமை வெற்றி பெற்றிருந்த நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு ஒருதார மணமுறை தோற்றம் பெற்றது. குடும்பத்தில் ஆணின்-ஆட்சி இதற்கேற்ப தனதே எனக் கூறும் குழந்தைகளைப் பெறுவது, தனது சொத்திற்கு வாரிசினை (உரித்துடைய குழந்தைகளைப்) பெறுவது என்பதே ஒருதாரமணத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது. இதனை எங்கல்ஸ் தெளிவாகவும் உறுதியாகவும் குறிப்பிடுகிறார். ஆணினது—குடும்பத் தலைவனது இந்நோக்கம் தவிர திருமணமானது ஒரு சுமையாகவும், தெய்வங்களுக்காகவும் மூதாதையர்களுக்காகவுமே நிறைவேற்றப் படுகிற ஒரு கடமையாகவே பொதுவாக உணரப்பட்டது. அதாவது ஒருதார மணமுறை பெண்களுக்கு மட்டுமே என்று சமூகத்தால் வலியுறுத்தப்பட்டது. இதனை ஆண்கள் பலதார முறையை இன்றும் வெட்கமில்லாமல் தொடர்வதையும்; பெண்களுக்கு இவ்வகையான செயல்பாடு கேவலமாக மதிப்பிடப்படுவதையும் சமூகத்தில் சர்வசாதாரணமாகக் காண முடிகிறது.

குழந்தை பெறுவதற்காக ஆண், பெண்ணிற்கு இடையே இருந்த வேலைப் பிரிவினை தான் முதல் வேலைப் பிரிவினையாகுமென எங்கல்ஸ் குறிப்பிட்டார். அதாவது ஒருதார மணத்தில் ஆணிற்கும் பெண்ணிற்கும் இடையிலான விரோதம், முதல் வர்க்க விரோதமாகிறது. இது பெண்பாலினரை ஆண்பாலினர் ஒடுக்குவதோடு ஒன்று படுகிறது. அடிமை முறையோடும் தனிச் சொத்துடைமையுடனும் சேர்ந்தாற் போல உருவகமாகிய ஒரு தார மணமுறை ஒரு முன்னேற்றத்தையும் சார்பு ரீதியாக ஒரு பின்னடைவையும் கொண்டதாக ஒரு சகாப்தத்தையே தோற்று வித்தது.

நாகரிகம் தோற்றம் பெற்ற காலத்தில் வர்க்கங்களாக பிரிந்த சமுதாயம் விரோதங்களினாலும் முரண்பாடுகளினாலும் இயங்கிக் கொண்டு இவற்றை நிவர்த்தி செய்யவோ அன்றி நிர்மூலமாக்கவோ முடியாமல் திணறியது. இந்த வகையில் ஆண் பெண் இடையிலான சச்சரவுகளை வெளிப்படுத்தும் போது சமுதாய விரோதங்களும் முரண்பாடுகளும் தெரிகின்றதென ஆய்வாளர்களால் முன்வைக்கப் பட்டது.

ஒரு சாரரால் கட்டாயமாக வலியுறுத்தப்பட்ட ஒரு தார மண முறை i) திருமணம் செயல்பாடுள்ளதாக இருக்க வேண்டுமென்றால் இரு தரப்பாரும் சுயேச்சையாக மனமொப்பிச் செய்த ஒப்பந்தமாகவும் ii) மண வாழ்க்கையில் உரிமைகள் கடமைகள் விஷயத்தில் இருதரப்பினரும் சமநிலையில் இருக்க வேண்டுமெனவும் முன் வைக்கப் பட்டது. வெறும் வக்கீல் வாதமாக முன்வைக்கப்பட்ட இக்கருத்தை பற்றி விமர்சிக்கையிலே, 'சட்டத்தால் பூர்ஷவாவும் பாட்டாளியும் உழைப்பு ஒப்பந்தம் செய்து-இரு தரப்பினரும் சுயேச்சையாக மனமொப்பிச் செய்தது போல-நம்பப் படுவது போன்றதே. இவ்விரு தரப்பினரதும் உண்மையான பொருளாதார நிலை பற்றி இச் சட்டம் அக்கறைப் படுவதில்லை. ஆனால் சம நிலையிலிருப்பதாக ஏட்டளவில் நம்பப்படும். முரண்பாடுகள் வெடித்த வண்ணமே காணப்படும்' என அரசியல் ஆய்வாளர்களால் குறிப்பிடப் படுகிறது. எனவே இம் முரண்பாடுகள் இன்றும் இழுபறியுடன் தொடர்வதையும் ஆண் பெண் இடையே மனக்கசப்பை வெளிப் படுத்துவதையும் காணமுடிகிறது.

எனவே, 'ஒரு தார மண முறையானது' யதார்த்தமாக நடைமுறைப் படுத்தப்பட்டாலும் கூட மனித வரலாற்றிலே இது ஒரு உயர்ந்த நிலை வெளிப்பாடாகவே அமைந்தது. எனவே சரியான பொருளாதார நிலைகளுக்கூடான நடைமுறையில் இம்முறை நடைமுறைப் படுத்தப்படும் போது பெண்களுக்கான காலங்காலமாகத் தொடரப் பட்டுவரும் நெருக்கடி ஒரு தீர்வுக்கு வரும். அதாவது ஆணினிடம் சொத்து சேரும் போது இச்சொத்தைக் கொடுக்க சரியான வாரிசினை உருவாக்க அவன் விழைகிறான். இதற்கு பெண் ஒருதார மண முறையிலிருக்க வேண்டுமென நிர்ப்பந்திக்கப் படுகிறான். இதே ஆண்கள் இத்தத்துவம் கண்டு தமக்கும் ஏற்றதான உயர்வான நாகரீகமென எண்ணுவதில்லை. சொத்துரிமை ஆணிடம் வசப்பட்டிருப்பதாலேயே ஆனால் இப்படியாக இருக்கமுடியவில்லை. எனவே, நிரந்தர மரபு வழிச் சொத்தினையும் உற்பத்திச் சாதனங்களையும் சமுதாயச் சொத்தாக மாற்றம் பெறும் போது வாரிசு முறை பற்றிய பிரச்சனை கணிசமான அளவில் குறைந்த பட்சத்திற்கு கொண்டு வரலாம். உற்பத்திச் சாதனங்களை சமுதாயச் சொத்தாக்கி விட்டதோடு கூலி உழைப்பும் பாட்டாளி வர்க்கமும் மறைகின்றன.

எனவே, பெண் விடுதலைக்கான நிபந்தனையாக பொருள் உற்பத்தியுடனான உறவுகள் சமூகமயப்படுத்தப்படும் போது தீர்வாகிறது. அத்துடன் பெண்கள் அனைவரும் பொதுத் தொழிற் துறையில் ஈடுபடுத்தப்படும் போது நவீன குடும்பத்தில் பெண் மீது ஆணுக்குள்ள ஆதிக்கத்தின் அலாதித்தன்மை விலகுவதையும்; இவர்களுக்கிடையிலான உண்மையான சமுதாய சமத்துவம் ஏற்பட வழி சமைக்கிறது. தனிப்பட்ட வீட்டு நிர்வாகம் சமுதாய நிர்வாகமாகப் பரவலாக்கப்பட பொதுச் சிந்தனையையும் மனிதாபிமான முள்ள பரந்த கண்ணோட்டமும் கிடைக்க கூடியதாக அமையும். எல்லாக் குழந்தைகளும் சமமாக சமுதாயத்தால் கவனிக்கப்படும்— இதனால் ஆணினது ஆதிக்க வெறி கணிசமாக ஒழிக்கப்படும். பெண்ணினது நிலைமை அதி உன்னதமாக வளர்ச்சி பெறும். இதனால் யதார்த்தமான சமநிலை சமூகத்தில் ஏற்படும்.

எனவே, வரலாற்று இயங்கியலில் இந்நிலையை எய்துவதற்கான முயற்சிகளையே புரட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமென்பதே இன்றைய காலக் கட்டப் பணியாகும்.

## உலக அரங்கில்

ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா, இந்திரா காந்தி, மார்கிரட் தச்சர்.... என்ற வரிசையில் முன்னுதாரணமாக பெண்கள் பற்றி உன்னதமாகக் குறிப்பிடுவார்கள். இவ்வகையில் எடுபட்ட விமர்சனங்களால் எத்தனையோ பெண்கள் தங்களையும் நாயகிகளாக நினைத்துக் கொண்டு மாதர் சங்கங்களிலும், மாதர் அணிகளிலும் முற்(ன்) போக்கான கருத்துக்களை அள்ளி வீசுவதை அறிந்திருக்கிறோம். தனிமனித கவர்ச்சியின்பால் கனவுகளில் மிதக்க வேண்டி மனித குலத்தை சின்னா பின்னப்படுத்தும் வெளிப்பாடுகளை முதலாளித்துவம் பல வகைகளில் கையாளுவதை புத்திஜீவிகள் சுட்டிக் காட்டுகிறார்கள். சர்வதேசமெங்கிலும் உள்ள பெண்களுக்கான விடுதலைக்காக இவ்வகையான மாதர்கள் எதைச் சாதித்தார்கள் ? என்ற கேள்வி சிந்திக்கும் எவருக்கும் எழவே செய்கிறது. இவர்களெல்லோரும் வர்க்கப் பிரதிநிதிகளாக வெறுமையாக ஆணுக்கு நிகர் பெண் என்பதைக் காட்டும் ஒடுக்குமுறையாளர்களாகவே செயல்பட முடிந்தது' முடிகிறது. இதனை லங்காராணி நாவல் குறிப்பிட்டதுபோல் 'கோழி முட்டை விற்றவன் கோடீஸ்வரன் ஆகிறான், கச்சான் கொட்டை விற்றவன் ஜனாதிபதி ஆகிறான். நீயும் வரலாம் என்று முதலாளி கூறுவான். நீயும் முதலாளியைப் போல வரலாமென முயற்சிப்பாய். உன்னிடமிருக்கும் உழைப்பை அவன் உறிஞ்சுவான்.' என்ற வரிகளோடு ஒப்பிடலாம். வர்க்கப் பிரதிநிதித்துவப் படுத்திய ஒடுக்குமுறையாளர்களால் உண்மையில் பாட்டாளிகளிலுள்ள பெண்களும் போராடும் பெண்களும் நசிவடைந்தனரென்பதே கசப்பான உண்மையாகும். ஆனாலும் பெண்களுக்கானதும் பாட்டாளி வர்க்கத்துக்கானது மான (மனிதகுல மேம்பாட்டுக்கானதுமான) போராட்டங்கள் இருபதாம் நூற்றாண்டுகளில் செழுமையாக நடைபெறவே செய்கிறது. இதில் முற்போக்கான பெண்களின் - புரட்சியாளர்களின் பங்கு வரலாற்றில் இடம் பெறவே செய்கிறது.

தத்துவ வித்தகன் கார்ல் மார்க்ஸ் தனது எழுத்துக்களை முதலில் கலந்துரையாடி திருப்தி அடைய அவரது துணைவியாகிய ஜென்னி; புரட்சிப் புரவலன் லெனினது போராட்டக் காலக் கட்டத்தில் சைபீரியாவில் பணிகளிலீடுபட்ட போது அமைப்பால் உதவியாளராக அனுப்பிவைக்கப்பட்ட குருப்ஸ்காயா வரலாற்றில் தனி இடத்தில் இடம் பெறுகிறார்கள்; இதைவிட நிக்கரகுவா, கியூபா, வியட்நாம், பாலஸ்தீனம் என்ற வகையில் ஈழம்......... என்று, போராட்டக் களங்களில் பெண்களினது பங்களிப்புகள் தொடருகின்றன.

உள்நாடுகளில் இடம் பெறும் போராட்டங்களிலும், நாட்டு விடுதலைக்கான போராட்டங்களிலும், புரட்சிகரப் போராட்டங்களிலும் இன்ன பிற அரசியல், பொருளாதாரப் போராட்டங்களிலும் பெண்கள் களத்தில் இறங்குவதற்கு மேற்படி உதாரணங்கள் கணிசமான உதாரணங்களாக அமைகிறது.

எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு நடவடிக்கைகளும் மக்களிலிருந்து அவர்தம் நலன்களுக்காக வேண்டி செயல் வடிவம் பெறுவது ; மக்களைப் பிரதி பலிக்கும் எம் போராட்டத்தை எச்சக்தியாலும் நசுக்க முடியாது என்ற வகையில் மனதில் சுமந்து புரட்சியாளர்களால் மேற்கொள்ளப்படும் எமது போராட்டம் தனக்கே உரிய பரிமாணத்தை உலக அரங்கில் காட்டிக் கொண்டிருக்கிறது. வரலாற்று ஓட்டத்தில் எமது பணி செவ்வனே நிறைவேற்றப் படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழிலாளர்களுடைய விடுதலையை தொழிலாளர்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் ; அதேபோல் உழைக்கும் பெண்களின் விடுதலையும் உழைக்கும் பெண்களாலேயே ஏற்படவேண்டும். இதற்கான அமைப்பு வேலைத்திட்ட வளர்ச்சிக்கு உழைக்கும் பெண்களே பாடுபட வேண்டும்.

— லெனின், நூல்திரட்டு தொகுதி 39 ; பக்கம் 198-205

எனவே, ஒடுக்குமுறைகளுக்கெதிராக கிளர்ந்தெழும் பெண்களின் மனோவியல் தாக்கங்களையும் நடவடிக்கைகளையும் ஆழமாகக் கவனித்து ஈழவர் இடர்தீர்வதற்கான போராட்டத்தில் பங்கேற்பதற்கு புரட்சியாளர்கள் பங்களிப்பு முக்கியத்துவமடைகிறது.

## என்ன செய்ய வேண்டும் ?

போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும் பெண்களை ஒரு விதமாகப் பார்க்கவும், தனது விமர்சனங்களைச் சித்தரிக்கவும் சமூகம் இயல்பாகவே முற்படுகிறது. போராளிகளுக்கிடையே ஏற்படக்கூடிய தற்செயலான தவறான நடத்தைகளும், இதனால் வெளிப்படும் மோசமான செயல்களும் சிலரை வெறுப்புக் கொள்ளச் செய்கின்றன. இவையெல்லாம் ஆச்சரியப்படுவதொன்றல்ல. நாம் குறைபாடுள்ள சமூகத்திலிருந்துதான் வெளிப்பட்டிருக்கிறோம். எமக்கு பரவலான கண்ணோட்டம் கிடைத்தமையாலேயே போராட்டம் பற்றி தெளிவாக அறிய முடிகிறது ; ஆனால் எமது சமூகத்தில் அங்கம் வகிக்கும் பலர் காலம் காலமாகப் பெற்ற குணதிசயங்களால் உழன்று கொண்டிருக்கிறார்கள். அவர்களது மனவெளிப்பாடானது கேலிகளாகவும், வேறு பலவிதமாகவும் அமைகிறது. இத்தகைய அடாவடித்தனங்களைத் தடுக்கும் உறுதியான மனோதிடமும், தெளிவான சிந்தனையும் கொண்டு நாம் அணிவகுக்க வேண்டும். காத்திரமான பங்களிப்பை சமூகத்திற்கு நாம் செய்வதன் மூலம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு மக்களெழுச்சியால் ''சமதர்ம ஈழம்'' நிதர்சனமாக்கப்படும்போது நியாயமான மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

எனவே, நாம் இவ்வகையான கேலிகளையும் ஏச்சுக்களையும் சகிக்கக் கூடியவர்களாகவும், நாம் எடுத்துள்ள கருத்து ரீதியான போராட்டம் திடமாக உருவகம் பெற உறுதியாகப் பங்களிப்பு செய்ய வேண்டும். நியாயபூர்வமான செயல்களில் நாம் ஈடுபடும்போது போராட்டம் பற்றிய தெளிவை மக்களுக்கு விளங்கப்படுத்தும் போதும் இயல்பாக மக்கள்அணி திரட்டப்படுவார்கள்.

சோவியத் சமுதாயத்தில் பெண்கள் பற்றி லெனின் ஆற்றிய உரையில் **''ஒவ்வொரு உழைக்கும் பெண்ணும் அரசியலில் பங்கெடுத்துக் கொள்வதைச் சாத்தியமாக்குவது நம் கடமை'' எனக் குறிப்பிட்டதை நாம் மனதில் நிலை நிறுத்துவதென்பது சரியானதாக இருக்கும்.**

நம்மவர்களிடையே உழைக்கும் பெண்கள் மலையகத்திலும், ஏனைய ஈழப்பிரதேசமெங்கிலும் காணப்படும் கூலி விவசாய, மீனவ மக்களிடையேயுள்ள பெண்களாகவே இருக்கின்றனர். அடிப்படை பொருளாதாரப் பலவீனமுடைய இவர்களின் அரசியல் வளர்ச்சியென்பது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இதற்கு, இவர்கள் மத்தியில் மிகக்குறைந்த வீதமானவர்களே படித்தவர்களாகவும் படிப்பைத் தொடரக்கூடியவர்களாகவும் இருக்கின்றனர்.

இதுதவிர மிகக்குறைவிலான அளவில் பெண்கள் படித்தவர்களாகவும், பொதுப் பணிகளிலும், உத்தியோகத்திலும் ஈடுபடுபவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே, பெண் பற்றிய அறிவுபூர்வமான எழுச்சியை ஏற்படுத்த புத்திஜீவிகள் காத்திரமாக செயல்படவேண்டியது இன்றைய காலகட்ட அவசியமாகும்.

தற்போது நடைபெறும் போராட்டமானது சகல சுரண்டல்களையும், ஒடுக்குமுறை நிர்ப்பந்தங்களையும் ஒழிப்பதற்கான போராட்டம். எனவே, உழைக்கும் பெண்களுக்கு அரசியல் நடவடிக்கையிலீடுபடுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கப்படவேண்டும். உழைக்கும் பெண்கள் அமைப்பு வேலைத் திட்டங்களில் பங்களிக்க வேண்டியது முதன்மையடைகிறது.

எம்மவர் போராட்டத்தை தொலைநோக்குப் பார்வையுடைய அமைப்பாலேயே சரியான தீர்வுக்குக் கொண்டு வரமுடியுமென்பதும் ; புரட்சிகர இயக்கங்களில் இது நடைமுறைப்படுத்தப்படும் என்பதும் வெளிப்படையாகிறது. இதனாலேயே பெண்கள் புரட்சியாளர்களாக எமது போராட்டத்தில் பங்கெடுப்பதென்பது அவசியமாகிறது. இப்படி சகல துறைகளிலும் ஆண் பெண் வேறுபாடின்றி புரட்சியாளர்களாக போராட்ட நெறிப்படுத்தலில் பங்களிக்க வேண்டும்.

சீர்கெட்டிருக்கும் எமது சமுதாய மக்களின் (அரச நிர்வாகக்குறைபாடுகளால் திணறிக்கொண்டிருக்கும் மக்களை) ஒருமுகப்படுத்திய போராட்ட எழுச்சியை மேற்கொள்ளும் பணிகளில் பெண்களால் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தமுடியும், நம்மவர்களிடம் இவ்வகையான பங்களிப்புகள்வடிவம் பெறத் தொடங்கியுள்ளன. இதனை மதிப்பிடும் புரட்சி இயக்கங்கள் இத்தன்மை விரிவுபட்டு வளர்ச்சி பெற தமது பணிகளை விரைவுபடுத்துகின்றன.

எனவே, இன்றைய சூழலில் தேசிய இன விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்துள்ள வேளையில் முன்னணியில் இருக்கும் சக்திகளை இனம் பிரித்து சாதாரண மக்களின் உண்மையான நலன்களைப் பிரதிபலிக்கும் சரியான சக்திகளுடன் இணைந்து அவற்றின்வேலைத்திட்டங்களைநடைமுறைப் படுத்தப்படுத்துவதன் மூலம் பெண் விடுதலைக்குரிய பாதை விரிவாகவும் தெளிவாகவும் விரைவுபடுத்த முடியுமென்பது வெளிப்படையாகிறது. இவ்வகையான வேலைத்திட்டத்தில் அறிவுபூர்வமாக ஈடுபடவேண்டுமென்பதே உடனடி நடைமுறையாகும்.

ஈழவர் போராட்டத்தில் பல விதங்களிலும் ஒடுக்குமுறைகளுக்குட்பட்டு திண்டாடும் பெண்கள் நியாயமான தீர்வு நோக்கி அணி திரள்வார்கள். இவ்வகையான நடவடிக்கையிலீடுபடும் பெண்கள் போராட்டத்தில் தனது பங்களிப்புகளை நேரடியாக வழங்குகிறார்கள். ஆனால் சமுதாயம் முழுவதிலும் பாதிப்புக்குள்ளாக்கும் ஒடுக்குமுறைக் கெதிராக அனைவரும் ஆரம்பக் கட்டத்தில் கிளர்ந்தெழுவதில்லை. சிந்தனையால் தூண்டப்பட்ட பெண்கள் குறிப்பாக உழைக்கும் பெண்கள் அரசியல்மயப்படுத்தப் படும்போது இவ்வகையான செயற்பாடுகள் காத்திரமான பங்களிப்பைத் தரும் என புரட்சிப்புரவலன் எடுத்துரைத்தான். எம்மவர் போராட்டத்திலும் உழைக்கும்பெண்கள் பங்களிப்பு செய்வதென்பதும் அமைப்பினது விரிவான செயல்திட்டங்களில் ஈடுபடுவதென்பதும் அத்தியாவசியமானதே. இந்தவகையில் பெண்களது அதிகரித்த பாத்திரத்தை போராட்டப்பங்களிப்பில் ஏற்படுத்தவேண்டும்.

இவ்வகையில் அமைப்பு ரீதியில் பெண்கள் செய்யக் கூடிய வேலைகள் அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. பொருளாதார நெருக்கடியினால் பாதிப்புற்றிருக்கும் ஈழவர்களினது பொருளாதார விவசாய கைத்தொழில் மேம்பாட்டுவேலைகளிலும்; உணவு விநியோகத்திலும், மருத்துவ உதவிகளிலும், யுத்தநிலைமைகளிலும், பிரச்சார வேலைகளிலும் ஆக பலதரப்பட்ட வேலைத்திட்டங்களூடாக பங்களிப்புகளை வழங்கமுடியும். அதாவது நிர்வாகத்தில் பெண்கள் பங்கு கொள்வதன் மூலம் பெண்கள் வேகமாக வளர்ச்சி பெறுவார்கள்.

உழைக்கும் பெண் உழைக்கும் ஆணுக்குச்சமமாகவாழவேண்டுமென்பதனையே உயர்ந்த நாகரீகமாக நாம் கருதுகிறோம். இதற்கு உழைக்கும் பெண்கள் சமூகமயப்பட்ட அமைப்புகளிலும் பொதுப் பணிகளிலும் மென்மேலும் அதிகரித்த பாத்திரத்தை வகிக்க வேண்டும். இதற்கு வழிசமைத்துக் கொடுக்க வேண்டியது புரட்சியாளரது கடமையாகும்.

ஒரு நாட்டினது கலாச்சார மட்டத்தை மேம்பாட்டுக்குரியதாக்க, அங்கே காணப்படும் பெண்களுக்குத் தரப்பட்டிருக்கும் அதிகார பூர்வமான உயர்வே நிதர்சனமாக்குமெனக் குறிப்பிடுவார்கள். இக்கூற்றின் உண்மை பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தின் மூலம் சோசலிச அரசை நிர்மாணிப்பதன் வாயிலாகவே நடைமுறையாகும். ஈழவர் போராட்டத்திலும் இது நிரூபணமாகும் காலம் வெகுதூரத்திலில்லை. ●



தேசிய இன விடுதலைக்கான போராட்டம் கூர்மையடைந்திருக்கும் நிலையில், பலவாறான சக்திகள் இப்போராட்டத்தை முன் எடுத்து வருகின்றன. இந்தச் சக்திகள் அனைத்தும் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் இரண்டறக் கலந்து முன்னணியில் நிற்பதன் மூலம், விடுதலைப் பயணத்தைத் துரிதப் படுத்த வேண்டும் என அவாவுகின்றன. இதே வேளையில் இப்போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் சிலர் அனுபவித்த கசப்பான அனுபவங்கள் பெண்களைப் பெருமளவில் பாதிப்பதாயுள்ளதனை உணரக்கூடியதாக உள்ளது. ஆதலினால் சாதாரண மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலித்துப் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை அமைக்கக் கூடிய சக்திகளின் வெற்றியே பெண்களின் விடுதலையையும் நிதர்சனமாக்கும் என்பதை உணர வேண்டும். அதில்லாமல் பெண்களுக்குரிய பிரச்சினைகளை மறுதலித்து தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் கலக்கச் செய்வதோ ; அல்லது தனித்து, மகளிருக்கான ஒரு அமைப்பினூடாக பெண்கள் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்பதோ நடைமுறைக்கு ஒவ்வாததாகவே இருக்கும். (15.06.85 இல் வெளிவந்த பொதுமை இதழிலிருந்து....)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மே தினம்

தர்க்கீகம் இதழ் 6-லிருந்து.

மனித சமுதாயத்தின் மேடுபள்ளங்களையும், ஓட்டை ஒடிசல்களையும் விஞ்ஞானக் கண்கொண்டு நோக்கி, சிந்தித்து, அவற்றின் பொதுவான தன்மைகளைப் புரிந்து, மீண்டும் சமுதாயத்தின்மீது அதனைத் தகுந்தபடி பிரயோகப்படுத்த வேண்டியதே ஒரு புரட்சிவாதியின்—மார்க்சியவாதியின்- தட்டிக் கழிக்க முடியாத கடமையாகும். இதற்கு சமுதாயம் குறித்த விஞ்ஞானக் கண்ணோட்டத்திலும், செயல்முறை அல்லது போராட்டம் பற்றிய அறிவிலும், தடுமாற்றமற்ற தெளிவு அவசியமானது. சமுதாய வளர்ச்சியில் தெளிந்த பார்வை உடைய ஒருவர் போராட்டங்களை வகுக்கும் போது, மேதின வரலாறும் தவிர்க்கமுடியாதபடி படிக்கப்படவேண்டியதாகிறது.

## மேதின உதயம்

1884-1885 ஆண்டிடைகளில் அமெரிக்காவில் ஏற்பட்ட தொழில் சோம்பல் தொழிலாளர்களிடையே பெருமளவில் துன்பம், பசி, வேலையின்மை போன்றவற்றை உற்பத்தி செய்தது. இதனால் தொழிலாளர்களின் உந்துதலால் தொழிற்சங்கங்கள் மீண்டும் விழிப்படைந்தன. அப்போது தொழிலாளர்களிடையே இருக்கவேண்டிய கூட்டமைப்பின் அவசியமும் கூடவே உணரப்பட்டது. இதன் விளைவாக 1884ல் அமெரிக்கா, கனடா போன்ற இடங்களில் உள்ள பல தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய தொழிலாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, சிக்காக்கோ நகரில் அக்டோபர் 7ம் திகதி ஒரு மாநாடும் நடாத்தப்பட்டது. 1886ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி அமெரிக்காவிலும் கனடாவிலும் 8 மணி நேர வேலைக்கு சட்டரீதியான அங்கீகாரம் கோரி ஆர்ப்பாட்டம் நடாத்தவேண்டுமென மாநாட்டில் நிர்மானித்தனர். அத்துடன் மேற்படி கூட்டமைப்பில் அங்கத்துவம் பெறும் ஒவ்வொரு தொழிற் சங்கமும் முடிவு சாதகமாகக் கிடைக்கும் வரை போராட வேண்டுமென்றும், அதற்கேற்ற பணம் முதலான ஆயத்தங்களை முன்கூட்டியே செய்யப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

தொழிலாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் தொழிலாளர்கள் மத்தியில் உற்சாகம் பிறந்திருந்தது. அவர்கள் வேலைநிறுத்தங்களுக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டனர். சில பிற்போக்குச் சக்திகள் இக்கூட்டமைப்பை உடைக்க முயன்றும் அது சாத்தியப்படவில்லை. தொழிலாளர்களிடம் ஒரு நவி வேகப் தென்பட்டது.

திட்டமிட்டபடி தொழிலாளர்கள் 1886-05-01 இல் வேலைநிறுத்தத்திலும், ஆர்ப்பாட்டத்திலும் குதித்தனர். சிக்காக்கோ நியூயோர்க், பால்டிக்மோர், வாஷிங்டன், மில்வாக்கி, சின்சின்னடி, செயின்ட் லூயி, பிஸ்ட்ரிச் போன்ற இடங்களில் சிறப்பாக நடைபெற்றது. இவற்றின் மையநகரமாக சிக்காக்கோவைக் குறிப்பிடலாம். இவ் வேலைநிறுத்தமும், ஆர்ப்பாட்டமும் தொழிலாளர் கூட்டமைப்பினுல் முன்னெடுத்துச் செல்கையில், நடைபெற்ற அனுதாப வேலை நிறுத்தங்களும், உதிரியான தொழிலாளர்களின் பங்கும் மிகவும் குறிப்பிடப்படவேண்டியஅம்சமாகும். தொழிலாளர்களிடையே புரட்சி மனநிலை பூக்கத் தொடங்கியது.

இந்நிலைப்போக்கு அக்டோபர் புரட்சிக்குப் பின் மேதினத்தின் முக்கியத்துவம் வலுவடைந்து இன்று உலகளாவி விரிவுபட்டுள்ளது. இந்நிலையில் ஈழத்திலும் ஈழவர் வரலாற்றில் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் அமைத்து தமது உரிமைகளுக்கான போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கினர்கள். இந்த உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒருமைப்பாடு மேதினத்தின் மூலம் மேலும் மேலும் வலுவடைய வழிவகுத்துள்ளது. ●





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






உடைமை மீட்கும்
போராட்டத்தை ஆதரிப்பீர்
உரிமைகளை மீட்டிடவே
துணை நிற்பீர்!

நூல்கள்
சஞ்சிகைகள்
சிறு வெளியீடுகள்




ஈழப்புரட்சிஅமைப்பு
EELAM REVOLUTIONARY ORGANISATION EROS

Printed in Berlin

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நாம் ஈழவர், நமதுமொழி தமிழ், நம்நாடு ஈழம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்